பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

சுடர் 35 கதிர் 193 வைகாசி 27ஆம் நாள் திங்கட்கிழமை 10 ஜீன் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

Now in JAFFNA
PhD / DBA
Doctor of Business Administration
BLC CAMPUS
0777 174 443
4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 493 6666
E - info@blccampus.edu.lk
www.blccampus.edu.lk

### தனது செயற்பாடுகள், போக்குகளால்

# கொழும்பு அரசு ஐ.நாவையே அர்த்தமற்றதாக ஆக்கிவிடும்!

### கூட்டமைப்புத் தலைவர் இடித்துரைப்பு

கொழும்பு, ஜூன் 10

இலங்கை அரசு ஐ.நாவுக்கும், பன்னாட்டுச் சமூகத்துக்கும் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை, அதனை மதிக்காமல் செயற்படுகின்றது. இது ஐ.நாவுக்கு அபகீர்த்தியான விடயமாகும். மேலும், ஐ.நா. போன்ற அமைப்புக்களின் உருவாக்கத்துக்கான அடிப்படை நோக்கங்களை கேள்விக்குறியாக்கும் செயற்பாடாகும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இடித்துரைத்துள்ளார். 19

## பிறந்து நான்கு நாளான சிசு பரிதாபகரமாக சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 10

பிறந்து நான்கு நாள்களேயான பெண் சிசு நீர் இன்மை காரணமாக மயக்கமுற்ற நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிறிது நேரத்தில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது. 19

## ஒலுமடு விபத்தில் இளைஞன் சாவு



முல்லைத்தீவு, ஜூன் 10

முல்லைத்தீவு ஒலுமடுப் பகுதியில் உந்துருளியில் வேகமாகப் பயணித்த இளைஞன் மின்கம்பத்துடன் மோதுண்டு உயிரிழந்துள்ள 19

### நியாயமான தீர்வில்லையேல்

## நீண்டகால அரசியல் கோரிக்கையை தமிழர் மீள சிந்திக்க நிர்பந்திக்கப்படுவர்

### ஐ.நாவுக்கு சம்பந்தன் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 10

பிளவுபடாத நாட்டுக்குள் நியாயமான அரசியல் தீர்வு தமிழ் மக்களுக்கு கிடைக்காதுவிடின், அவர்கள் தமது நீண்டகால அரசியல் கோரிக்கை தொடர்பில் மீள சிந்திக்கும் நிர்பந்தம் 05

### புலிகளின் காலத்துக்கு முன்னரே

## தமிழ்த் தலைமைகளுடனான ஒப்பந்தங்களை சிங்கள தலைவர்கள் நடைமுறைப்படுத்தவில்லை

### ஐ.நாவிடம் சுட்டிக்காட்டினார் சம்பந்தன்

கொழும்பு, ஜூன் 10

சிங்களத் தலைவர்களான பண்டாரநாயக்க மற்றும் டட்லி சேனாநாயக்க ஆகியோர் தமிழ் மக்களின் தலைவரான செல்வநாயகத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் தமிழீழ விடுதலை புலிகளின் உருவாக்கத்துக்கு முன் இடம்பெற்றவை. சிங்கள தலைவர்கள் அந்த ஒப்பந்தங்களை 19

## கடும் பாதுகாப்புடன் வந்து சென்ற மோடி

*கொழும்பில் நேற்று எட்டு அடுக்குப் பாதுகாப்பு*

கொழும்பு, ஜூன் 10

கொழும்பை நேற்றுக் காலை 11.20 மணியளவில் வந்தடைந்த இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடிக்கு உச்சக்கட்ட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் தலைமையில் சிறப்புப் பாதுகாப்புப் பிரிவு 19



## 8 நிமிடச் சந்திப்பைத் தொடர்ந்து இந்தியாவில் விரிவான பேச்சு

### கூட்டமைப்பின் கோரிக்கையை ஏற்றார் மோடி

யாழ்ப்பாணம், ஜூன் 10

அரசியல் தீர்வு பற்றி விரிவாக இந்தியாவில் கலந்துரையாடவேண்டும் என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் விடுத்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்டார் இந்தியத் தலைமை அமைச்சர் 05



## தீவிரவாதத்தை கூட்டாக நாம் எதிர்கொள்வோம்

*இந்தியா – இலங்கை இணக்கம்* 19



## 3ஆவது தடவையும் வெல்வீர்கள் மோடிக்கு சம்பந்தன் வாழ்த்து! 05

## மகிந்தவை டில்லிக்கு வருமாறு அழைப்பு



19

### மைத்திரி, ரணிலுக்கு

## புதிய அரசமைப்பை நிறைவேற்றும் துணிவில்லை

### சுமந்திரன் குற்றச்சாட்டு

(விரிவு பக்:14)

## கல்குவாரி கிடங்கில் மூழ்கி இருவர் சாவு

### வவுனியாவில் பெரும் சோகம்

வவுனியா, ஜூன் 10

வவுனியா பம்பைமடு கல்குவாரியாக பயன்படுத்தப்பட்ட இடத்தில் தேங்கியிருந்த நீரில் மூழ்கி இரண்டு மாணவர்கள் உயிரிழந்துள்ளனர். அவர்களின் 19



# கொட்டும் மழைக்குள் மோடிக்கு வரவேற்பு

கொழும்பு, ஜூன் 10
இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியை கொட்டும் மழைக்கு மத்தியில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வரவேற்றார்.

இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி குறுகிய நேரப் பயணம் ஒன்றை மேற்கொண்டு முற்பகல் 11.20 மணியளவில் கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் சிறப்பு பி.737 வானூர்தியில் வந்திறங்கினார். அவரைத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க வரவேற்றார்.



அதையடுத்து, மோட்டார் வாகனப் பவனியாக கொழும்புக்கு மோடி சென்றார். பயணிக்கும் வழியில் தலைமை அமைச்சருடன் ஒரே வாகனத்தில் பயணம் செய்யும் போது தனியாக பேச்சுக்களை நடத்தினார். கொச்சிக்கடை அந்தோனியார் ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளை நடத்தினார்.

அதன் பின்னர் அரச தலைவர் செயலகத்துக்கு தலைமை அமைச்சர் மோடி சென்றார். செங்கம்பள வரவேற்புடன் இராணுவ அணி வகுப்பு மரியாதை வழங்கப்பட்டது. கடும் மழை பெய்து கொண்டிருந்தது. இந்தியத் தலைமை அமைச்சரை குடையுடன் வரவேற்று அழைத்துச் சென்றார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன. இதையடுத்து, மதிய விருந்து மற்றும் இருதரப்பு பேச்சுக்கள் நடத்தப்பட்டன.

இதன் பின்னர் இந்தியத் தூதுவரின் இந்திய இல்லத்துக்கு மோடி சென்றார். அங்கு எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைச் சந்தித்தார். அதன் பின்பு இலங்கை வாழ் இந்தியர்களை சந்தித்துக் கலந்துரையாடினார்.

சந்திப்புக்களை முடித்துக் கொண்டு மீண்டும் கட்டுநாயக்கா வானூர்தி நிலையத்துக்கு, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுடன் மோடி பயணமானார். மாலை 4.15 மணியளவில் இலங்கையிலிருந்து இந்தியத் தலைமை அமைச்சர் புறப்பட்டுச் சென்றார்.

இந்தியத் தலைமை அமைச்சருடன் 59 பேர் கொண்ட குழுவினரும் இலங்கை வந்தடைந்தனர். இந்தியத் தலைமை அமைச்சரின் பாதுகாப்பு மற்றும் மாற்றுப் பயன்பாட்டுக்காக, மற்றொரு பி737 வானூர்தியும் கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் வந்திறங்கியது. (ஒ.5)







## மோடிக்கு புத்தரை கையளித்த மைத்திரி

கொழும்பு, ஜூன் 10
இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடிக்கு, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, சமாதி நிலை புத்தர் சிலை ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இந்தப் புத்தர் நிலை வெண்தேக்கு மரத்தில், கையால் செதுக்கப்பட்டதாகும். இதனைச் செதுக்க இரண்டு ஆண்டுகள் பிடித்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தியான முத்திரை என அழைக்கப்படும், யோக நிலையில் புத்தர் அமர்ந்திருக்கும் வகையில் இந்த புத்தர் சிலை செதுக்கப்பட்டுள்ளது.

இந்தப் புத்தர் சிலை, ஒரு சிறப்பு நண்பரிடம் இருந்து கிடைத்த சிறப்பு பரிசு என்று இந்தியத் தலைமை அமைச்சர் மோடி தெரிவித்துள்ளார். (ஒ.5)



## தமிழ் மொழியை புறக்கணித்து மோடி நட்ட பெயர்ப் பலகை

அரச தலைவர் செயலகத்தில் இந்திய தலைமை அமைச்சர் நரேந்திர மோடி மரக்கன்று ஒன்றை நட்டுவைத்தார். இதைத் தொடர்ந்து அந்த மரக்கன்றுக்கான பெயர் பலகையையும் அந்த இடத்தில் மோடி நட்டார். பெயர்ப்பலகையில் ஆங்கிலம், சிங்கள மொழிகளே காணப்பட்டன. தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டிருந்தது. இந்திய நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் சுற்றுப் பயணத்தை மேற்கொண்ட இந்திய தலைமை அமைச்சர் நரேந்திர மோடி, இலங்கைக்கு நேற்று வந்தார்.

அரச தலைவர் செயலகத்தின் முன்னால் மரக்கன்று ஒன்றையும் மோடி நட்டுவைத்தார். அந்த மரக்கன்றின் பெயர் அசோகா. மரக்கன்று நடுகையைத் தொடர்ந்து அதற்கான பெயர்ப் பலகையையும் நட்டார். அதில் ஆங்கிலம், சிங்கள மொழிகளே பொறிக்கப்பட்டிருந்தன. தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, மரம்நடுகை செய்யப்பட்ட இடத்தைச் சுற்றி தாமரை மலர்கள் வைக்கப்பட்டிருந்தன. இந்திய தலைமை அமைச்சர் நரேந்திர மோடியின் பாரதிய ஜனதாக் கட்சியின் சின்னம் தாமரைப் பூ என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5,21)





## கொச்சிக்கடை அந்தோனியாரை நேரில் சென்று வழிபட்டார் மோடி

கொழும்பு, ஜூன் 10
இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோ்டி கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயத்துக்குச் சென்று, குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.


கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் இருந்து, புனித அந்தோனியார் தேவாலயத்துக்கு தலைமை அமைச்சருடன் சென்றிருந்த இந்தியத் தலைமை அமைச்சர் அங்கு இறந்தவர்களின் நினைவாக மலர் செண்டு ஒன்றை வைத்து வணங்கினார்.

இந்த நிகழ்வில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், இந்தியத் தூதுவர் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டனர்.

இங்கு கருத்து வெளியிட்ட மோடி, இலங்கை மீண்டும் எழுச்சி பெறும் என்று தாம் நம்புவதாக தெரிவித்தார்.

தீவிரவாதத்தின் பயங்கரச் செயல்களால், இலங்கையின் ஆன்மாவைத் தோற்கடிக்க முடியாது. இலங்கை மக்களுடன், இந்தியா, ஒற்றுமையாக நிற்கிறது, என்றும் அவர் கூறினார். (ஒ.5)

# தெரியாததை செய்தால்...?



ஓர் அழகிய கிராமம். அந்தக் கிராமத்துக்கு வெளியே பெரிய ஏரி ஒன்று இருந்தது. ஏரியின் கரைகளில் பழ மரங்கள். அவற்றுள் குரங்குகள் கிளைக்குக் கிளை தாவி பழங்களைப் பறித்துத் தின்று தங்கள் காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தன.
அந்தக் குரங்குகளில் குட்டிக் குரங்கு ஒன்றும் இருந்தது. போவோர் வருவோர் என அனைத்துப் பேருடன் அதனுடைய சேட்டை அதிகமாக இருந்தது.
ஒருநாள் மீனவன் ஒருவன், அந்த ஏரிக்கு வந்து மீன் பிடிக்க வலையை வீசினான். நிறைய மீன்கள் வலையில் சிக்கின. அவற்றையெல்லாம் எடுத்துக் கொண்டு, வலை ஈரமாய் இருந்ததால் கரையில் அதைக் காயப் போட்டு விட்டுச் சென்றான்.
அந்தக் குட்டிக் குரங்கு அவன் செய்வதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தது. அவன் சென்றதும், அவன் உலர்த்திச் சென்ற அவ்வலையின் மையத்தில் அமர்ந்துக் கொண்டு வலையை எடுத்து ஏரியில் வீசப் பார்த்தது.
ஆனால், வலை இறுகி அதன் மையத்தில் அமர்ந்து கொண்டிருந்த குரங்குக் குட்டி வலையில் வசமாக சிக்கிக் கொண்டது. பயத்தால் அலற ஆரம்பித்தது. மற்ற குரங்குகள் வந்து அதைக் காப்பாற்றப் பார்த்தன. ஆனால் அது நைலோன் வலையானதால் அவற்றால் அதைக் கடிப்பது கூட சிரமமாய் இருந்தது. அப்போது வலையை எடுத்துப் போக மீனவன் வந்தான்.
குரங்கு மாட்டிக் கொண்டு அவதிப்படுவதைக் கண்டு வருந்தி, அதை விடுவித்தான். பின் குட்டியிடமும், மற்ற குரங்குகளிடமும், "தெரியாத காரியங்களில் ஈடுபட்டால் இப்படித்தான் அவதிப்பட நேரிடும். எந்தத் தொழிலில் ஈடுபட்டாலும்.. அதைப் பற்றி தெரிந்துக் கொண்டு ஈடுபட வேண்டும். அப்போதுதான் நாம் வெற்றி பெற முடியும்" என்று அறிவுரை சொன்னான்.

# விளையாடு...



ஓடி விளையாடும் போது வாழ்க்கைப் பாடம் எமக்குப் புரியும்
ஒவ்வொரு மனிதருள்ளும் ஒளிந்திருக்கும் குணங்கள் தெரியும்
கூடி விளையாடும் போது கோபம் என்ற நோய் விலகும்
கொண்டாடும் விதத்தில் அங்கே தோல்விக்கும் இடமிருக்கும்

தேடி நண்பன் வரும் வேளையில் ஒளிந்து விளையாடும் போது
திடமாக மனதினுள்ளே துணிவு என்ற குணம் பிறக்கும்
பாடிச் சென்று கபடியிலே பிறரை தொட்டு திரும்பும் போது
பாய்ந்து சென்றால் ஜெயித்திடலாம் என்ற பாதை எமக்குப் புரியும்

மூடி வைத்த மணலுக்குள்ளே புதைத்த பொருள் எடுத்தும் போது
முயற்சியினால் வென்றிடலாம் என்பதுவும் எமக்குப் புரியும்
வேடிக்கைதான் விளையாடும் வேளையிலும் கவனமாக
விழிப்புடனே இருப்பதற்கும் விளையாட்டே துணைபுரியும்

வாடிடாத உடல்வளரும் வலிமையுடன் பலம் பெருகும்
வந்து ஆடிப்பாடும் போது நட்பு எனும் பூ மலரும்
விலை கொடுத்து வாங்க முடியாத மகிழ்ச்சி
விளையாட்டு கொண்டு வந்து கொடுக்கும்!

# பழமொழிகள்

மூத்தோர் சொல்
வார்த்தை அமிர்தம்.

கண்டது கற்கப்
பண்டிதன் ஆவான்.


தலைக்கு வந்தது
தலைப்பாகையோடு
போயிற்று.

நடப்பது எல்லாம்
நன்மைக்கே!


சட்டியில் இருந்தால்
அகப்பையில் வரும்!

கற்றது கைமண்ணளவு
கல்லாதது உலகளவு!

காற்றுள்ள போதே
தூற்றிக்கொள்!



# வழி காட்டுவோம்



# பஞ்சதந்திரத்தில் சில கருத்துகள்



- பணத்தைச் சேர்ப்பதிலும் துன்பம்; சேர்த்த பணத்தைக் காப்பதிலும் துன்பம்; அதை இழந்து விட்டாலும் துன்பம்; செலவிட்டு விட்டாலும் துன்பம். பணத்தால் எப்போதும் துன்பமே உண்டாகிறது.
- செல்வம் சேர்ந்தவனிடம் அகம்பாவம் சேரும். உணர்ச்சி வசப்படுபவன் ஆபத்தில் சிக்கிக் கொள்வான்.
- தன்னிடம் குவிந்த செல்வத்தை, தானும் அனுபவிக்காமல், நற்காரியங்களுக்கும் செலவிடாமல் இருப்பவன் சுகம் பெற மாட்டான். அவன் பணம் படைத்த முட்டாள்.
- பலசாலிக்குப் பாரம் என்று ஒன்று இல்லை; முயற்சி உடையவர்களுக்கு தூரம் என ஒன்று இல்லை; கல்வியாளர்களுக்கு அந்நிய நாடு என ஒன்று இல்லை; அன்போடு பேசுபவர்களுக்கு அந்நியன் என ஒருவரும் இல்லை.
- நெருக்கடி இல்லாத சாதாரண காலத்தில் எல்லோரும் அறிவாளிகளாக இருக்க முடியும்.
- **அரசனின் அருகில் இருந்து ஊழியம் செய்பவன், நல்ல குடும்பத்தில் பிறக்காதவனாகவோ, மூடனாகவோ, கருணை இல்லாதவனாகவோ இருந்தாலும் அவனை எல்லோரும் மதிக்கிறார்கள்.**

# சிறிமாவோ பண்டாரநாயக்கா



1. இவர் இலங்கையின் ஓர் அரசியல்வாதியாவார்.
2. இவர் இலங்கையின் பிரதம மந்திரியாக மூன்று முறை, 1960-1965, 1970-1977 மற்றும் 1994-2000 ஆகிய காலப்பகுதிகளில் பதவியில் இருந்தவர்.
3. இவரே உலகிலேயே முதலாவது பெண் பிரதமருமாவார்.
4. இலங்கை சுதந்திரக் கட்சியின் தலைவராக இருந்தவர்.
5. இவரது கணவர் மறைந்த முன்னாள் இலங்கை பிரதமர் சொலமன் பண்டாரநாயக்கா.
6. மகள் சந்திரிக்கா பண்டாரநாயக்கா இலங்கையின் நான்காவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவராக இருந்தவர்.
7. இவர் பெண்களின் அரசியல் முன்னோடிகளைத் திறந்தார்.
8. திருமதி பண்டாரநாயக்க, ஏப்ரல் 17, 1916 அன்று இலங்கையின் உயர்ந்த மலைகளில் சிங்களவர்களின் செல்வந்தர் வீட்டில் பிறந்தார்.
9. கொழும்பிலுள்ள புனித பிரிட் சர்ச் பெண்கள் பள்ளியில் பட்டம் பெற்றார்.
10. குடும்ப சூழலின் செல்வாக்குக் காரணமாக, அவர் ஒரு குழந்தை என்பதால் அரசியல் மற்றும் சமூக வேலைகளில் ஆர்வமாக உள்ளார்.
11. சாலமன் பண்டாரநாயக்கவைத் திருமணம் செய்துகொண்டார்.
12. திருமணத்துக்குப் பிறகு இரண்டு பெண்கள் மற்றும் ஒரு மகன் உள்ளனர்.
13. திருமதி பண்டாரநாயக்க தனது திருமண்த்துக்குப் பின்னர் சமூக மற்றும் அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பித்ததோடு படிப்படியாக அரசியல் திறமைகளை வெளிப்படுத்தினார்.

# மரண அறிவித்தல்

## பாலசிங்கம் செல்லையா



பிறப்பு 01.07.1946 இறப்பு 08.06.2019

யாழ்.அரியாலையைப் பிறப்பிடமாகவும் Scarborough, Ontario, கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் செல்லையா 08.06.2019 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முத்துக் கிருஸ்ணபிள்ளை - கிருஸ்ணலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும், தங்கலட்சுமியின் அன்புக் கணவரும், சுஜாதா, கனிஸ் (Kanish), முரளி (Muraly), சதீஷ் (Sathees), பாலராஜ் (Raja) ஆகியோரின் அன்புத் தந்தையும், வனசாட்சி (லண்டன்), காலஞ்சென்ற பத்மாவதி, நீலதாட்சி (சரசு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ராஜகுமாரன், சுஜா, பொன்சலா, பிரமிளா, நிசா ஆகியோரின் அன்பு மாமனாரும், தேவராஜா (லண்டன்), குமாரசாமி (கனடா), கணேசராஜா (லண்டன்), சரோஜினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், தீபன் (Stephen), பிருந்தா, நிவிதா, ஐஸ்கா, மேஹா, ஈத்தன், அலேனா, கேலன் ஆகியோரின் அன்புப் பேரனும், மாலா, தேவா, ராசன், சுபா, கௌரி, பிரேம்குமார் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.06.2019 வியாழக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

கனிஸ் (Kanish) - +14165252001 (கனடா),
முரளி (Muraly) -+141 693 99768 (கனடா) ,
சதீஷ் (Sathess) - + 143 722 97437 ( கனடா),
பாலராஜ் (Raja) - + 141 647 15174 (கனடா)

# மரண அறிவித்தல்

## திருமதி நகுலேஸ்வரி தியாகராசா



பிறப்பு 19.07.1937 இறப்பு 07.06.2019

நாரந்தனை வடக்கை பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணை சிவன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நகுலேஸ்வரி தியாகராசா 07.06.2019 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தியாகராசாவின் (பெரியதம்பி) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராஜதுரை, சிவபாக்கியம், குலநாயகம் மற்றும் தயாநிதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தியாகேஸ்வரி (இலங்கை), விஜயகுமார் (கனடா), ஜெயக்குமார் (இலங்கை), சிவானந்தகுமார் (சுவிஸ்), யோகேஸ்வரி (சுவிஸ்), வசந்தகுமார் (லண்டன்), காலஞ்சென்ற உதயகுமார் ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற சிவராசா - மற்றும் சின்னம்மா, காலஞ்சென்ற நாகராசா -மற்றும் கமலாதேவி, தர்மவதி- காலஞ்சென்ற நடராசா மற்றும் புனிதவதி, காலஞ்சென்ற இராசலிங்கம் மற்றும் கமலாதேவி, தணிகாசலம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், கைலாயநாதன், சாந்தினி (கனடா), கலைச்செல்வி (இலங்கை), ரூபவதி (சுவிஸ்), மனோகரன் (சுவிஸ்), துஷ்யந்தி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், யதுகுலன், தர்சிகன், லக்சிகன், விதுசா, நிரோசன், கம்சாயினி, கல்பனா, டிசாயினி, ஜெயசீலன், கேசினி, அபித், அபிசேக், பிரணவன், அபர்னா, எழில்வேந்தன், கோபிநாத் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அபிசனாவின் பூட்டியும் பெறமக்களின் தாயாரும் மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 08.06.2019 சனிக்கிழமை, 09.06.2019 ஞாயிற்றுக் கிழமை இல. 84, சிவன் வீதி, யாழ்ப்பாணத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (10.06.2019) திங்கட்கிழமை அவரது நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை இல்லத்துக்கு காலை 8.30 மணியளவில் எடுத்துச்செல்லப்பட்டு இறுதிக்கிரியைகள் நடைபெற்று பின்னர் தகனக்கிரியைக்காக பிற்பகல் ஒரு மணியளவில் நாரந்தனை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**84, சிவன் வடக்கு வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(cs.25902) (13.17)

**தகவல்: குடும்பத்தினர்**

076 852 8207- வாசன், 077 401 6459- ஜெயா,
021 222 0390 - வீடு, 077 321 2199 - மனோ








# இந்திய தலைமை அமைச்சர் இலங்கை பயணம்

## 8 நிமிடச்...

நரேந்திர மோடி. இந்தியத் தலைமை அமைச்சருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினருக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு நேற்றுப் பிற்பகல் கொழும்பில் நடைபெற்றது.

இந்தியன் இல்லத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், த.சித்தார்த்தன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்புக்கு 15 நிமிடங்கள் இந்தியத் தூதரகத்தால் ஒதுக்கப்பட்டிருந்தன. எனினும், திட்டமிட்டதைவிட குறைவான நேரமே இந்தச் சந்திப்பு நடந்தது. இந்தச் சந்திப்புக்கு முன்னதாக நடைபெற்ற மகிந்த அணியுடனான சந்திப்பு சற்று நேரம் அதிகமாக இடம்பெற்றதால், கூட்டமைப்புடனான சந்திப்பு 8 நிமிடங்கள் வரையிலேயே இடம்பெற்றது.

சந்திப்பின் ஆரம்பத்தில், இரண்டாவது முறையாகவும் இந்தியாவின் தலைமை அமைச்சராகப் பதவியேற்றமைக்காக நரேந்திர மோடிக்கு இரா.சம்பந்தனும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் வாழ்த்துத் தெரிவித்தனர். இதை மகிழ்ச்சியாக ஏற்றுக்கொண்டார் மோடி.

இதனையடுத்து தமிழ்பேசும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அரசியல் தீர்வு விடயம் தொடர்பில் பேச்சு நடத்தப்பட்டன.

'இலங்கை சுதந்திரம் அடைந்து 70 வருடங்கள் நிறைவடைந்துவிட்டன. ஆனால், சுதந்திரத்துக்குப் பின்னரான அரசமைப்புகள் தமிழ் மக்களுக்கு எதிராகவே அமைந்துள்ளன. இலங்கையில் தமிழர்கள் சம அந்தஸ்தில் வாழ வேண்டும். இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாக உருவாக்கப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டம் போதாதது. இதனை இந்தியாவும் ஏற்றுக் கொண்டுள்ளது. பிளவுபடாத ஒன்றுபட்ட நாட்டுக்குள் எமக்கு ஒரு நிரந்தர அரசியல் தீர்வு வேண்டும். இது தொடர்பில் இந்திய நடுவண் அரசு ஆகக்கூடிய கரிசனை எடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டும். தீர்வு முயற்சியில் இலங்கை அரசு காலத்தை இழுத்தடிக்க இனியும் அனுமதிக்க முடியாது' என்று இரா.சம்பந்தன் இதன்போது தெரிவித்தார்.

அவரின் கருத்துக்களை மிகக் கூர்மையாகக் கேட்டுக் கொண்டிருந்த மோடி, 'இது பற்றி என்னிடம் ஏற்கனவே சொல்லியிருக்கின்றீர்கள். இது தொடர்பில் நாம் விரிவாகப் பேச வேண்டும்' என்றார்.

இதன் போது கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இந்தியாவுக்கு வந்து விலாவாரியாகப் பேசுவதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறு கோரினார். அவரது கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நரேந்திர மோடி அதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு தனது அதிகாரிகளுக்கு உடனடியாகவே பணித்தார்.

இந்தச் சந்திப்பின்போது, பலாலி வானூர்தி நிலையத்தினூடாக இந்தியாவுக்கான வானூதி சேவைகளை முதலில் ஆரம்பிக்க வேண்டும் எனக் கூட்டமைப்பினர் கேட்டுக்கொண்டனர். இது தொடர்பில் கடந்த தடவை நடைபெற்ற சந்திப்பின்போது பேசப்பட்ட விடயத்தையும் கூட்டமைப்பினர் ஞாபகப்படுத்தினர். இதைச் செவிமடுத்த மோடி, இதில் கவனம் செலுத்தும்படி இந்தியத் தூதரக அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

சந்திப்பின் இறுதியில், என்றும் நாம் உங்களுக்குத் தோள் கொடுப்போம். இந்தியா வாருங்கள். எல்லா விடயங்களையும் விரிவாகப் பேசுவோம்' என்று மோடி தெரிவித்தார். (ஒ.5,105,22)

## 3ஆவது...

யாழ்ப்பாணம், ஜூன் 10

நீங்கள் மூன்றாவது தடவையாகவும் இந்தியாவின் தலைமை அமைச்சராகத் தெரிவு செய்யப்படுவீர்கள் என்று, இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியிடம் தெரிவித்தார், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியை இந்தியன் இல்லத்தில் கூட்டமைப்பினர் சந்தித்தனர். இதன் போது, சம்பந்தன் கைலாகு கொடுக்கும்போது, இந்தியத் தலைமை அமைச்சர் மோடி, நீங்கள் நல்லதேக ஆரோக்கியத்துடன் இருக்கின்றீர்கள் என்று கூறினார். அதற்கு சம்பந்தன், நீங்கள் மிகச் சிறப்பான வெற்றியைப் பெற்றுள்ளீர்கள். மூன்றாவது தடவையாகவும் வெற்றி பெறுவீர்கள் என்று கூறியுள்ளார். மோடி பதிலுக்கு புன்னகைத்துள்ளார். (ஒ.5)

## நீண்டகால...

ஏற்படும் என்று இரா.சம்பந்தன் எச்சரித்துள்ளார். தமிழர்களின் தனி நாட்டுக்கான தமிழீழத்துக்கான கோரிக்கையையே, நீண்டகால அரசியல் கோரிக்கை என்று இரா.சம்பந்தன் சுட்டிக்காட்டியுள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

ஐ.நா. சபையின் உதவி செயலர் மிசேல் கோனின்சஸை சந்தித்த போதே இரா.சம்பந்தன் இவ்வாறு எச்சரித்துள்ளார்.

'நாங்கள் பிரிவுபடாத பிரிக்க முடியாத ஒன்றிணைந்த இலங்கை தீவுக்குள் ஒரு நியாயமான அரசியல் தீர்வை எதிர்பார்க்கின்றோம். இந்த தீர்வை எமக்கு விரைவில் வழங்காத சந்தர்ப்பத்தில் 'எமது மக்கள் தமது நீண்டகால அரசியல் கோரிக்கைகள் தொடர்பில் மீள சிந்திக்க நிர்பந்திக்கப்படுவார்கள்' என்று எடுத்துரைத்துள்ளார்.

1977ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானத்துக்கு, தனி நாட்டுக்கான தீர்மானத்துக்கு தமிழ் மக்கள் பேராதரவை வழங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5)


5 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
கந்தசாமி சேதுரட்ணம்
(ஸ்ரான்லி)
திதி:- அட்டமி
உயிருக்கு உயிராக இருந்து
எமைக்காத்த எமது அப்பாவே
ஐந்து ஆண்டுகள் ஆனாலும்
ஆறவில்லை எங்கள் துயரம் அப்பா
உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்
என்றும் உங்கள் நினைவில்.
தோற்றம் 22.06.1970
மறைவு 06.06.2014
மனைவி, பிள்ளைகள்.
ஆவரங்கால் கிழக்கு, புத்தூர்.

4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 28 . 05 . 1926



மறைவு 10 . 06 . 2015

கதிர்காமு சின்னத்துரை (தமிழரசு)
(இலங்கை தமிழ் அரசுக்கட்சியின் முக்கிய தலைவர்களில்
ஒருவரும், சமூகசேவையாளரும்)
குடும்பத்தினர்.

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 10 . 09 . 1944



உதிர்வு 11 . 05 . 2019

புத்தூர் நவக்கிரியை பிறப்பிடமாகவும் சாவகச்சேரி. நுணாவில் கிழக்கு.
ஆடியம் பிட்டி ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட
எமது அன்புத் தாய்

திருமதி நவரத்தினராசா இந்திராணி

அவர்களின் திடீர் மரணச் செய்தி கேட்டு நேரடியாகவும் தொலைபேசி மற்றும் சமூகவலைத்தளங்கள் ஊடாகவும் அனுதாபம் தெரிவித்தோருக் கும், கண்ணீர் அஞ்சலியை பிரசுரித்தோருக்கும், கண்ணீர அஞ்சலி உரை நிகழ்த்தியோருக்கும், எமது துயரில் பங்கேற்று பல்வேறு வழிகளில் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (10.06.2019) திங்கட் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும். இந் நிகழ்வில் தாங்களும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொண்டு எமது தாயின் ஆன்ம ஈடேற்றத்திற்கு பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.09, ஆடியம்பிட்டி ஒழுங்கை,
சாவகச்சேரி.
(CS 25918)(14.1/7)
குடும்பத்தினர்.

வாடகைக்குத் தேவை
வியாபார நடவடிக்கைக்கு ஏற்ற சுப்பர்
ஏசி அல்லது படி ரக வாகனம் மாதாந்த
வாடகைக்குத் தேவை.
சாரதி தேவை இல்லை
தொடர்புகளுக்கு: 0770451295

Personal Class
தனியார் குழு வா
தரம் 03 முதல் O/L வரையான
மாணவர்களுக்கு அனைத்து பாடங்களும் &
A/L மாணவர்களுக்கு பௌதீகவியல்.
இரசாயனவியல். பொருளியல். வணிகக்கல்வி
உட்பட அனைத்து பாடங்களும் வீடுகளில்
வந்து கற்பிக்கப்படும்.
076 033 4051

உளமார பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது கல்லூரியில்
பிரதி அதிபராக கடமையாற்றும்
இரத்தினசிங்கம் கோகுலன் J.P
(HNDA,PGDE,MED,SLPS-III)
அவர்கள் கடந்த 30.05.2019 அன்று
யாழ். மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி
பிறேம்சங்கர் முன்னிலையில்
அகில இலங்கை சமாதான நீதவானாக
சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.
அவரைப் பல்லாண்டு காலம் வாழ உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி
அச்சுவேலி.
Best Wishes

## மரண அறிவித்தல்கள்



### திருமதி செல்வபூரணம் பசுபதி

கொடுக்குளாய் ஆழியவளையைப் பிறப்பிடமாகவும் இல.65, ஐயனார் வீதி, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. செல்வபூரணம் பசுபதி 08.06.2019 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பசுபதியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பிள்ளையினார்-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், பவானந்தன் (கணக்காளர்-லண்டன்), தயானந்தன் (இலங்கை நிர்வாக சேவை பயிலுனர்) சிவானந்தன் (விரிவுரையாளர், கல்விப் பீடம், கொழும்பு பல்கலைக் கழகம்) நளினி (ஆசிரியை, யா/சென்.தோமஸ் றோ.க.த.க பாடசாலை, பருத்தித்துறை) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற வடிவேலு மற்றும் இராசரத்தினம், காலஞ்சென்ற சிவசம்பு மற்றும் இராசமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சாந்தி, தயாளினி, கிருஷ்ணகுமாரி ஆகியோரின் அன்பு மாமியும், மகிஷா, லகிஷா, ஆருஷன், அபிஷா மற்றும் கிருஷிகன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2019) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மாலை 3.00 மணியளவில் சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.65, 1ம் ஒழுங்கை,**
**ஐயனார் வீதி, பருத்தித்துறை,**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**Tel: 021 226 0358, 077 978 9387, 077 377 4206**

24 மணி நேரமும் உடனுக்குடன்
செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

## மரண அறிவித்தல்கள்



மண்ணில் 15.01.1933 விண்ணில் 09.06.2019

### திருமதி இலட்சுமி தம்பையா

நாயன்மார்கட்டை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இலட்சுமி தம்பையா 09.06.2019 ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம்-அன்னமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற அப்பாக்குட்டி தம்பையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சண்முகநாதன், நாகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற நாகநாதர், அன்னலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும், உதயணன் (ஜேர்மனி), உதயகுமாரி, உதய சௌந்தரி (கனடா), உதயேந்திரன் (சுவிஸ்லாந்து), உதயேஸ்வரி (ஆசிரியர், யா/புனித சாள்ஸ் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், மங்களேஸ்வரி (ஜேர்மன்), உதயமூர்த்தி (ஓய்வுபெற்ற இலங்கை வங்கி உத்தியோகத்தர்), குருபரன், சிவமலர்(சுவிஸ்லாந்து), நிமலன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தித் திணைக்களம், வடமாகாணம்) ஆகியோரின் அன்பு மாமியும், உஷாந்தன் (வைத்திய உத்தியோகத்தர், சுவிஸ்லாந்து), மதுரன் (ஜேர்மனி), பவுத்தியா (ஜேர்மனி), யுகேஸ் (பிரான்ஸ்), தனுஷா, லக்ஷ்மி (கனடா), லக்ஷ்மன் (கனடா), சங்கவி (தாதிய உத்தியோகத்தர், கனடா), ருசாந்தன் (சுவிஸ்லாந்து), கோபிகன் (சுவிஸ்லாந்து), கவிஷா, நிதர்சனா (பிரான்ஸ்), சத்தியராஜ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கவீஷனின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.06.2019) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல. 73, இராமநாதன் வீதி,**
**நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**தொ.பே.இல.: 077 3138434**

**தோற்றம்** 12 . 05 . 1919



**மறைவு** 09 . 06 . 2019

### திருமதி அன்னமுத்து இராசதுரை

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், தெகிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னமுத்து இராசதுரை 09.06.2019 ஞாயிற்றுக் கிழ்மை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பர்-சின்னக்குட்டி தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற இராசதுரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தையா, தெய்வானை ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற நகுலேஸ்வரி மற்றும் நற்குணேஸ்வரி, நாகேஸ்வரி ஆகியோரின் தாயாரும், பத்திருநாதன், காலஞ்சென்ற செந்திநாதன் மற்றும் யோகதாசன் ஆகியோரின் மாமியும், சுசீலா, சுகுணா, சுகுமார், சுவர்ணா, பிருந்தா, சங்கீதா, அபிதா, கலாராதா, சுமேதா, புகழினி, அருண் ஆகியோரின் பேர்த்தியும், கியாறா, லாறா, அசோக், சுபிக்ஷா, அபிக்ஷா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்சாலையில் இன்று (10.06.2019) திங்கட்கிழமை காலை 8.00 மணிமுதல் வைக்கப்பட்டு, பிற்பகல் 2 மணிக்கு தெகிவளை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**திருமதி நாகேஸ்வரி யோகதாசன் (மகள்)**

**Tel: 077 051 7733, 071 627 7212**

**மண்ணில்** 14 . 03 . 1928



**விண்ணில்** 07 . 06 . 2019

### சுப்பிரமணியம் செல்லத்துரை

அளவெட்டி செட்டிச்சோலையைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி வடக்கு தம்பியப் புலத்தை வாழ்விடமாகவும் தற்போது இந்தியா திருச்சியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த சுப்பிரமணியம் செல்லத்துரை 07.06.2019 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் செல்லத்துரை-ஞானதேவியின் (புனிதம்) பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், பொன்னையா பாக்கியம் (மாரிசன்கூடல்) தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான ஏரம்புஇராசம்மா (மலேசியா), வைத்திலிங்கம் நாகம்மா, கனகரத்தினம் கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற குணவதி மற்றும் அருந்ததி (பிரான்ஸ்), சிவபாலன் (சுவிற்சலாந்து, இராகினி (இந்தியா), காலஞ்சென்ற சிறிதரன் (இங்கிலாந்து) மற்றும் குமுதினி (இங்கிலாந்து) நந்தகுமார் (ராஜன், கனடா) காலஞ்சென்ற இரமணி ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சிவபாலன் (சிவம்) மற்றும் தேவகுமாரி (சுவிஸ்லாந்து), அருளம்பலம் (இலங்கை) செல்வகுமாரி (செல்வி, இங்கிலாந்து) பாஸ்கரன் (பாபு-இங்கிலாந்து) சகிலா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11.06.2019 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் திருச்சிராப்பள்ளி இந்தியா இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

துயர் பகிர்வு நிகழ்வு அன்னாரது சொந்த இடமான அளவெட்டி டச்சு றோட் தம்பியப்புலத்தில் 11.06.2019 செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

**தம்பியப்புலம்,**
**அளவெட்டி.**


**தகவல்:**
**வை.பாலச்சந்திரன்**

**Tel: 077 864 9024**

# நிலை தடுமாறாத பண்பால் உயர்ந்த மனிதர்

# அமரர். ஆவரங்கால் க.சின்னத்துரை

க.ஆரூரன்
ஆவரங்கால்



சின்னத்துரை அவர்கள் 1949 ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்டபோதே தன்னையும் தமிழரசுக் கட்சியில் இணைத்துக் கொண்டவர்.

## இளைஞனாக மக்கள் பணியில்

இளைஞனாக இருந்த காலப்பகுதியில் கட்சியின் முன்னேற்றகரமான விடயங்களில் முன்னின்று உழைத்தவர். அமரர் யாழ்ப்பாணம் மாநகர சபை, மாவட்ட சபை மற்றும் புத்தூர் கிராம சபை ஆகியவற்றில் வெற்றி பெற்று உறுப்பினராகவும் இருந்தவர்.
1971 களில் சேகுவரா கிளச்சியின் போது யாழ் - கொழும்பு போக்குவரத்துக்கள் தடைப்பட்போது தனது சொந்த வாகனத்தை கொழும்புக்கு அனுப்பி யாழ்ப்பாண விவசாயிகளுக்கு தேவையான மண்ணெண்ணை பெற்றோல் மற்றும் அத்தியவசியப் பொருட்களான சீனி, மா முதலானவற்றை யாழ்ப்பாணம் கொண்டு வந்து விநியோகித்தவர்.

## தமிழரசுக் கட்சியின் தலைவராக

தமிழ்மக்களுக்கு கூட்டாட்சியே சிறந்து விளங்குமென வலியுறுத்தி டாக்டர் நாகநாதன், கு.வன்னியசிங்கம், அ.அமிர்தலிங்கம் ஆகியோர்களை அழைத்து வந்து கொள்கை விளக்க சொற்பொழிவை ஆற்ற வைத்தவர். கோப்பாய் தொகுதியை என்றும் தமிழரசின் கோட்டையாகவே திகழச் செய்தவர். தமிழர் விடுதலைக்கூட்டணியின் தேசிய மாநாட்டை மிகச் சிறப்பாக யாழ்ப்பாணம், ஆவரங்காலிலே நடாத்திய பெருமை அன்னாரையே சாரும்.
தமிழரசுக்கட்சியின் பொருளாளராகவும் 1977 இல் தமிழரசுக் கட்சியின் தலைவராகவும் தெரிவுசெய்யப்பட்டு சிறப்பாக பணியாற்றியவர். கோப்பாய் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கு.வன்னியசிங்கம், ம.பாலசுந்தரம், சி.கதிரவேலுப்பிள்ளை, ஆ. ஆலாலசுந்தரம் போன்றோர் வெற்றியடைய உழைத்த பெருமைக்குரியவர்.

## நெஞ்சுரம் கொண்ட தலைவன்

1989 ஆம் ஆண்டு கிளிநொச்சியில் முன்னாள் எதிர்க் கட்சித் தலைவர் அ. அமிர்தலிங்கத்தின் உருவச்சிலையை நிறுவி பேருரை ஆற்றிய பெருமைக்குரிய நெஞ்சுரம் கொர்ண்டவர். யாழ்ப்பாணத் தொகுதிக்குட்பட்ட கிராமங்கள் எங்கும் சென்று மக்களின் குறைகளைக் கேட்டுஅறிந்து உதவி செய்வதில் சின்னத்துரை அவர்கள் தீவிரமாகச் செயற்பட்டார்.

## தளராத தமிழ்த் தேசிய உணர்வாளன்

சின்னத்துரை இல்லாது விட்டால் கட்சியே அழிந்து போகும் என்ற நிலையிலும் துணிகரமாகச் சென்று கட்சியின் தலைவர் தானே என்று கையொப்பம் இட்டு கட்சியை வளர்த்தெடுத்தவர்.
தமிழ்த் தலைவர்கள் பலரும் இலங்கையில் இல்லாதபோது தானே தற்போதைய தமிழரசுக் கட்சியின் தலைவர் என கையொப்பம் இட்டு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆரம்பத்துக்கு தானும் முன்னின்று உழைத்தார்.
அன்னாரின் செயற்பாடுகள் அனைத்தும் தமிழரசுக் கட்சியின் வளர்ச்சிக்கும் தமிழினத்தின் எழுச்சிக்கும் உந்து சக்தியாக அமைந்துள்ளன என்பதில் ஐயமில்லை.

**தமிழ்த் தலைவர்கள் பலரும் இலங்கையில் இல்லாதபோது தானே தற்போதைய தமிழரசுக் கட்சியின் தலைவர் என கையொப்பம் இட்டு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆரம்பத்துக்கு தானும் முன்னின்று உழைத்தார். அன்னாரின் செயற்பாடுகள் அனைத்தும் தமிழரசுக் கட்சியின் வளர்ச்சிக்கும் தமிழினத்தின் எழுச்சிக்கும் உந்து சக்தியாக அமைந்துள்ளன என்பதில் ஐயமில்லை.**

# நிலைமாறத் தலைமுறையின் முடிவுரையில்...

ந.ஶ்ரீகாந்தா
மூத்த சட்டத்தரணி



நெடுந்தீவு முதல் காரைதீவு (காரைநகர்) வரை எட்டு அழகிய தீவுத் திட்டுக்களை, அலைகள் புரளும் ஆழ்கடல் நடுவே கொண்டு அமைதியாகக் காட்சி தரும் தீவகம்.

## சீரும் சிறப்பு மிக்க தீவகம்

தமிழ் தேசத்தின் தாயகத்தில் பூகோள - அரசியல் ரீதியாக புறக்கணிக்கப்பட முடியாத பெரும் முக்கியத்துவம் மிக்க பிரதேசம்.
அதே நேரத்தில் வரலாற்று ரீதியாகவும், கலாசார - பண்பாட்டு அடிப்படையிலும், பொருளாதாரப் பின்னணியிலும் தீவகத்தின் தனித்துவம் மறுத்துரைக்கப்பட முடியாதது.
தீவகத்தின் மக்கள் பலர், பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில், மலேசியா மற்றும் சிங்கப்பூர் நாடுகளில் அரச நிர்வாக சேவையில் முத்திரை பதித்த அதே வேளையில் தென்னிலங்கையின் பல்வேறு நகரங்களிலும் தீவக வர்த்தகர்களின் ஆதிக்கமே கொடிகட்டிப் பறந்தது. தலைநகர் கொழும்பில் இறக்குமதி வர்த்தகம், தீவக வர்த்தகப் பெருமக்களின் வங்கிக் கணக்குகளுக்குள்ளே கட்டிப்போடப்பட்டிருந்தது.
இத்தகைய சீரும் சிறப்பும் மிக்க தீவகம் கல்வி இலக்கியம் மற்றும் தொழில்சார் துறைகளிலும் சாதனை படைத்து நின்றது.

## தீவகம் தந்த சீரிய பெருமக்களுட் சிலர்

16 மொழிகளில் பாண்டித்தியம் பெற்றிருந்த தனிநாயகம் அடிகள், 16 மொழிகளுக்கு மேல் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்ட ஆங்கிலச் சிறுகதை ஒன்றின் படைப்பாளியான பரிஸ்ரர். அழகு சுப்பிரமணியம், இரு தடவைகள் சாகித்திய மண்டல விருதினை வென்ற பண்டிதர் அருளம்பலம், சட்டசபை சபாநாயகர் சேர்.வைத்தியலிங்கம் துரைசாமி, சட்ட மேதை எ.வி. குலசிங்கம், நாடறிந்த வைத்திய கலாநிதி என்.ரி. சம்பந்தர், கொழும்புத் துறைமுகத்தின் ஏற்றுமதி- இறக்குமதி நடவடிக்கைகளை கட்டியாண்டு, நாடாளுமன்றத்துக்குத் தெரிவான அல்பிரட் தம்பி ஐயா, தலைமை நீதியரசர் பதவியை அலங்கரித்த சர்வானந்தா, 'தமிழரசு மூளை' எனப் பராட்டப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் , சட்டத்தரணி "சுயாட்சி" நவரத்தினம், அவரைத் தொடர்ந்து தீவகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய தமிழறிஞர் பண்டிதர் கா.பொ.இரத்தினம், சென்ற நூற்றாண்டின் ஆரம்பத்தில் வால்வெள்ளி ஒன்று தோன்றப் போவதை, சில வருடங்களுக்கு முன்னரே உலகுக்கு அறிவித்த வானியல் மேதை அலென் ஏபிரகாம் .... என்று,
ஒரு நூற்றாண்டு காலத்தை ஊடுறுத்து நின்ற நீண்ட வரிசை தீவகம் தந்த சாதனையாளர்கள் பட்டியலில் ஒரு பகுதியைத் தவிர முழுமையும் அல்ல. இந்தப் பட்டியலின் மிகுதிப் பகுதியில் நூற்றுக்கணக்கானோரின் பெயர்கள் பல நாடுகளிலும் பரவிக் கிடக்கின்றன.

## தமிழ்த் தேசிய அரசியலில் இணைந்து பணியாற்றியவர்

இந்த வரலாற்றுப் பின்னணியில் 1956 முதல் தீவகத்தின் அரசியல் -சமூக நடவடிக்கைகளில் துணிவோடும் துடிப்போடும் ஈடுபட்ட இளைஞர் படை வரிசையில் இடம்பிடித்த நாள் முதல் ஓர் அரை நூற்றாண்டு காலம் தன் சொல்லாலும் செயலாலும் ஓர் தமிழ்த் தேசியவாதியாக நின்று, நீடித்து, அதே பாதையில் தொடர்ந்து நிலைத்தவர் மறைந்த மாணிக்க வாசகர் அவர்கள். வீ.ஏ கந்தையா , வி.நவரத்தினம் ,கா.பொ இரத்தினம் என காவலூரின் நாடாளுமன்ற உறுப்பினர்களோடு 1956 முதல் 1983 வரையில் இணைந்து பணியாற்றிய வரலாற்றுக்குரியவர்.

## இறுதிவரை தமிழ் தேசியத்தை நேசித்தவர்

பெருமையும் புகழும் கொண்ட பிரதேசப் பின்னணியும் , சமரசங்களுக்கு இடங்கொடுக்காத இறுக்கமான கலாசார விழுமியங்களும், மாணிக்கவாசகர் ஐயா காலத்து தலைமுறைக்கே உரித்தான தனித்துவ சமாச்சாரங்கள். அந்தத் தலைமுறையிடம் நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும் இருந்தன.
ஞானச்செருக்கும் ஈனத்தை வெறுத்து ஒதுக்கும் இயல்பும் இருந்தன. 'யாமார்க்கும் குடி அல்லோம்' என்ற நெஞ்சுரமும் இருந்தது.
தமிழ்த் தேசியத்தை, அதன் ஆரம்ப நாட்களில் மாத்திமன்றி, பின்னாட்களில் ஜனநாயக அரசியற் களத்தில் அடிக்கடி அதனை சவாலுக்கு உள்ளாக்க முயன்ற மேட்டுக்குடி மேதைகளின் ஆதிக்க அடாவடி -அட்டகாசங்களுக்கு எதிராகவும் அதே பாதையில் தொடர்ந்து நிலைத்து நின்றவர் மறைந்த மாணிக்க வாசகர் அவர்கள்.

## தொடரும் அவரது இலட்சிய சிந்தனைகள்

அந்தத் தலைமுறையின் கடைசி உறுப்பினர்களும் இன்று பெரும்பாலும் உதிர்ந்து போய்விட்ட நிலையில் மாணிக்கவாசகர் ஐயாவும்
சமீபத்தில் பிரியாவிடை பெற்றிருக்கிறார்.
நல்லதோர் ஆசிரியராய் நேர்மையான அரசியல் நடவடிக்கையாளராய் சமய சமூகசேவையாளராகவும் தமிழ்மொழிப்பற்றாளராகவும் சைவநெறியாளரய் வாழ்ந்த அந்த நல்ல மனிதர் நல்ல பிள்ளைகளை நமது சமூகத்துக்கு தந்திருக்கிறார். மருத்துவம், நீதி, கல்வி மற்றும் ஊடகம் என பல்துறை சார்ந்த அவரது பிள்ளைகளையிட்டு அவர் நியாயமான பெருமை கொண்டிருக்க முடியும். தமிழ் இனத்தின் மீட்சியையும் தான் வாழ்ந்த தீவகத்தின் மறுமலர்ச்சியையும்
சிந்தனையில் தேக்கி நின்ற தமது தந்தையின் கனவுகளை நனவாகக் கண்டிட அவரின் பிள்ளைகள் தம் பங்களிப்பை வழங்குவார்கள் என்பதே
மாணிக்கவாசகர் ஐயாவை நன்கறிந்த அனைவரினதும் எதிர்பார்ப்பு

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# மக்களாட்சிக்கு விடுக்கப்பட்ட மிரட்டல்

உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டு வெடிப்புகள் மற்றும்படுகொலைகள்தொடர்பில்நாடாளுமன்றத்தெரிவுக் குழு தொடங்கியுள்ள விசாரணைகள் உடன் நிறுத்தப்படவேண்டும் என்று அரசதலைவர்மைத்திரிபால சிறிசேனதெரிவித்துள்ளார். விசாரணைநிறுத்தப்படும்வரையில் அமைச்சரவைக் கூட்டங்கள் நடத்தப்படாது என்றும் நாடாளுமன்றத்தை ஒத்தி வைக்க வேண்டிய நிலமை ஏற்படும் என்றும்கூட அவர் தெரிவித்துள்ளார். சிறப்பு அமைச்சரவைக் கூட்டம் ஒன்றில் அவர் இந்த மிரட்டலை விடுத்துள்ளார்.

இந்த மிரட்டல் வெளிப் பார்வைக்குத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சிக்கும் அரச தலைவருக்கும் இடையிலான அதிகாரப் போட்டியின் வெளிப்பாடு என்பதாகத் தெரிந்தாலும், உண்மையில் மக்களாட்சிக்கு விடுக்கப்பட்டிருக்கக்கூடிய வெளிப்படையான அச்சுறுத்தல், மிரட்டல் இது. ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்படமுடியாதது. ஏற்றுக்கொள்ளப்படக்கூடாததும்.

நல்லாட்சியைத் தருவேன் என்று கூறி அதிகாரத்துக்கு வந்த ஒருவர், இவ்வாறு மக்களாட்சிக்கே அச்சுறுத்தலாக மாறியிருப்பது மிகவும் பாரதூரமானது; வெட்கக்கேடானது.

இலங்கை 1972ஆம் ஆண்டு குடியரசானது முதல் நாட்டின் மீயுயர் அதிகாரம் கேள்விகளுக்கு அப்பாற்றபட்ட மக்களாட்சியாகவே இருக்கின்றது. மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் சபையே சட்டவாட்சியின் மையமாகவும் அதிகாரத்தில் மேலோங்கியதாகவும் இருக்கின்றது. அரச தலைவரின் நிறைவேற்று அதிகாரம் என்பது சில இடங்களிலும் சில சந்தர்ப்பங்களிலும் இந்த மீயுயர் சபையால் கட்டுப்படுத்தப்படக்கூடியதேதவிர, அரசதலைவரின் அதிகாரங்கள் இந்தச் சபையைக் கட்டுப்படுத்தக்கூடியன அல்ல.

அப்படியிருக்கும்போது தனக்கு வழங்கப்பட்டிருக்கக்கூடிய அதிகாரங்களைக் குறுக்கு வழியில் பயன்படுத்தி மக்களின் மீயுயர் சபையைக் கட்டுப்படுத்துவதற்கு அரச தலைவர் முயற்சிப்பது பெருந்தவறு.

உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டு வெடிப்புக்கள் தொடர்பான விசாரணைகள் தன்னைக் குறிவைத்து இடம்பெறுகின்றன என்கிற சந்தேகமே அரச தலைவரின் இந்த அச்சுறுத்தலுக்குக் காரணமாக இருக்கும் என்பதை ஊகிப்பது கடினமானது அல்ல. இதுவரையில் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் முன்பாகச் சாட்சியம் வழங்கிய அதிகாரிகளின் சாட்சியங்களில் ஊடகங்களில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட பகுதிகள் அரச தலைவருக்கு எதிரான கருத்துக்களை உள்ளடக்கி இருந்தன என்பது அவரது இத்தகைய நகர்வுக்கான ஏதுநிலையை ஏற்படுத்தியிருக்கக்கூடும்.

உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டு வெடிப்புக்களுக்கு காரணம் அரச தலைவரின் பொறுப்பற்ற செயல் என்றும் ஆனால், பாதுகாப்புத்துறை அதிகாரிகளைப் பலிக்கடாக்களாக்கித் தான் தப்பிக்கொள்ள முயற்சிக்கிறார் என்று கூறப்படும் குற்றச்சாட்டுக்களைப் பலப்படுத்தும் வகையிலான சாட்சியங்களே இதுவரையில் வெளியாகி இருக்கின்றன என்கிற நிலையில் அரச தலைவரின் கோபம் வெளிப்பட்டிருக்கிறது என்பதையும் புரிந்துகொள்ள முடிகிறது.

அதற்காக வெளிப்படையான ஒரு விசாரணையைத் தடுக்க நினைப்பது சரியான அணுகுமுறை அல்ல. அதனை எதிர்கொள்வதற்கும் அதன் மூலம் வரும் பாதிப்புக்களைச் சமாளிப்பதற்கும் ஏற்ற, பொருத்தமான மாற்றுவழிகள் பலவுண்டு. அவற்றைவிடுத்து மக்களாட்சியைச்சவாலுக்குட்படுத்துவதும் நாடாளுமன்றத்தின் அதிகாரங்களை நிறைவேற்று அதிகாரத்தின் ஊடாகக் கட்டுப்படுத்த முயல்வதும் ஒருபோதும் அனுமதிக்கப்பட முடியாதது. அத்தகைய யோசனையை அரச தலைவர் உடனடியாகவே கைவிட வேண்டும்.

இந்த அதிகார மோதலின் இடையே, இன்றும் பணியில் இருக்கும் பாதுகாப்புத்துறை அதிகாரிகளைத் தெரிவுக்குழுவின் முன்பாகச் சாட்சியமளிக்க விடமாட்டேன் என்றும் அரச தலைவர் கூறியிருக்கிறார். தெரிவுக்குழு அழைக்கும் அதிகாரி ஒருவர் அதனை நிராகரிக்கும் உரித்துடையவர் அன்று. தெரிவுக் குழுவின் அதிகாரத்தில் உயர் நீதிமன்றமே தலையிட முடியாது என்கிறபோது, பாதுகாப்புத்துறை அதிகாரிகளை அரசதலைவர் மீண்டும் பலிக்கடாக்களாக்க முயற்சிப்பதும் ஏற்புடையதல்ல.

# சூழ்நிலைக்கு ஏற்ப செயற்படுவார்களா தலைமைகள்?





இந்துமதி

தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் தொடர்பாக தமிழ் அரசியல் தலைமைகள் சிந்திக்க வேண்டியதருணம் வந்துவிட்டது. ஆட்சியாளர்களால் தமிழர்களுக்குத் தீர்வு கிடைத்து விடுமென்ற மாயையில் இருந்து அவர்கள் வெளியே வராதுவிட்டால் தமிழினத்தின் எதிர்காலம் மோசமான கட்டத்தை எட்டிவிடுமென்பதையும் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் ஒரு சிலரின் தேவைகளை நிறைவேற்றுவதையே நோக்கமாகக் கொண்ட ஓர் அரசையே இந்த நாட்டில் பார்க்க முடிகின்றது. சட்டம், ஒழுங்கு, நீதி யாவுமே புறம்தள்ளப்பட்ட நிலையில் பாதுகாப்பற்றதொரு சூழலையே மக்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அரசுக்கு வேண்டிய ஒருவர் எத்தகைய குற்றங்களைப் புரிந்தாலும் அவர்கள் காப்பாற்றப்படுகின்ற நிலையே இங்கு தொடர்கின்றது. அண்மைக் காலமாக இங்கு இடம்பெற்ற சம்பவங்கள் இதை உணர்த்தி நிற்கின்றன.

**கையாலாக நிலையில் தற்போதைய அரசு**

முன்னைய ஆட்சியில் இடம்பெற்ற குற்றச் செயல்கள் தொடர்பாக எதையுமே செய்ய முடியாத கையாலாகாத நிலையில் தற்போதைய அரசு காணப்படுகின்றது. குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சிலர் நாட்டின் உயர் பதவிகளைப் பிடிப்பதற்கான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இவர்களுடன் பேரம் பேசுவதில் அதிகாரத்தில் உள்ளவர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளதையும் காண முடிகின்றது. பதவிகளுக்கான பேரமாகவே இது அமைந்துள்ளது. இந்த நிலையில் சிறுபான்மையின மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகச் சிந்திப்பதற்கே இவர்களுக்கு நேரம் கிடைப்பதில்லை. நேரம் கிடைத்தா லும் அது தொடர்பாகச் சிந்திப்பதில்லை. இந்த நிலையில் இவர்களைத் தொடர்ந்தும் தமிழ்த் தலைமை நம்பிக்கொண்டிருப்பதால் பயனெதுவும் ஏற்பட்டுவிடாது.

> “சிறுபான்மையின மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகச் சிந்திப்பதற்கே இவர்களுக்கு நேரம் கிடைப்பதில்லை. நேரம் கிடைத்தாலும் அது தொடர்பாகச் சிந்திப்பதில்லை. இந்த நிலையில் இவர்களைத் தொடர்ந்தும் தமிழ்த் தலைமை நம்பிக் கொண்டிருப்பதால் பயனெதுவும் ஏற்பட்டுவிடாது.

சிங்கள, பௌத்தவாதிகளுக்கு ஆட்சியாளர்கள் அடங்கிக் கிடக்கும் நிலைதான் தற்போது காணப்படுகின்றது. குறிப்பாக பௌத்த தேரர்களே நாட்டை ஆள்வது போன்றதொரு தோற்றப்பாடு உருவாகிவிட்டது. ஆட்சியாளர்களும் தேரர்களின் கோரிக்கைகளுக்கு செவிமடுத்து வருகின்றனர். இதற்கு மாறாகச் செயற்பட்டால் மக்களின் ஆதரவை இழக்க நேரிட்டு விடுமென அவர்கள் அஞ்சுகின்றனர்.

**பௌத்தத்துக்கே முன்னுரிமை**

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் சிறைத்தண்டனை அனுபவித்து வந்த ஞானசாரதேரர் பௌத்த மகா சங்கங்களின் அழுத்தம் காரணமாகவே தம்மால் விடுதலை செய்யப்பட்டதாக அரச தலைவர் கூறுகிறார். பௌத்த சங்கங்கள் நினைத்தால் எதையுமே சாதிக்க முடியுமென்பது இதன் மூலமாகத் தெளிவாகத் தெரிகின்றது. இந்த நிலையில் ஆட்சியாளர்கள் சுயமாகச் சிந்தித்து எதையுமே செய்ய முடியாதென்பது தெளிவாகத் தெரிகின்றது. இந்த ஆட்சி கவிழ்ந்துவிடுமானால் மகிந்த திரும்பவும் ஆட்சிக்கு வந்துவிடுவாரெனவும் இதனால் தமிழர்களுக்குத் தீங்கு ஏற்பட்டு விடுமெனவும் சில தமிழ் அரசியல் தலைவர்கள் கூறிவருவதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தாம் அரசுக்கு வழங்கி வருகின்ற ஆதரவை நியாயப்படுத்துவதற்காகவே அவர்கள் இவ்விதமாக கூறிவருகின்றனர். ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இந்த இரண்டு தரப்பினருமே ஒன்றுதான் என்பதை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சி, சிறீலங்கா சுதந்திரக் கட்சி, பொதுமக்கள் முன்னணி ஆகியன பெயர்களில் மட்டுமே வேறுபாட்டைக் கொண்டிருக்கின்றன. தமிழர் விடயங்க ளைப் பொறுத்தவரையில் அந்தக் கட்சிகளில் வேறுபாடுகளைக் காணமுடியாது. கடந்த 70 ஆண்டுகளுக்கும் மேலாக நாம் இதைத்தான் பார்த்து வருகின்றோம். சிறுபான்மையினருக்கு ஆதரவானதொரு ஆட்சியாளர்களை இதுவரையில் காண முடியவில்லை.

இந்த நிலையில் தமிழ்த் தலைவர்கள் தற்போதைய அரசு தமிழர்களுக்குத் தீர்வை வழங்குமென்ற நம்பிக்கையுடன் காத்திருப்பதை ஏற்க முடியவில்லை. அரசமைப்புத் திருத்தத்தின் 13இற்கு அப்பால் நகரவே முடியாதென புதுடெல்லியில் வைத்து அரச தலைவர் திட்டவட்டமாகக் கூறிவிட்டார். இதைமீறி ரணில் விக்கிரமசிங்கவால் எதையுமே செய்ய முடியாது. அதுமட்டுமல்லாது அரசுக்கு முண்டு கொடுத்து வந்த முஸ்லிம்களுக்கு என்ன நடந்தது என்பதையும் தமிழ்த் தலைமைகள் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தமிழர்களுக்கும் இந்த நிலை ஏற்படாது என்பதற்கு எந்தவிதமான உத்தரவாதமும் கிடையாது. பௌத்த பிக்குகள் சொல்வதைக் கேட்கின்ற அரசினால் எதையுமே சுயமாகச் சாதிக்க முடியாது. இத்தகையதொரு அரசை இனியும் நம்பிக் கொண்டிருப்பதால் பயனொன்றும் கிடைக்கமாட்டாது.

**தேர்தல்களே இலக்கு**

தேர்தல்களை மட்டுமே நோக்கமாகக் கொண்டு அரசியலை நடத்திச் செல்கின்ற தமிழ் அரசியல்வாதிகளையே தற்போது காண்கிறோம். மக்கள் பிரச்சினைகளை எதிர்கொண்டு வரும்போது புதிய அரசியல் கட்சிகளை ஆரம்பிப்தையும் ஆதரவாளர்களைத் திரட்டுவதையும் காணமுடிகின்றது. அது மட்டுமல்லாது அரசியல் ரீதியாகப் பிரிந்து நின்று கொண்டு ஒருவரையொருவர் விமர்சிப்பதையும் இவர்கள் தமது கடமையாகக் கொண்டிருக்கின்றனர். இத்தகையவர்கள் தமிழர்களுக்குத் தீர்வை பெற்றுத் தருவார்களென எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? வெறுமனே உணர்ச்சி வசனங்களைப் பேசுவதை விடுத்து மக்களுக்கு உண்மையாக நடக்க வேண்டியது தமிழ் அரசியல் தலைமைகளின் இன்றைய கட்டாயக் கடமையாகும். இதிலிருந்து தவறினால் தமிழர்களின் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாகிவிடும்.

## வவுனியாவிலுள்ள முஸ்லிம் பாடசாலைகளில் சோதனை

வவுனியா, ஜூன் 10

வவுனியா மாவட்டத்தில் உள்ள அனைத்து முஸ்ஸிம் பாடசாலைகளிலும் நேற்றுத் தீவிர சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் மற்றும் நோன்பு பெருநாள் விடுமுறையைத் தொடர்ந்து இரண்டாம் தவணை கற்றல் நடவடிக்கைக்காக முஸ்லிம் பாடசாலைகள் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த நிலையில் பாடசாலை சமூகத்தினருடன் பொலிஸாரும் இணைந்து வவுனியா மாவட்டத்தில் உள்ள அனைத்து முஸ்ஸிம் பாடசாலைகளிலும் தீவிர சோதனையை மேற்கொண்டிருந்தனர். (ஒ.5)

## சமுர்த்தி நிகழ்வில் சரிந்தது கம்பம்

### பயனாளிகள் காயம்

மன்னார், ஜூன் 10


சமுர்த்தி உரித்துப் படிவம் வழங்கும் நிகழ்வில், மின்குமிழ்கள் பொருத்தப்பட்ட இரும்புக் கம்பம் கடும் காற்றால் சரிந்து வீழ்ந்தது. இதனால் பெண் ஒருவர் உள்ளிட்ட இருவர் காயமடைந்து உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

மன்னார் மாவட்டத்தில் சமுர்த்தி உதவி வழங்குவதற்குப் புதிதாக இணைக்கப்பட்டவர்களுக்கு, சமுர்த்தி உரித்துப் படிவம் வழங்கும் நிகழ்வு நேற்றுக் காலை 9 மணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சமூக வலுவூட்டல் அமைச்சர் தயா கமகே, இந்திய தலைமை அமைச்சர் கலந்து கொண்ட நிகழ்வில் பங்கேற்றிருந்ததால் உரிய நேரத்துக்கு வருகை தரவில்லை. நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டது. மாலையில் நிகழ்வு ஆரம்பமானது. தேசிய கீதம் இசைக்கப்பட்டு முடிவுற்ற நிலையில், மேடையில் கட்டப்பட்டிருந்த மின்குமிழ் கம்பம் திடீரென சரிந்து வீழ்ந்தது. பொதுமக்களின் இருக்கைள் இருந்த பக்கம் வீழ்ந்ததில், பெண் ஒருவர் உள்ளிட்ட மூவர் காயமடைந்து உடனடியாக மருத்துவமனைக்கு ஏற்றிச் செல்லப்பட்டனர்.

பெருமளவான பொதுமக்கள் பங்குபற்றும் நிகழ்வில் உடனடியாக முதலுதவி வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் கூடச் செய்யப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5.213)







# அமைச்சருக்கு எதிராக வவுனியாவில் போராட்டம்

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நேற்று நடத்தினர்

வவுனியா, ஜூன் 10

வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்று இடம்பெற்ற சமுர்த்திப் பயனாளிகளுக்கு உரித்துப்படிவங்கள் வழங்கும் நிகழ்வில் பங்கேற்ற ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் தயாகமகேக்கு எதிர்ப்புத் தெரிவித்தே, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் எதிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மன்னாரில் இடம்பெற்ற நிகழ்வுகளை நிறைவு செய்து கொண்டு 4.40 மணியளவில் வன்னி வான் படைத்தளத்துக்கு உலங்கு வானூர்தியில் வந்திறங்கிய அமைச்சர், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டம் காரணமாக கண்டி வீதி வழியாக செல்லாமல் பிரதான மணிக்கூட்டு வீதி வழியாக பசார் வீதி சென்று இலுப்பையடி, வைத்தியசாலைச் சுற்றுவட்டம் ஊடாக நகரசபை மைதானத்தை வந்தடைந்தார்.

போராட்டத்தை மேற்கொண்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தமது பிள்ளைகளின் விடுதலைக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்காமல் தமக்கு வாய்க்கு அரிசி போடவருகின்றாயா என்று கோசமெழுப்பியவாறு தமது போராட்டத்தை மேற்கொண்டனர். வீதியை வழிமறிக்கச் சென்ற உறவுகளின் போராட்டத்தை பொலிஸார் தடுத்து நிறுத்தியிருந்தனர். நல்லாட்சி அரசில் தமக்கான தீர்வைப் பெற்றுக்கொடுப்பதாக வாக்குறுதியளித்துவிட்டு தற்போது ஆட்சிக்காலம் நிறைவுறும் தருணத்துக்குச் சென்றுள்ள நிலையில் அமைச்சரின் வருகைக்கு எதிர்ப்பைத் தெரிவித்து தமது போராட்டத்தை மேற்கொண்டனர். (ஒ.5)



# கிளிநொச்சிக்கு வந்துள்ள யானைகள் விரட்டினாலும் நகர மறுக்கின்றன!

### நடவடிக்கை எடுக்குமாறு பாதிக்கப்பட்டோர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 10

கிளிநொச்சி மாவட்டத்தின் இராமநாதபுரம், புதுக்காடு, அழகாபுரிப் பகுதிகளில் தற்போது வந்துள்ள யானைகளை துரத்தி, விவசாயிகளையும் அவர்களின் பயிர்களையும் காக்குமாறு விடுத்த கோரிக்கைக்கு எந்தத் திணைக்களமும் நடவடிக்கை எடுக்கவில்லை. அதனால் இழப்புக்கள் இன்னும் தொடர்கின்றன என்று இரணைமடு விவசாய சம்மேளனச் செயலர் மு.சிவமோகன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கல்மடுக் குளத்தை அண்டிய காட்டுப் பகுதியில் கொண்டு வந்து இறக்கிவிடப்பட்டன என்று நம்பப்படும் மூன்று யானைகள் (தென்பகுதியில் வளர்க்கப்பட்ட யானைகள்) கடந்த மாதம் 20ஆம் திகதி தொடக்கம் 25ஆம் திகதிவரை தொடர்ச்சியாக குடியிருப்புப் பகுதிகளுக்குள்ளும் வயல்ப் பகுதிகளுக்குள்ளும் ஊடுருவுகின்றன. எந்தச் சலனமோ அல்லது பதற்றமோ இன்றி மக்கள் குடியிருப்புக்களை நெருங்கிச் சேதப்படுத்துகின்றன.

அந்த யானைகளால் அந்தப் பகுதி மக்கள் தொடர்ச்சியாக இரவு நேரங்களில் கண்விழித்தே இருக்கும் அவலம் நிகழ்கின்றது. யானைகளுக்குச் சத்தம் எழுப்பினாலோ அல்லது தீயை மூட்டினால்கூட அந்த யானைகள் நகர்ந்து செல்ல மறுக்கின்றன. நகரவே மாட்டாமல் பயிர்களை உணவாக்கிவிடுகின்றன. சேதங்களை ஏற்படுத்துகின்றன. காட்டு யானைகளாயின் ஒலி எழுப்பினாலோ அல்லது நெருப்பை கண்டாலோ அந்த இடத்திலிருந்து ஓடிவிடும். இந்த யானைகள் விரட்டும் நடவடிக்கைகளை கண்டும் அச்சப்படாமல் பயிர்களை நாசமாக்குகின்றன. அவற்றை விரட்டும் எத்தகைய நடவடிக்கைகளுக்கும் அவை பரீட்சயமான யானைகளாகவே காணப்படுகின்றன. இவை தமக்கு அச்சுறுத்தலாகவே உள்ளன.

குறித்த யானைகள் தென்பகுதியில் வளர்த்த பின்பு காடுகளில் கொண்டு வந்து இறக்கப்பட்டிருக்கலாம் என்று இந்தப் பகுதி மக்கள் கருதுகின்றனர். இவ்வாறு கடந்த ஒரு வாரமாக ஊடுருவிய யானைகள் இதுவரை 40க்கும் மேற்பட்ட தென்னைகளையும் வாழை, வயல் நிலங்களையும் நாசம் செய்துள்ளன.

குறித்த யானைகளை இதனுடன் தொடர்புபட்ட வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் பிடிப்பதற்குரிய பணிகளை மேற்கொண்டு எமது மக்களைப் பாதுகாக்க முன்வர வேண்டும். அவ்வாறான பணியை மேற்கொள்ளத் தவறினால் இந்தப் பகுதியில் ஏதும்இடர் ஏற்பட்டால் அதற்கான முழுப் பொறுப்பையும் குறித்த திணைக்களமே ஏற்க வேண்டும். இதை அந்தத் திணைக்களத்துக்கும் மாவட்டச் செயலரின் கவனத்துக்கும் கொண்டு சென்றோம்.

இதனையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் நேரில்வந்து பார்வையிட்டுச் சென்றார்.

வனஜீவராசித் திணைக்களத்தினர் வருகை தந்து யானை வெடிகளை வழங்கினர். அவற்றைப் பயன்படுத்தினாலும் யானைகள் எமது பகுதிகளில் தான் உள்ளன. நகரவேயில்லை - என்றார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் காட்டு யானைகளின் தொல்லை மிக மோசமாகவே உள்ளன. அவற்றைக் கட்டுப்படுத்துமாறு விவசாயிகள், விவசாய சம்மேளனங்கள் பல தடவைகள் கோரிக்கை விடுத்துள்ளன. எனினும் எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. வவுனியாவில் சிறு நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் தமது தமிழ்ப் பகுதிகளில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர். (த-105)

## முதியோர் இல்ல முதியவர்கள் மீளக் குடும்பத்துடன் இணைவு

யாழ்ப்பாணம், ஜூன் 10
கைதடி அரச முதியோர் இல்லத்தில் நீண்ட காலம் தங்கியிருந்த 3 முதியவர்கள் மீளவும் குடும்பத்தினருடன் இணைக்கப்பட்டுள்ளனர்.

முதியோர் இல்லத்தால் நடத்தப்பட்டு வரும் "பிள்ளைகளே பெற்றோர்களைப்பராமாரிக்கவேண்டும்" என்ற விழிப்புணர்வுச் செயற்பாடுகளுக்கமைய இந்த முதியவர்களைப் பிள்ளைகள் அண்மையில் அழைத்துச்சென்றுள்ளனர்.

இதில் இரண்டு ஆண் மற்றும் ஒரு பெண்ணுமாக 3 முதியவர்கள் தமது பிள்ளைகளுடன் இணைக்கப்பட்டுள்ளனர் என்று முதியோர் இல்லம் தெரிவித்தது.

நுவரெலியா, மாங்குளம், வவுனியா போன்ற பகுதிகளைச் சேர்ந்த இந்த மூத்தோர்கள் நீண்ட காலமாக முதியோர் இல்லத்தில் தங்கியிருந்தனர்.

இந்த மூத்தோர்களின் விருப்பப்படிஅவரவர்குடும்பத்தினருடன் இணைக்கப்பட்டனர். சமூகத்தில் முதியோர்களைப் பராமரித்துப் பாதுகாப்பது அவர்களது உறவுகளின் கடமை என்பதை இந்தச் சம்பவம் உணர்வுபூர்வமாக எடுத்துக்காட்டுகிறது. (ஐ-17)

# தமிழ்ப் பொலிஸார் இல்லாததால் முறைப்பாடு வழங்குவதில் சிரமம்

### நெல்லியடிப் பொலிஸில் இந்த நிலை

நெல்லியடி, ஜூன் 10
நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில், தமிழ் தெரிந்த பொலிஸ் அலுவலர்கள் இல்லாததால் அங்கு முறைப்பாடுகள் வழங்கச் செல்லும் மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் சிறுகுற்றப் பிரிவுக்குச் செல்லும் மக்களே இவ்வாறான சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். எனினும் அவ்வாறான சம்பவங்கள் இடம்பெறவில்லை தமிழ்ப் பொலிஸார் உள்ளனர் என்று பொலிஸ் பொறுப்பதிகாரி உதயனுக்குத் தெரிவித்தார்.

நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தின் சிறுகுற்றப்பிரிவில் கடந்த சில நாள்களாக முறைப்பாடுகளைப் பதிவுசெய்யச்சென்ற பலர், அந்தப் பிரிவில் தமிழ் அலுவலர்கள் இல்லாததன் காரணமாக சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். காலையில் சென்ற அவர்கள் தமிழ் அலுவலர்கள் வருவார்கள் என்று காத்திருந்து அவர்கள் இல்லாததால் திரும்பிச் சென்ற சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

நெல்லியடிப் பொலிஸ் நிலை யத்துக்கு தமிழ்ப் பொலிஸார் தாராளமாக இருக்கும்போது அவர்கள் வேறு கடமைகளுக்காக வெளியில் அனுப்படுகின்றனர்.

இதனாலேயே அங்கு முறைப்பாடுகளை எழுதுவதற்கு ஆள்கள் இல்லை என்று மக்கள் விசனித்தனர்.

தமிழ் தெரிந்த ஓரிரு அலுவலர்களையாவது முறைப்பாடுகளைப் பதிவு செய்வதற்கு என்று பொலிஸ் நிலையத்தில் கடமையில் அமர்த்த நடவடிக்கைகளை எடுக்கப் பொலிஸ் அதிகாரி முன்வரவேண்டும் என்று மக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த நெல்லியடிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, சிறுகுற்றப்பிரிவில் அவ்வாறு சம்பவங்கள் எதுவும் இடம் பெறவில்லை. முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று உதயனுக்குத் தெரிவித்தார். (ம-21)

## கடலில் மாயமான மீனவர்கள் 7 நாளாக தகவலேதுமில்லை!

### காரைநகரில் சோகம்

காரைநகர், ஜூன் 10
காரைநகர் கடலில் தொழிலுக்குச் சென்று காணாமல் போன மீனவர்கள் இருவர் பற்றிய தகவல்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

காரைநகர் மத்தி ஜே/48 கிராம அலுவர் பிரிவில் வசித்து வரும் கோடீஸ்வரன் குகப்பிரியன் (வயது -23) மற்றும் தவராசா சத்தியராஜ் (வயது- 26) என்ற இரு இளைஞர்களே காணாமல் போயுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியளவில் சுப்பர் யாகர் என்ற படகில் அவர்கள் இருவரும் கடலுக்குள் சென்றுள்ளனர். எனினும் மறுநாள் அதிகாலை வரை வீடு திரும்பவில்லை. இதனால் சந்தேகம் கொண்ட குடும்பத்தினர் கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

முறைப்பாட்டை அடுத்து கடற்படையினருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் கடற்படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

காணாமல்போன மீனவர்கள் பற்றிய விவரம் அனைத்துப் பொலிஸ் நிலையங்கள், கடற்படைத் தலைமையகங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளன என்று ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

மீனவர்கள் காணாமல் போய் ஏழு நாள்கள் ஆகின்றன எனினும் அவர்கள் தொடர்பான எந்தத் தகவலும் கிடைக்கவில்லை என்று மீனவர்களின் பெற்றோர்கள் கவலை தெரிவித்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காற்று அதிகமாக இருந்தது. மீனவர்கள் யாரும் கடலுக்குச் செல்லவில்லை. ஆனால் குறித்த இருவரும் கடலுக்குச் சென்றுள்ளனர். இருவரும் வறிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். குகப்பிரியனின் தந்தையார் ஒரு சிறப்புத் தேவையுடையவர். குகப்பிரியன் கடற்தொழிலுக்குப் பதிலாக மாற்றுத் தொழிலைத் தேடியதால் யாழ்ப்பாண நீதிமன்றில் காவலாளியாகக் கடமையாற்றி வந்தார் என்று ஊரார் தெரிவித்தனர். (ம-21)

## கற்றாழை உற்பத்தியாளர் சங்கம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூன் 10
யாழ்ப்பாண மாவட்ட கற்றாழை உற்பத்தியாளர் சங்கம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. நிகழ்வுகள் திரு நெல்வேலி விவசாயத் திணைக்கள மண்டபத்தில் நடைபெற்றன. நிர்வாகத் தெரிவும் நேற்று இடம்பெற்றது.

புகையிலைக்கு மாற்றுப் பயிர்கள் வேண்டும் என்று விவசாயிகள் சிந்திக்கும் இந்தக் காலகட்டத்தில் கற்றாழைக்கு மிகுந்த வரவேற்பு உண்டு. அதனை உற்பத்தி செய்வதற்கும், அதற்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்தல், சட்ட விரோதமாகப் பிடுங்கப்படும் கற்றாழைச்செடியை பாதுகாத்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை இந்தச் சங்கம் முன்னெடுத்துச் செல்லவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ம-7)



## காணியைத் துப்புரவாக்க குடும்பப் பெண்ணுக்கு நிதி

யாழ்ப்பாணம், ஜூன் 10
வட இலங்கை சமாதான நீதிவான்கள் சங்கத்தினர் வன்னி நிலப்பரப்பில் போர் காலத்தில் கணவனை இழந்து குழந்தைகளுடன் வாழும் குடும்பப் பெண்ணொருவருக்கு அவர்கள் குடியிருக்கும் காணியைத் துப்புரவு செய்வதற்கான நிதியை வழங்கியுள்ளனர்.

சங்கத்தின் தீர்மானத்தின் பிரகாரம் காணி துப்பரவு செய்வதற்கான நிதியை சங்கத்தலைவர் கா.பீ.ஜெயவிந்தன் யாழ்ப்பாணத்தில் வைத்து குடும்பத் தலைவியிடம் அண்மையில் வழங்கினார். (ம-9)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 10
யாழ்ப்பாணத்தில் சாதியம் குறித்து விசர ́சின்னப்பொடியின் வாழ்வியல் அனுபவமாக வெளிவந்த 'நினைவழியா வடுக்கள்' நூல் வெளியீடு எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

கொட்டடி - படிப்பகத்தில் காலை 10 மணிக்கு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. முன்னாள் அதிபர் க.தம்பிமுத்துவின் தலைமையில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

வெளியீட்டுரைகளை மகாஜனக் கல்லூரியின் ஆசிரியர் த.ரமேஸ், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.இதயராஜா வழங்கவுள்ளனர். (ம)

## மருத்துவ முகாம்

கொழும்புத்துறை, ஜூன் 10
கொழும்புத்துறை ஜே/63 முதியோர் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தின் அனுசரணையுடன் இலவச மருத்துவமுகாம் கொழும்புத்துறைபுனிதசெபமாலைஅன்னை ஆலய மண்டபத்தில் கடந்த 7ஆம் திகதி இடம்பெற்றது.

முதியோர்களுக்கான இலவச மூக்குக் கண்ணாடி வழங்குதல், நீரிழிவு, குருதி அழுத்த பரிசோதனை போன்ற சேவைகள் யாழ்ப்பாண போதனா மருத்துவமனை மருத்துவர்களால் வழங்கப்பட்டன.

ஜே/62, ஜே/63 கிராமங்களைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட முதியோர்கள் இந்தச் சேவையில் பயன்பெற்றனர். (ம-135)

## அசாதாரண சூழ்நிலையால் ஆன்மிக சுற்றுலா நிறுத்தம்

கொழும்புத்துறை, ஜூன் 10
நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையை அடுத்து கைதடி முதியோர் இல்லத்தால் வாராந்தம் முன்னெடுக்கப்பட்ட மூத்தோர்களுக்கான ஆன்மிகச் சுற்றுலா நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

ஆலய வழிபாட்டுக்காக மூத்தோர்கள் வாரத்தில் வெள்ளி, செவ்வாய்க்கிழமைகளில் பிரசித்தி பெற்ற ஆலயங்களுக்கு அழைத்துச் செல்லப்படுவது வழக்கம்.

தற்போது நாட்டில் ஏற்பட்ட அசாதரண சூழ்நிலை கருதி கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதிக்குப் பின்னர் இந்த ஆன்மிகச் சுற்றுலா தற்காலிகமான நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்று கைதடி அரச முதியோர் இல்லம் தெரிவித்தது.

இதேசமயம் இந்த ஆன்மிகச் சுற்றுலாவை எதிர்வரும் ஜூலை மாதத்தில் ஆரம்பித்து வைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம-17)

## கிளைச் சங்கம் மீது பெற்றோல் குண்டுவீச்சு

கொடிகாமம், ஜூன் 10
தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நாவற்காட்டு கிளைச் சங்கத்தின் மீது இனந்தெரியாதோர் பெற்றோல் குண்டு வீசியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை இரவு 8.30 மணிக்கு இடம் பெற்றுள்ளது.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மீது வீசப்பட்ட குண்டு சற்றுத் தூரத்தில் வீழ்ந்து வெடித்ததால் அங்கு காவல் கடமையிலிருந்த காவலாளி அந்த இடத்தை விட்டு ஓடி தப்பித்துக் கொண்டார். அவர் கொடிகாமம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார். பொலிஸார் அங்கு சென்று விசாரணை நடத்தினர். இரவு முழுவதும் காவற் கடமையில் ஈடுபட்டனர் என்றுகொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர். (த-159)

## பரு. ஆதார மருத்துவமனையில் போசாக்கு கிளினிக் ஆரம்பம்

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் போஷாக்கு சம்பந்தமான கிளினிக் கடந்த வெள்ளிக்கிழமை மருத்துவ அத்தியட்சகர் த.குகதாசன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது

ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமைகளில் முற்பகல் 9 மணி முதல் 11 மணி வரை இந்தக் கிளினிக் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

போசாக்குக் குறைபாடு மற்றும் நிறை அதிகரிப்பு போன்ற பிரச்சினை உள்ளவர்கள் பார்வையிடப்பட்டு அவர்களுக்கான ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-159)

# பீடி இலை கடத்தல் வடக்கில் அதிகரிப்பு

## 2,000 கிலோ பீடி இலைகள் கடந்த வாரம் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 10

வடக்கு மாகாணத்தின் பல்வேறு கடற்பரப்புகளில் கடந்த வாரம் மாத்திரம் சுமார் 2 ஆயிரம் கிலோகிராம் பீடி இலைகள் மீட்கப்பட்டுள்ளதாகக் கடற்படை ஊடகம் தெரிவித்துள்ளது.



வடக்கு மாகாணத்தில் கேரளா கஞ்சாப் பொதிகள் பாதுகாப்பு பிரிவினரால் தொடர்ச்சியாக மீட்கப்பட்டு வருகின்றன. அதனைத் தொடர்ந்து தற்போது தொடர்ச்சியாக பீடி இலைகள் மீட்கப்பட்டு வருகின்றன. கடந்த 7ஆம் திகதி பாலைதீவு மற்றும் நெடுந்தீவு பகுதிக்ளில் மேற்கொண்ட கண்காணிப்பு நடவடிக்கையின் போது 194.8 கிலோகிராம் பீடி இலைகள் கடற்படையால் மீட்கப்பட்டன.

அதேநாளில் சிலாவத்துறை கடற்கரைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கையின் போது 287.3 கிலோகிராம் பீடி இலைகளுடன் இருவர் கைது செய்யப்பட்டனர்.

குறித்த பீடி இலைகள் லொறி மூலம் கொண்டு செல்லத் தயாராக இருந்த நிலையில் இரண்டு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த 5ஆம் திகதி வடக்கு கடற்படை கட்டளையின் கடற்டையினரால், பாலைதீவு கடற்கரை பகுதியில் மேற்கொண்ட கண்காணிப்பு நடவடிக்கையின் போது 60.7 கிலோ கிராம் பீடி இலைகள் மீட்கப்பட்டன.

கடந்த 3ஆம் திகதி கடற்படையினர் மற்றும் பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையினர் இணைந்து மன்னார் பெரியகாமன் பகுதியில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது மரம் அறுக்கும் ஆலையொன்றில் மறைக்கப்பட்டிருந்த நிலையில் 526 கிலோகிராம் பீடி இலைகள் மீட்கப்பட்டன.

மேலும் வடமத்திய கடற்படைகட்டளையின் கடற்படையினரால் கடந்த 2ஆம் திகதியும் இரவு தலைமன்னார் கடலில் இருந்து 451 கிலோகிராம் பீடி இலைகள் மற்றும் 5 ஆயிரத்து 300 புகைத்தூள் குப்பிகள் கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

### அடிக்கல் நடுகை நிகழ்வு



கிளிநொச்சி, திருமுறிகண்டிக்குத் குடிதண்ணீர் விநியோகம்செய்யதண்ணீர்தாங்கிமற்றும்குழாய் வேலைகளுக்கான அடிக்கல் நடுகை நிகழ்வுகடந்த வெள்ளிக் கிழமை நடைபெற்றது. ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் அகிலன் மற்றும் அரசதலைவர் செயலக அலுவலர்களால் அடிக்கல்நடுகை செய்யப்பட்டது. நிகழ்வில்பிரிவுகிராமஅலுவலர்,பொதுமக்கள் கிராம அபிவிருத்திச் சங்கஉறுப்பினர்கள்கள்கலந்து சிறப்பித்தனர் (த-222)

## உந்துருளி விபத்தில் சிக்கி 22 வயது இளைஞர் காயம்

சாவகச்சேரி, ஜூன் 10

சங்கத்தானையில் விபத்து நிகழ்வதற்குக் காரணமாக தொடருந்து நிலையத்துக்கு அருகிலுள்ள மதில் உடைக்கப்பட்ட நிலையில், சுமார் ஒரு வருடத்தின் பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை ஒரு விபத்து இடம்பெற்றுள்ளது. ஒருவர் காயமடைந்தார். இந்தச்சம்பவம் தென்மராட்சி சங்கத்தானையில் நேற்றுமுன்தினம் பிற்பகல்3 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சங்கானையைச் சேர்ந்த 22 வயதுடையரே விபத்தில் காயமடைந்தவராவர். அவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

ஒழுங்கையிலிருந்து ஏ - 9 முதன்மைச் சாலைக்குள் திடீரென்று நுழைந்த உந்துருளியும் முதன்மைச் சாலையில் பயணித்துக்கொண்டிருந்த உந்துருளி யும் மோதியதில் விபத்து இடம்பெற்றது என்று அதை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

சங்கத்தானை மீனாட்சி அம்பாள் வீதியில் தண்டவாளத்தைக் கடந்து முதன்மைச் சாலைக்குள் நுழைந்த போதே விபத்து அந்தப் பகுதியிலுள்ள சாரதா வீதி மீனாட்சி அம்மன் வீதியிருந்து வரும் வாகனங்கள் தண்டவாளத்தைக் கடக்க வாகனத்தை வேகமாகச் செலுத்த வேண்டியுள்ளது.

குறித்த கடவையுடன் சங்கத்தானை தொடருந்து நிலையம் அமைந்துள்ளது. அதற்கு அமைக்கப்பட்ட மதில் குறித்த கடவையிலிருந்து முதன்மைச் சாலைக்குள் நுழையும் வாகனங்களை மறைக்கும் நிலையில் காணப்பட்டது. அதனால் அடிக்கடி விபத்துக்கள் இடம்பெற்றுவந்தன.

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்தவிடயம் பொதுமக்களால் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து மதிலின் ஒரு பகுதி உடைக்கப்பட்டு தொடருந்து நிலைய பயணிகளின் பாதுகாப்புக்காக முட்கம்பி வேலி அமைக்கப்பட்டது. விபத்துக்கள் நடைபெறுவது பெருமளவில் குறைந்தது. இந்தப் பகுதியில் ஒரு வருடத்தின் பின்னர் நடைபெற்ற விபத்தாக நேற்றைய விபத்து அமைந்தது என்று அந்தப் பகுதி வர்த்தகர்கள் தெரிவித்தனர். (த-9)

## சமாதான நீதிவான்களுக்கு செப்ரெம்பர் மாதம் விருது

யாழ்ப்பாணம், ஜூன் 10

வடக்கு மாகாண சமாதான நீதிவான்கள் சங்கத்தின் முதலாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு சங்க அங்கத்தவர்களின் சேவையைப் பாராட்டி எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் விருது வழங்கப்படவுள்ளது என்று சங்கத் தலைவர் கலாநிதி கா.பீ.ஜெயவிந்தன் அறிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் உள்ள சமாதான நீதிவான்கள் அனைவரும் தங்களுடைய பதிவை இந்த மாதம் 16ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## இ.போ.ச. பேருந்தும் இராணுவ வாகனமும் விபத்தில் சிக்கின

### சேதம் எதுவுமில்லை

யாழ்ப்பாணம், ஜூன் 10

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்தும், இராணுவ வாகனமும் கோப்பாய் சந்திப் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை விபத்தில் சிக்கின. எனினும்சேதம் எதுவும்வாகனங்களுக்குஏற்படவில்லை.

இந்தப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்த வேலைக்காக மின்சாரம் தடைப்பட்டது. இதனால் கோப்பாய் சந்தியில் உள்ள வீதி சமிக்ஞை விளக்குகளும் செயற்படவில்லை.

இந்த வேளையில் யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி சென்ற வடபிராந்தியபோக்குவரத்துச்சபைபேருந்தும் மானிப்பாய் வீதியூடாக கைதடி நோக்கிப் பயணித்த இராணுவ வாகனமும் விபத்துக்குள்ளாகின. இந்தவிபத்தின்போது சேதங்கள்எதுவும்ஏற்படவில்லை. (ம-17)



## கடற்றொழிலாளர் சங்கத்துக்கு படகும் வாகனமும் அன்பளிப்பு

கிளிநொச்சி, ஜூன் 10

கிளாலி கடற்றொழிலாளர் சங்கத்துக்கு 2மில்லியன் ரூபா பெறுமதியான வாகனமும், 3மில்லியன் ரூபாபெறுமதியானபடகுத்தொகுதிகளும் கையளிக்கப்பட்டன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்சி.சிறீதரனின் நிதி ஒதுக்கீட்டில் அவரே இவற்றை நேற்று வழங்கினார்.

அந்தச் சங்க வளாகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடக்கு அபிவிருத்தி அமைச்சின் செயலர், யாழ்ப்பாண மாவட்டச் செயலர், பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைத் தலைவர் சு.சுரேன் மற்றும் அதிகாரிகள், அரசியல்வாதிகள், கிளாலி கடற்றொழிலாளர் சங்கப் பிரதி நிதிகள், பயனாளிகள் பலரும் கலந்து கொண்டனர். (த-222)

## கொழும்புத்துறைப் பகுதியில் கிராம எழுச்சி வேலைத்திட்டம்

கொழும்புத்துறை, ஜூன் 10

கிராம எழுச்சி வேலைத்திட்டங்கள் கொழும்புத்துறை பிரதேசத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் இந்த வேலைத்திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

வளன்புரம் வீதி, வசந்த புரம் குறுக்குவீதி, கொழும்புத்துறை மத்தி சங்கக்கடை வீதி மற்றும் வசந்தபுரம் விண்மீன் விளையாட்டு மைதானம் போன்றவை கிராம எழுச்சி வேலைத்திட்டத்தின் கீழ் சுமார் 35 லட்சம் ரூபா செலவில் சீரமைக்கப்படவுள்ளன. இந்த வேலைகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த வாரம் இடம்பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா யாழ். மாநகரமுதல்வர் இஆனோல்ட், பிரதி முதல்வர் ஈசன் உட்பட பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ம-17)

# கொடுப்பது போன்று கொடுத்து பிடுங்குகின்றார் மைத்திரிபால

## வனவளத் திணைக்களத்தின் செயற்பாட்டால் மக்கள் விசனம்

முல்லைத்தீவு,ஜூன் 10

அரச தலைவரின் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் யானை வேலி அமைக்க முற்பட்டவேளை மைத்திரியை அமைச்சராகக் கொண்ட வனவளத் திணைக்களம் அதனை தடுத்து நிறுத்தியுள்ளது.



அரச தலைவரின் நாட்டுக்காக ஒன்றிணைவோம் வேலைத்திட்டத்தின் கீழ் விசுவமடு, கல்மடு குளப்பகுதியில் இருந்து இடைக்காடு குளம் வரையிலான 22 கிலோமீற்றர் தூரம் யானை வேலி அமைப்பதற்கு 12 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு அதற்கான அனுமதியும் வழங்கப்பட்டது.

யானை வேலி அமைப்பதற்கான பணிகள் கடந்த வெள்ளிக்கிழமை கமநல சேவைகள் திணைக்கள உதவிஆணையாளர் எஸ்.புனிதகுமார்,வட்டார வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரி இ.டி.கேமஜித் அனுப்பிரிய, கமநல அபிவிருத்தி அலுவலர்களான எஸ்.சுகந்தன், பிரபாகரன் மற்றும் கிராம அலுவலகர் உள்ளிட்ட அதிகாரிகள் முன்னிலையில் தொடங்கப்பட்டது.

கனரக இயந்திரங்களைக் கொண்டு யானை வேலி அமைப்பதற்குப் பாதைஅமைக்கும் வேலைகள் முன்னெடுக்கபட்டுள்ள நிலையில் அந்தப் பகுதிக்கு வந்த வனவளத்திணைக்களத்தினர் காடுகளை அழிக்கவேண்டாம் எனத்தலையிட்டு அதனை நிறுத்தியுள்ளனர்.

குறித்த பகுதியில் யானை வேலி அமைப்பதற்காகக் கனரக இயந்திரம் கொண்டு காடுகளை அழிப்பதாகவும் அதற்கான அனுமதி இல்லை என்றும் அதனை உடனடியாக நிறுத்துமாறும் கோரிய நிலையில் குறித்த வேலைத்திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகச் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விசுவமடு பிரதேசத்தில் இருக்கும் மக்கள் நீண்டகாலமாக யானைவேலி அமைத்து தருமாறு கோரிக்கை விடுத்த நிலையில் நாட்டுக்காக ஒன்றிணைவோம் வேலைத் திட்டத்தில் யானை வேலி அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்ட போதும் அதனை வனவளத்திணைக்களத்தினர் தடுத்து நிறுத்தியுள்ளதாக பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ஐ-ரி3)



## ஆய்வுகூடமும், மாநாட்டு மண்டபமும் திறப்பு

வவுனியா,ஜூன் 10

வவுனியா மாவட்டத்தில் 20 மில்லியன் ரூபா செலவில் நிர்மாண தரக்கட்டுப்பாட்டு ஆய்வு கூடம் மற்றும் மாநாட்டு மண்டபம் என்பன கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டன.

வவுனியா தொடருந்து நிலையத்துக்கு அருகில் நிர்மாணத் தரக்கட்டுப்பாட்டு ஆய்வு கூடமும் கோயில்குளம் கமநல சேவைநிலையத்தில் அமைக்கப்பட்ட மாநாட்டு மண்டபத்தையும் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.எம்.பீ.வீரசேகர திறந்து வைத்தார்.

வவுனியா கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் விஜயகுமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் உதவி மாவட்ட செயலர் நா.கமலதாஸன், வடபிராந்திய முதன்மைப் பொறியிலாளர் தினேஸ்குமார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள், கமக்கார அமைப்பினர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

# அக்கராயன் குளத்தின் கீழான வயல் நிலங்கள் அதிகரிக்கும்

## கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 10

அக்கராயன் குளத்தில் போதிய நீர் உள்ள போதும், சட்டபூர்வப் பதிவுகள் இல்லை என்று கூறி எமக்கு நீர் வழங்குவதில்லை என்று அந்தப் பகுதி விவசாயிகளில் ஒரு பகுதியினர் குற்றஞ் சாட்டுகின்றனர்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர், அடுத்த ஆண்டு முதல் அனைத்து விவசாய நிலங்களும் உள்வாங்கப்படும் என்று குறிப்பிட்டார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பெரிய குளங்களில் அக்கராயன் குளமும் ஒன்று. அந்தக் குளத்தின் கீழ் தற்போது சட்டபூர்வமான பயிர்ச் செய்கை நிலங்களாக 2 ஆயிரத்து 790 ஏக்கர் நிலமே பதிவு செய்யபட்டுள்ளது.

"இந்தக் குளம் ஓரளவு சீரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. அதனால் முன்னரை விடவும் அதிகமான நிலத்தில் பயிர் செய்யும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்தக் குளத்தின் மூலம் நீர்வழங்கும் வசதி கொண்ட பகுதிகளையும் சட்டபூர்வமாக நீர் வரி இடாப்பில் உட்படுத்த வேண்டும். நாமும் சட்டப்படியான விவசாயிகள் என்ற உரித்தைப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும்." என்று நீர்வரி இடாப்பில் உள்வாங்கப்படாத அந்தப் பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகளிடம் கேட்டபோது, இந்தக் குளம் முழுமையான கொள்ளளவை அடையும்போது 3 ஆயிரத்து 300 ஏக்கர் நிலத்துக்கு நீர் வழங்க முடியும். அது மேலும் அதிகரிக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு என்றனர். நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளரிடம் இது தொடர்பாகக் கேட்ட போது, இந்தக் குளத்தின் கீழ் தற்போது 2 ஆயிரத்து 790 ஏக்கரே உத்தியோகபூர்வமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. பதிவின் அடிப்படையில் சட்டப்படியான நிலம் நூறுவீதம் அனுமதிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்.

இந்தக் குளத்தின் கீழ் நீர் வழங்கல் மேற்கொள்ளக் கூடிய எல்லைப் பரப்பில் உள்ள வயல் நிலங்களையும் நீர் வரி இடாப்பில் உள்வாங்கும் ஏற்பாட்டுகள் தற்போது நடைபெறுகின்றன. அடுத்த ஆண்டு முதல் அனைத்து விவசாய நிலங்களும் உள்வாங்கப்படும் என்று கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் குறிப்பிட்டார். (எ-105)



## ஆசிரியைக்கு ஈருருளி கையளிப்பு

முல்லைத்தீவு,ஜூன் 10

வட்டக்கச்சி மாயவனூரில் நடத்தப்பட்டுவரும் அறிவொளி கல்வி நிலையத்தில் கற்பிக்கும் ஆசிரியரின் கற்பித்தல் செயற்பாட்டை ஊக்குவிக்கும் நோக்கில் அவருக்கு ஈருருளி வழங்கப்பட்டது.

ஜேர்மன் இளையோர் அமைப்பின் நிதி உதவியுடன் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் கல்வி மேம்பாட்டுத்துறையால் இந்த உதவி அண்மையில் வழங்கப்பட்டது. (ஐ-222)



## விழிப்புணர்வுக் கலந்துரையாடல்

முல்லைத்தீவு,ஜூன் 10

மர முந்திரிகை நடுகை தொடர்பான விழிப்புணர்வுக் கலந்துரையாடல் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் அண்மையில் இடம்பெற்றது.

புதுக்குடியிருப்பு செயலர் பிரிவு பெண் தொழில் முயற்சியாளர் கூட்டுறவு சங்கத்தின் மூலம் 1/2 ஏக்கர் மாதிரி விவசாய தோட்ட பயனாளிகளுக்கு இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதில் இலங்கை மர முந்திரிகை கூட்டுத்தாபன பிராந்திய முகாமையாளர் சஞ்சீவன் மற்றும் பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-ரி1)



## சக்கர நாற்காலிகள் கையளிப்பு

முல்லைத்தீவு,ஜூன் 10

சிறப்புத் தேவையுடையோர்களுக்கு ஒரு தொகுதி சக்கர நாற்காலிகளும், வாழ்வாதார உதவித் திட்டங்களும் வழங்கிவைக்கப்பட்டன.

அரச தலைவர் செயலகத்தால் முன்னெடுக்கப்படும் கிராம சக்தி வேலைத்திட்டத்துக்கு அமைவாக மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சிறப்புத் தேவையுடையோருக்கே இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானால் கடந்த வெள்ளிக்கிழமை பயனாளிகளிடம் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் செல்வி.நிரஞ்சலா மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதேச சபை உறுப்பினர் சீலன், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இதே வேளை கரும்புள்ளியான் கிராமத்தில் பால் சேகரிக்கும் நிலையம் ஒன்றும் கடந்த வெள்ளிக் கிழமை காதர் மஸ்தானால் திறந்து வைக்கப்பட்டது. (ஐ-222)

# வடக்கு, கிழக்கு மாணவர்களுக்கு 1001 ஈருருளிகள் கையளிப்பு

கிளிநொச்சி,ஜூன் 10

கிளிநொச்சி மாவட்ட மக்கள் அமைப்பால் ஆயிரத்து ஒரு ஈருருளிகள் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வு கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்று முற்பகல் 9.30 மணியளவில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மக்கள் அமைப்பு கடந்த மார்ச் மாதம் லண்டனில் நடத்திய ஒன்றுகூடல் நிகழ்வில் பாடசாலை செல்ல சிரமப்படும் மாணவர்களுக்கு 500 ஈருருளிகள் சேகரித்து வழங்கும் திட்டம் பரிந்துரைக்கப்பட்டது.

இந்த நிலையில் புலம்பெயர்ந்து வாழும் கிளிநொச்சி பிரதேசத்தை சேர்ந்த கொடையாளிகள், ஏனைய பிரதேசத்தைச் சேர்ந்த கொடையாளிகளின் பங்களிப்புடனும், தாயக தொண்டர் நிறுவனங்களின் ஒருங்கிணைப்புடனும் ஆயிரத்து ஒரு ஈருருளிகள் சேகரிக்கப்பட்டன.



வடக்கு, கிழக்கைச் சேர்ந்த மாணவர்களுக்கு இந்த ஈருருளிகள் பகிர்ந்து வழங்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் யாழ்ப்பாண போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் சத்தியமூர்த்தி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொறியியல் பீட கிளிநொச்சி வளாகத்தின் பீடாதிபதி அற்புதராஜா உள்ளிட்ட கல்வியலாளர்கள் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-35)



## திடீரென தீப்பற்றியது அரச சொகுசு வாகனம்

வவுனியா, ஜூன் 10

வீதியில் பயணித்துக்கொண்டிருந்த அரச சொகுசு வாகனமொன்று நேற்றுமுன்தினம் திடீரென தீப்பற்றி எரிந்து சேதமானது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் பகல், ஏ9 வீதியில் வவுனியா கனகராயன்குளம் சோதனைச் சாவடிக்கு அண்மித்த பகுதியில் இடம்பெற்றது. யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கிப் பயணித்த சிவில் பாதுகாப்புத் திணைக்களப் பணிப்பாளருடைய வாகனமே இவ்வாறு தீயில் எரிந்து விபத்துக்கு உள்ளானது. தெய்வாதீனமாக பணிப்பாளரும், மற்றும் இரு அலுவலர்களும் காயங்கள் ஏதுமின்றித் தப்பித்தனர்.

தீ பற்றுவதற்கு இயந்திரக் கோளாறு காரணம் என்று ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளை கனகராஜன்குளப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-21)

# முல்லை ‘ஆமையன் குளம்’ ‘இப்பன் வெவ’ என மாறியது

*முல்லைத்தீவு, ஜூன் 10*

முல்லைத்தீவு வெலிஓயா பகுதியில் ‘ஆமையன் குளம்’ என்ற தமிழ் மக்களின் பூர்வீக குளத்துக்கு ‘இப்பன் வெவ’ என்று சிங்கள பெயர் சூட்டப்பட்டுள்ளது. அதை அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் திறந்துவைத்தார்.



நாட்டுக்காக ஒன்றிணைவோம் வேலைத் திட்டம் முல்லைத்தீவில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதன்போது பல பணிகள் நடைபெற்றன.

அதன் ஒரு கட்டமாகவே குறித்த குளத்தை பெயர் மாற்றம் செய்யப்பட்ட நிலையில் அரசதலைவர் திறந்து பயன்பாட்டுக்கு விடுவித்தார்.

அந்தப் பகுதி மகாவலி அபிவிருத்தி வலையத்துக்குள் அபகரிக்கப்பட்டு சிங்கள மக்களுக்காக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

பெயர் மாற்றம் செய்து மகாவலி அபிவிருத்தி வலையத்துக்குள் அந்தக் குளம் உள்வாங்கப்பட்டமை குறித்து அங்குள்ள தமிழ் மக்கள் கவலை தெரிவித்தனர். (த-ரி3)



முல்லைத்தீவு மணல் குடியிருப்பு வீதி சீரமைக்கப்பட்டு பொது மக்கள் பாவனைக்காக அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகனின் கிராமிய துரித அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் ஊடாக 20 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் குறித்த வீதி தாரிட்டுச் சீரமைக்கப்பட்டது. (த-213)

## உழவு இயந்திரம் தடம் புரண்டதில் இருவர் படுகாயம்

முல்லைத்தீவு, ஜூன் 10

முல்லைத்தீவு வற்றாப்பளை கேப்பாபிலவு வீதியில் உழவு இயந்திரம் தடம் புரண்டதில் அதில் பயணித்த இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்தது. மாமூலை முள்ளியவளையைச் சேர்ந்த க.ஜெயராசாசிங்கம் (வயது-55), வற்றாப்பளை முள்ளியவளையைச் சேர்ந்த பி.அகிலன் (வயது - 25) ஆகியோரே படுகாயமடைந்தனர். அவர்கள் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். முள்ளியவளைப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். (த-ரி3)



## மன்னாரின் நானாட்டானிலும் மாட்டு வண்டிச்சவாரி போட்டி

மன்னார், ஜூன் 10

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகளில் ஒன்றான இரட்டை மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி, மன்னார் மாவட்டத்தின் நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பரிகாரி கண்டல் இரட்டை மாட்டு வண்டிச் சவாரித் திடலில் நேற்று முந்தினம் நடைபெற்றது.

21 சோடி காளைகள் பங்குபற்றின. நான்கு பிரிவுகளாகப் போட்டிகள் நடைபெற்றன. மன்னார் மாவட்ட காளைகளின் சொந்தக்காரர்கள் மற்றும் யாழ்ப்பாண மாவட்ட காளைகளின் சொந்தக்காரர்களும் போட்டியில் பங்கு பெற்றினர்.

இந்தப் போட்டியில் நான்கு பிரிவுகளிலும் மன்னார் மாவட்டக் காளைகளின் உரிமையாளர்கள் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.


மாட்டு வண்டிச் சவாரிப் போட்டிகள் யாழ்ப்பாணத்தில் பல இடங்களிலும் நடைபெற்று வருகின்றது. அண்மையில் முல்லைத்தீவிலும் நடைபெற்றது. (த-56)

## இரு பாடசாலைகளுக்கு தண்ணீர்த் தாங்கிகள்

கிளிநொச்சி, ஜூன் 10

வவுனியா நித்தியநகர் லோகேஸ்வரா வித்தியாலயம், வவுனியா மணியர்குளம் வித்தியானந்தா வித்தியாலயம் ஆகிய இரண்டு பாடசாலைகளுக்கு 500 லீற்றர் கொள்ளளவுடைய ஒவ்வொரு தண்ணீர்த்தாங்கிகள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.

‘சிறகுகள் உயிர்மை செயற்றிட்டம்’ ஊடாக இவை வழங்கப்பட்டன. இதன் நிர்வாகப் பிரிவுத் தலைவி செல்வி ஜெ.ஜெனித்தா தலைமையில் நடைபெற்ற இந்தநிகழ்வில் தண்ணீர்த் தாங்கிகளுக்கான நிதியை பிரிட்டனைச் சேர்ந்த சிறகுகள் அமைப்பின் ஆர்வலர் ஒருவர் வழங்கியிருந்தார். (த-222)



## மாணவர்களுக்கு செயலமர்வுகள்

முல்லைத்தீவு, ஜூன் 10

முல்லைத்தீவு மாவட்டத்தில் ‘நாட்டுக்காக ஒன்றிணைவோம்’ செயற்றிட்டத்தில், பாடசாலைகளில் மாணவர்களின் மென்திறன்களை வளர்த்தெடுப்பதற்கான செயலமர்வுகளும் ஒழுங்கு செய்யப்பட்டன.

துணுக்காய் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) ஆ.சஞ்சீவனின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மல்லாவி மத்திய கல்லூரி, மாங்குளம் மகா வித்தியாலயம், ஆகிய பாடசாலைகளின் தரம் 10, 11 மாணவர்களுக்கான செயலமர்வுகள் மல்லாவி மத்திய கல்லூரி, மாங்குளம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் அண்மையில் நடைபெற்றன.

துணுக்காய் பிரதேச செயலக மேற்பார்வையில் நடைபெற்ற செயலமர்வின் வளவாளர்களாக உள மகிழ்வூட்டும் இல்லத்தின் நா.கு. மகிழ்ச்சிகரன், சு. இக்னேசியஸ் ஆகியோர் கலந்துகொண்டனர். (த-222)



## மாணவத் தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு

முல்லைத்தீவு, ஜூன் 10

முல்லைத்தீவு மாங்குளம் மத்திய மகா வித்தியாலய மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை காலை நடைபெற்றது.

வித்தியாலய முதல்வர் த.யோகானந்தராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக துணுக்காய் கல்வி வலய தமிழ்ப் பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் கவிதா சந்திரகுமார் கலந்துகொண்டார்.

சென்ற வருடம் மாணவத் தலைவர்களாக பதவி வகித்த மாணவர்கள், இந்த முறை மாணவத் தலைவர்களாகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை பாடசாலையின் நுழைவாயிலிலிருந்து ன் மேலைத்தேய மங்கள வாத்திய இசையுடன் முதன்மை மண்டபம் வரை அழைத்துவரப்பட்டு சின்னம் சூட்டும் நிகழ்வு இடம்பெற்றது.

மூத்த மாணவ தலைவனாக சந்திரசேகரம் துஷியந்தன், உதவி மாணவத்தலைவனாக சாந்தகுமார் தாஸ்கரன், மூத்த மாணவத்தலைவியாக சதீஸ்குமார் நிதர்சனா, உதவி மாணவத்தலைவியாக மகாலிங்கம் குவேனி ஆகியோர் உட்பட 21மாணவத் தலைவர்கள் சின்னம் சூட்டிமதிப்பளிக்கப்பட்டனர். (த-222)



## புலமைப்பரிசில் பரீட்சையில்
# மாவட்டத்தில் முதலிடம் பெற்ற துச்சாதனாக்கு சிறிசேன பாராட்டு

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் முதல் இடம் பெற்ற (195 புள்ளிகள்) பழம் பாசி மாமடு அ.த.க.பாடசாலை மாணவி இ.துச்சாதனா அரசதலைவரால் பாராட்டிமதிப்பளிக்கப்பட்டார். முல்லைத்தீவு மாவட்டத்துக்குப் பெருமை சேர்ந்த இந்த மாணவியின் கல்விச் செயற்பாட்டுக்குத் தொடர்ந்தும் உதவிகள் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் அரசதலைவர் மைத்திரிபால முல்லைத் தீவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். இந்த நிலையில் மாணவி பாராட்டப்பட்டு மதிப்பளிக்கப்பட்டார். (த-ரி3)



see more news in
NEWUTHAYAN.COM

# பௌத்த வாதத்தை தோற்கடிக்க தமிழரோடு இணைதல் அவசியம்

## தமிழீழ விடுதலை இயக்கச் செயலர் சிறிகாந்தா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 10

அச்சுறுத்தலுக்கும் அவமதிப்புக்கும் ஆளாக்கப்பட்டிருக்கும் சகோதர முஸ்லிம் சமூகத்துக்கு தமிழ்த் தேசிய அரசியற் சக்திகள், நீட்டும் நேசக்கரம் பற்றிப் பிடிக்கப்படுமானால், சிங்கள பௌத்த பேரினவாதத்தை அரசியல் ரீதியாகத் தோற்கடிப்பது சாத்தியமானது மட்டுமன்றி, சுலபமானதும் கூட.

இவ்வாறு தமிழீழ விடுதலை இயக்க செயலர் நாயகம் ந. ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.

அவர் விடுத்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அண்மையில் இஸ்லாமிய அடிப்படைவாதம் விடுத்திருந்த அச்சுறுத்தலை முறியடித்து, துடைத்தெறியும் நடவடிக்கைகளின் பெயரில், சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள் தமது நீண்ட கால நிகழ்ச்சி நிரலை முழுவீச்சுடன் முன்னெடுத்து நிற்கின்றன.

முன்னணியில் பௌத்தபிக்குகளும், பின்னணியில் அதிகார வெறிகொண்ட அரசியல் வாதிகளுமாக, சிங்கள பௌத்த பேரினவாதம் சீறிநிற்கின்றது.

இலங்கை சிங்கள பௌத்த நாடு என்ற வெறிக்கூச்சல் ஆக்ரோஷத்துடன் எழுப்பப்படுகின்றது.

அவசரகாலச் சட்டவிதிகள் நடைமுறைப்படுத்தப்படுகையில், தென்னிலங்கையின் பல்வேறு இடங்களில் முஸ்லிம் பொதுமக்களுக்கும் அவர்களின் சொத்துக்களுக்கும் எதிராக மட்டுமன்றி, பள்ளிவாசல்கள் மீதும் மேற்கொள்ளப்பட்ட வன்முறை வெறியாட்டங்கள் அனைத்தும், சிங்கள பௌத்தப் பேரினவாதத்துடன் கடந்த பல தசாப்தங்களாக சமரச சகவாழ்வுக் கொள்கையைக் கடைப்பிடித்து வந்திருக்கும் முஸ்லிம் அரசியற் தலைமைத்துவங்களுக்கு மறக்கவும், மறுத்துரைக்கவும் முடியாத அரசியற் பாடங்களைப் புகட்டியுள்ளன.

தமிழ் மக்களைப்போலவே, தமிழைத்தாய்மொழியாகக் கொண்ட முஸ்லிம் மக்களைப் பொறுத்தமட்டிலும், அவர்களின் சுயபாதுகாப்பு என்பது, அவர்களின் வரலாற்று ரீதியான வாழ்விடமான வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மட்டுமே சவாலுக்கு உட்படுத்தப்பட முடியாதது என்னும் உறைக்கும் உண்மை உலகறியச் சொல்லப்பட்டிருக்கின்றது.

போர் நிறைவடைந்து பத்து வருடங்கள் பறந்தோடி விட்ட பின்னரும்கூட புலிகளை மறக்காத மறக்க விரும்பாத சிங்களப் பேரினவாதிகள், கடந்த உயிர்த்த ஞாயிறன்று நிகழ்ந்த இஸ்லாமிய அடிப்படைவாதத் தாக்குதல்களைத் தொடர்ந்து "ஒட்டகங்களுக்கு" விடுத்த எச்சரிக்கைகள் எல்லாம் நடந்துமுடிந்த இடர்களுக்குப் பின்னரும் கூட, பேரினவாத சிந்தனையில் மாற்றம் எதுவும் இல்லை என்பதையே, சிறுபான்மை இனங்களுக்குச் சொல்லாமல் சொல்லியுள்ளன.

இந்த அரசியற் சூழலில், தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழர்களும், முஸ்லிம்களும், வேறு எதற்காக இல்லாவிடினும், தத்தமது இனங்களின் சொந்த நலனுக்காகவும், சுய பாதுகாப்புக்காகவும், இலங்கைத் தீவின் பெரும்பான்மை இனத்தின் பெயரால் முன்னெடுக்கப்பட்டிருக்கும் சிங்கள பௌத்த பேரினவாத நிகழ்ச்சி நிரலை ஒன்றுபட்டு எதிர்கொள்வதுபற்றி சிந்தித்துச் செயற்படவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

சிங்கள பௌத்த பேரினவாத அரசியல் தலைவர்கள் அனைவரும், அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமைஅமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச உட்பட, சிறுபான்மை மக்களின் உரிமைக் கோரிக்கைகளைப் பொறுத்தமட்டில், அடிப்படையில் ஒரேநிலைப்பாடு கொண்டவர்கள் என்பது உணரப்பட்டிருக்கிறது.

இப்போது எம் அனைவரினதும் எதிரில் நிற்பது வரலாற்றுச் சந்தர்ப்பம் எதுவெனில், 1961இல் வடக்கு கிழக்கு மாகாணங்களில், இரண்டு மாதங்கள் சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசின் நிர்வாக இயந்திரத்தையே நிலைகுலையச் செய்த சத்தியாக்கிரகப் போராட்டத்தின் போது, நிலைநாட்டப்பட்ட தமிழர்-முஸ்லிம் ஒற்றுமையை, மீளவும் கட்டி எழுப்புவதற்கு, இடர்களின் நடுவிலும், கிடைத்திருக்கும் ஓர் அருமையான சந்தர்ப்பம்.

இந்தச் சந்தர்ப்பம் சரியான முறையில் பயன்படுத்தப்படுமானால், இலங்கையின் இனப் பிரச்சினைக் கானஅரசியற் தீர்வைக் கூட அது நிச்சயம் நிர்ப்பந் திக்கும்.

ஆனால், தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் மத்தியில், சுயநல சந்தர்ப்பவாத அரசியலை தத்தமது இனத்தின் பெயரில் வெற்றிகரமாக நடத்திவந்திருக்கும் பல அரசியல்வாதிகளைப் புறந்தள்ளித் தான், சிங்கள பௌத்த பேரினவாதத்தை இரண்டு இனங்களும் எதிர்கொள்ளவேண்டியிருக்கும்.

ஏனெனில்சிங்கள பௌத்த பேரினவாதத்தோடு சமரசம் செய்யவும், அவ்வப்போது இணங்கியும், பிணங்கியும் குடித்தனம் நடத்தவும், அத்தகையவர்கள் எப்போதும் தயாராகவே இருந்து வந்துள்ளனர்- என்றுள்ளது. (த-ரி1)

---

# நாள்முழுதும் மக்கள் காத்திருக்க அமைச்சரோ கொழும்பு நிகழ்வில்

## வவுனியாவில் நேற்று இந்த நிலமை

யாழ்ப்பாணம், ஜூன் 10

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் புதிதாக சமுர்த்திக் கொடுப்பனவுக்கான உரிமம் வழங்கும் நிகழ்வுக்கு முற்பகல் 9 மணியில் இருந்து மாலை 3 மணி வரையும் ஆயிரக் கணக்கானோர் காத்திருக்க வைக்கப்பட்டனர் என்று மக்கள் விசனம் தெரிவித்தனர்.

மன்னார் மாவட்டத்தில் புதிதாக சமுர்த்திக் கொடுப்பனவு அனுமதிக்கப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கும் நிகழ்வு வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டது.

அதில் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர், மாவட்டச் செயலர், பணியாளர்கள், பயனாளிகள் என சுமார் ஆயிரம் பேர் முற்பகல்9 மணியிலிருந்து கூடியிருந்தனர்.

முற்பகல் 11 மணிவரை அமைச்சர் வருகை தராத நிலையில் இந்திய தலைமைஅமைச்சர் மோடியின் வருகைக்கான நிகழ்வில் கலந்து கொண்டுள்ளார் என்றும் நிகழ்வை ஒரு மணிவரை ஒத்தி வைக்குமாறு அறிவித்தல் வழங்கப்பட்டது. அனைவரையும் அங்கிருந்து சென்று மதியம் 12 மணிக்கு வருமாறு கூறி அனுப்பி வைக்கப்பட்டனர். அதன் பின்னர் 12.30 மணிக்கு நிகழ்வுக்காக அனைவரும் கூடினர். எனினும் பிற்பகல் 3 மணி வரைக்கும் அமைச்சர் குழாம் சமுகமளிக்கவில்லை. இதனால் சமுர்த்திப் பட்டியலுக்காக பயனாளிகள், அலுவலர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோர் நாள் முழுவதும் காத்திருந்தனர். பின்னர் 4.40மணியளவிலேயே அமைச்சர் வருகை தந்தார். (த-105)

---

# முஸ்லிம்களுக்கு இன்று நடப்பது நாளை தமிழர்களுக்கும் நடக்கும்

## சுமந்திரன் எம்.பி. தெரிவிக்கிறார்

கரவெட்டி, ஜூன 10

நாட்டில் இன்று பேரினவாத சிந்தனை மேலோங்கியுள்ளது. நாடாளுமன்றமோ நாடாளுமன்ற உறுப்பினர்களோ தேவை இல்லை. காவி உடை, உண்ணாவிரதம் இவர்களால் எதுவும் செய்யலாம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இன்று முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள நிலமை நாளை எங்களுக்கும் (தமிழர்களுக்கும்) நடக்கும். இப்படியான சூழ்நிலைக்கு நாங்கள் இடம் கொடுக்க முடியாது. இன்றைய சூழலில் நாடு ஒரு நாடாக இருக்க தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் அதன் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலகத்தில் சமுர்த்தி உரித்துக்களைப் பயனாளிகளுக்கு வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

**மகிந்தவுடன் 18 தடவை பேச்சு**

மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் 2007 வரை மகிந்தவுடன் 18 தடவைகள் பேச்சுக்கள் நடத்தியுள்ளோம். மகிந்த அரசுக்கு எதனையும் செய்ய மனம் இல்லை.

**மைத்திரி இதயத்தில் எழுதியிருந்தாராம்!**

அரசியல் தீர்வை மைத்திரி ஏற்றுக்கொண்டார். அதை எழுத்தில் வாங்கவேண்டும் என்று பலர் கூறினர். எழுத்தில் தந்தால் தேர்தலில் மைத்திரி தோற்பார். அதனால்தான் ஒப்பந்தம் எழுதுவதை நாங்கள்தான் மறுத்தோம். வெற்றிபெற்ற பின்னர் மைத்திரி யாழ்ப்பாணம் வந்தபோது மைத்திரியிடம் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ. சேனாதிராசா இதனைச் சுட்டிக்காட்டியிருந்தார். அதனை மைத்திரியும் ஏற்றுக்கொண்டார். அதுமட்டுமன்றி, அவை இதயங்களில் எழுதப்பட்டுள்ளன என்று மைத்திரி கூறியிருந்தார்.

**மைத்திரி ரணிலுக்கு துணிவில்லை**

கடந்த 4 வருடங்களில் முன்னேற்றம் பல இருந்தாலும் அரசியல் வரைவு வந்தால் அதை நிறைவேற்றும் துணிவு மைத்திரி -ரணில் ஆகியோருக்கு இல்லை. சூழ்நிலை சரியாக இல்லை எனக் காரணம் சொல்கிறார்கள்.

**சமுர்த்தி கிடையாதோருக்கு அடுத்தமுறை கட்டாயம்**

சமுர்த்தி அபிவிருத்தி அமைச்சர் தயா கமகே வடக்குக் கிழக்கில் சமுர்த்தி உரித்துத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டவர்களின் பெயர் விவரங்களை எங்களுக்கு வழங்கி அதில் விடுபட்டவர்களின் பெயர் விவரங்களைத் தருமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

எனவே சமுர்த்தி உரித்துக்கு தற்போது விடுபட்டவர்களுக்கு அடுத்த தடவை நிச்சயமாக இணைத்துக் கொள்ளப்படுவர். பெயர் விவரங்களை நாங்கள் சிபார்சு செய்வோம் - என்றார். (த-173)

---

# தொடருந்து நிலையங்கள் தனியாரின் பராமரிப்பில்!

கொழும்பு, ஜூன் 10

நாட்டிலுள்ள பல தொடருந்து நிலையங்களைத் தனியார் துறையினருடன் இணைப்பது தொடர்பாக ஆராயப்படுகின்றது என்று தொடருந்து நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஆனால் இந்த நடவடிக்கையால் தொடருந்து நிலையங்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதாக சங்கத்தின் செயலர் ஜனக பெர்னான்டோ குற்றஞ் சுமத்தியுள்ளார்.

பாதுகாப்புக்காக மறைகாணி கமராக்களைப் பொருத்துவதுடன் அதனை நிர்வகிக்கும்பொறுப்பையும் தாமே பொறுப்பேற்பதாக அறிவித்துள்ளதால், அதில் சிக்கல் ஏற்படுவதாகவும் தொடருந்துநிலையபொறுப்பதிகாரிகள்சங்கம்சுட்டிக்காட்டியுள்ளது. (எ)

---

# யாழ்ப்பாணத்தில் மிக வறுமையான பிரதேசமாக கோப்பாய் அமைகிறது

## சமுர்த்தி நிகழ்வில் தவிசாளர் நிரோஷ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 10

வறுமையை வெல்வதற்கான உத்தியாக சமுர்த்தியைக் கையாளவேண்டிய பொறுப்பு கல்வியாளர்கள், அரச அலுவலர்கள், குடிமக்கள் என சகல தரப்பிடமும் காணப்படுகிறது என்று வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

கோப்பாய் பிரதேச செயலகத்தின் கீழ் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட ஆயிரத்து 840 பயனாளிகளுக்கு சமுர்த்தி வழங்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை கோப்பாய் பிரதேச செயலர் சுபாஜினி மதியழகன் தலைமையில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் வறுமை ஒழிப்புக்காக அரசின் கொள்கையாக உருவாக்கப்பட்ட திட்டங்களில் ஒன்றாகவே சமுர்த்தித் திட்டம் அமைகின்றது. இந்தச் சமுர்த்தித் திட்டம் என்பது நிவாரணம் அல்ல. மாறாக குடும்பங்களை வறுமையில் இருந்து மீள்விப்பதற்கான உத்திகள் அடங்கிய செயற்றிட்டமாகும். போரின் பின்னர் பல்வேறு நெருக்கடிகளைக் கொண்டவர்களாக நாம்வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஏனைய பிரதேசங்களைக் காட்டிலும் கோப்பாய் பிரதேசமே யாழ்ப்பாணக் குடாநாட்டில்வறுமை நிலையில் அதிகமான பிரதேசமாக உள்ளது. எமது கோப்பாய் பிரதே சத்திலேயே சமுர்த்தி பெறும் குடும்பங்கள் அதிகமாகவுள்ளன - என்றார். (ம)

# வடக்கில் 1,69,202 பேர் வறட்சியால் பாதிப்பு

தெற்கில் மழை பொழிகின்ற போதும் வடக்கு மாகாணத்தில் வெயிலின் கொடுமை மக்களை வாட்டி வதைக்கிறது. யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய ஐந்து மாவட்டங்களும் வெயிலால் கடுமையான பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளன.

வடமாகாணத்தில் 47 ஆயிரத்து 589 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 59 ஆயிரத்து 202 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் நெடுந்தீவில் ஆயிரத்து 31 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 71 பேரும், வேலணையில் 2 ஆயிரத்து 798 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 642 பேரும், ஊர்காவற்றுறையில் 2 ஆயிரத்து 422 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 848 பேரும் மருதங்கேணியில் ஆயிரத்து 60 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 630 பேரும், காரைநகரில் 2 ஆயிரத்து 760 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 297 பேரும், சாவச்சேரியில் 3 ஆயிரத்து 361 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 484 பேரும், கரவெட்டியில் 336 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 64 பேரும் பாதிப்புக்களுக்கு உள்ளாகியுள்ளனர். இதைத் தவிர காரைநகரில் கடும் காற்றுக் காரணமாக இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த எட்டுப் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மீனவர்கள் இருவர் அங்கு காணாமல் போயுள்ளனர்.

வவுனியாவில் வவுனியா வடக்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 39 குடும்பங்களைச் சேர்ந்த 105 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் 2ஆயிரத்து 310 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 649 பேரும், முசலியில், 3 ஆயிரத்து 722 குடும்பங்களைச் சேர்ந்த 14ஆயிரத்து 627 பேரும், மாந்தை மேற்கில் 5 ஆயிரத்து 808 குடும்பங்களைச் சேர்ந்த 20 ஆயிரத்து 730 பேரும், மன்னார் நகரத்தில் வறட்சியால் 2 ஆயிரத்து 45 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 460 பேரும், மடுவில் 2 ஆயிரத்து 358 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 850 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 95 குடும்பங்களைச் சேர்ந்த 444 பேரும், பூநகரியில் 2 ஆயிரத்து 756 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 156 பேருமாக மாவட்டத்தில் மொத்தம் 4 ஆயிரத்து 771 குடும்பங்களைச் சேர்ந்த 16 ஆயிரத்து 636 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 967 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 296 பேரும், கரைதுரைப்பற்றுப் பிரதேச செயலர் பிரிவில் 10 ஆயிரத்து 799 குடும்பங்களைச் சேர்ந்த 33 ஆயிரத்து 797 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். மாவட்டத்தில் மொத்தமாக 12 ஆயிரத்து 766 குடும்பங்களைச் சேர்ந்த 40 ஆயிரத்து 93 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு வடக்கு மாகாணத்தில் மொத்தமாக 47 ஆயிரத்து 589 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 59 ஆயிரத்து 202 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-21)

# வட மாகாணத்தில் டெங்கு குறைந்தது

யாழ்ப்பாணம், ஜூன் 10

**அதிகமான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்ட மாவட்டங்களில் இரண்டாவது நிலையில் இருந்த யாழ்ப்பாண மாவட்டம் கடந்த மே மாதம் 8ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது . யாழ்ப்பாண மாவட்டம் உள்ளிட்ட வடக்கு மாகாணத்தில் டெங்கு நோய் குறைவடைந்தாலும், கடந்த மே மாதம் நாடு முழுவதும் உள்ள ஏனைய மாவட்டங்களில் டெங்கு நோயாளர்கள் அதிகமாக இனங்காணப்பட்டுள்ளனர்.**

டெங்குநோய் கட்டுப்பாட்டுப் பிரிவின் தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவினர் வாராந்தம் வெளியிடும் அறிக்கையிலேயே இந்தப் புள்ளிவிவரம் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் டெங்கு நோயாளர்கள் அதிகம் இனங்காணப்பட்ட மாவட்டங்களில் முதல் நிலையில் கொழும்பு மாவட்டமும், இரண்டாது இடத்தில் யாழ்ப்பாண மாவட்டமும் காணப்பட்டது. எனினும் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள சுகாதாரப் பிரிவினரின் தீவிர முயற்சியால் நடப்பாண்டில் ஜனவரி மாதம் முதல் கடந்த மே மாதம் வரை படிப்படியாக டெங்கு நோய் குறைந்து வந்தது. கடந்த மே மாதம் முழுவதும் யாழ்ப்பாணத்தில் 123 டெங்கு நோயாளர்களே இனங்காணப்பட்டுள்ளனர். இனிவரும் காலங்களில் இன்னும் டெங்கு நோயாளர்கள் குறைக்கப்பட்டு, டெங்கு நோய் அற்ற மாவட்டமாக யாழ்ப்பாணம் மாறும் என்று எதிர்ப்பார்க்கப்படுவதாக சுகாதார வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதே போன்று கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களிலும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மே மாதம் குறைவடைந்துள்ளது. வடக்கு மாகாணத்தில் டெங்கு நோயாளர்கள் குறைந்து காணப்பட்டாலும் நாடு முழுவதும் ஒப்பிடும் போது கடந்த ஏப்பரல் மாதத்தைக் காட்டிலும் மே மாதம் அதிகமான நோயாளர்கள் டெங்கு நோய் உள்ளவர்கள் என்று இனங்காணப்பட்டுள்ளனர். டெங்கு நோயாளர்கள் அதிகம் இனங்காணப்படும் மாவட்டமாக கொழும்பு தொடர்ந்தும் முன்னிலையில் உள்ளது. அதற்கு அடுத்தபடியாக காலி, கம்பஹா மாவட்டங்க்ள் இனங்காணப்பட்டுள்ளன. (ம-21)

## ஹெரோய்ன் வைத்திருந்தாரென வவுனியாவில் ஒருவர் கைது

வவுனியா, ஜூன் 10

ஹெரோய்ன் போதைப் பொருள் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர். வவுனியா தேக்கவத்தைப் பகுதியில் நேற்றுக்காலை 7மணியளவில் அவர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 2கிராம் 170மில்லிக்கிராம் ஹெரோய்ன் போதைப் பொருள் மீட்கப்பட்டது என்றும் அதே இடத்தைச் சேர்ந்த 45 வயதுடையவரே கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். அவர் விசாரணைகளின் பின்னர் வவுனியா நீதிவானிடம் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (து)



## நகரசபை கொல்களகுழியில் இறந்தோருக்கு அஞ்சலி

வவுனியா, ஜூன்10

வவுனியா நகரசபையின் கொல்கள குழியினுள் கடமையின்போது உயிரிழந்த நகரசபை ஊழியர்களின் 45ஆம்நாள்நினைவுதினம் தினம்நேற்றுக்கடைப்பிடிக்கப்பட்டது.

கடந்த ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி மாடு வெட்டும் கொல்களத்தைத் துப்பரவு செய்யும்பணியின்போது 4 ஊழியர்கள் விசவாயு தாக்கத்துள்ளாகி உயிரிழந்திருந்தனர்.

புதிய அரச பொது ஊழியர் சங்கத்தினர் வவுனியா நகரசபைமண்டபத்தில்நினைவஞ்சலி செய்தனர். சங்கத்தின் தலைவர் செ.செல்வேந்திரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மதத் தலைவர்கள், வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் வினோ நோகராதலிங்கம், நகரசபைத் தலைவர் இ.கௌதமன், நகரசபை உறுப்பினர்கள், தொழிற்சங்க உறுப்பினர்கள், தமிழ் விருட்சத்தின் தலைவர் மற்றும் உயிரிழந்தவர்களின் குடும்ப உறுப்பினர்கள் உட்படப் பலரும்கலந்து கொண்டிருந்தனர். (து)



கிளிநொச்சி திருமுறிகண்டி பொதுநோக்கு மண்டபத்தில் ஆயுர்வேத மருத்துவ முகாம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் அகிலன் மங்கள விளக்கேற்றி அதைத் தொடக்கி வைத்தார். 'அரசதலைவரின் நாட்டுக்காக ஒன்றிணைவோம்' நிகழ்ச்சியில் ஒன்றாக இது நடைபெற்றது. (222)

## கெரோய்ன் வைத்திருந்தாரென மன்னாரில் நபரொருவர் கைது



கெரோய்ன்போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்தார் என்றகுற்றச்சாட்டில் சந்தேக நபரொருவர் மன்னாரில் கைது செய்யப்பட்டார் என்று கடற்படை ஊடகம்தெரிவித்துள்ளது.

கடற்படையினர் மற்றும் தலைமன்னார்பொலிஸார்இணைந்துநேற்றுமுன்தினம்நடத்திய சோதனைநடவடிக்கையில்தலைமன்னார்பகுதியில்வைத்து 40மில்லி கிராம்கெரோய்னுடன்நபர்ஒருவர்கைதுசெய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தலைமன்னார் பகுதியில் வசிக்கின்ற 24 வயதுடையவர் என்று தெரியவருகிறது. குறித்த நபர் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக தலைமன்னார் பொலிஸ் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-7)



முன்னாள் போராளியொருவரின் குடும்பத்துக்கு வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் இ.ஜெயசேகரன் வாழ்வாதாரதுக்குத் தேவையான உதவியை நேற்று வழங்கினார். இந்து சமய பேரவை மண்டபத்தில் வைத்து இந்த உதவித் தொகையை அவர் வழங்கினார். (ம-7)

# ஆலய பிணக்குகளைத் தீர்க்க அமைச்சர்மனோ நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 10

சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார், நெடுங்கேணி ஆதிலிங்கேஸ்வரர், திருகோணமலை கிண்ணியா பிள்ளையார் ஆலய விவகாரங்களை நேரில் ஆராய்ந்து தீர்வு காணும் வகையில் இந்து கலாசார அமைச்சர் மனோ கணேசன் நேரில் பயணிக்கவுள்ளார்.

அவரது ஊடகப் பிரிவு இதனைத் தெரிவித்தது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தை பௌத்த துறவி ஆக்கிரமித்து விகாரை ஆக்க மிக்க முயற்சிக்கிறார். நெடுங்கேணி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் அமைந்துள்ள பிரதேசம் தமது ஆளுகைக்கு உட்பட்டது எனத் தெரிவித்து தொல்பொருள் திணைக்களம் ஆலயப் பணிக்குத் தடை விதிக்கின்றது. திருகோணமலை கிண்ணியாப் பகுதியில் தமிழர்களின் தொன்மையான பிள்ளையார் ஆலயத்தை இடித்து அங்கும் புத்தவிகாரை அமைக்கும் பணிகள் இடம்பெறுகின்றன.

இவற்றின் மூலம் வடக்கு-கிழக்கில் இந்து மதம் அழிக்கப்படுவதோடு வேண்டுமென்றே சிங்கள குடியேற்றத்துக்குத் திட்டமிடப்படுவது தொடர்ந்தும் சுட்டிக்காட்டப்பட்டாலும் சர்ச்சைக்குத் தீர்வு கிட்டவில்லை. இதனால் குறித்த விடயங்கள் தற்போது இந்து கலாசார அமைச்சரான மனோ கணேசனின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. இதனையடுத்து குறித்த விவகாரங்களை நேரில் ஆராய்ந்து தீர்வு காணும் வகையில் இந்து கலாசார அமைச்சர் நாளை திங்கட்கிழமை நேரில் பயணிக்கின்றார் என்று அவது ஊடகப் பிரிவு தெரிவித் தது. (து-105)

# மைத்திரிபாலவின் திறனற்ற நிர்வாகத்தாலேயே நெருக்கடி

## சாடுகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, ஜூன் 10

அரச தலைவர் சிறிசேன தனது வீட்டை நிர்வகிப்பது போன்று நாட்டின் தேசிய நிர்வாகத்தைக் கையாண்டுள்ளமையே பல்வேறு நெருக்கடிகளுக்கும் காரணமாக அமைந்துள்ளது. அந்த உண்மைகளை வெளிக்கொண்டுவரும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் விசாரணைகளை நிறுத்துவதற்கு அரச தலைவர் முயற்சிப்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. அதற்கான அதிகாரங்கள் அவருக்குக் கிடையாது.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது. அரச தலைவரின் நிலைப்பாடு தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்கவிடம் வினவிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவர் வேட்பாளராக மீண்டும் களமிறங்க வேண்டும்என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் கடிதம் ஒன்றை அரச தலைவரிடம் கையளித்துள்ளமை ஓர் அரசியல் நகைச்சுவையாகும்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பில முன்வைக்கும் விமர்சனங்கள் எவ்வித அடிப்படைகளுமற்ற கருத்துக்கள் என்றே தோன்றுகிறது. உயிர்த்த ஞாயிறுதினக்குண்டுத்தாக்குதல்கள் எவ்வாறு நடைபெற்றன, அவை தடுக்கப்பட்டிருக்கக் கூடியவையா என்ற விடயங்கள் தொடர்பில்கண்டறிய வேண்டியது நாடாளுமன்றத்தின் பொறுப்பாகும்.

குண்டுத்தாக்குதல்கள் குறித்து விசாரணைகளை மேற்கொண்டுவரும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் விசாரணைகளின் இரகசிய புலனாய்வுத் தகவல்கள் எவையும் முன்வைக்கப்படவில்லை. அவ்வாறிருக்க விசாரணையின் விவரங்கள் ஊடகங்களில் வெளிப்படுத்தப்படுவதால் எவ்வாறு தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்று புரியவில்லை.

நாட்டின் தேசிய நிர்வாகத்தை முழுவதுமாக சீர்குலைத்து, தனது வீட்டை நிர்வாகம் செய்வதைப் போன்று அரச தலைவர்சிறிசேன செயற்பட்டதாலேயே தற்போது பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அந்த உண்மைகள் தெரிவுக் குழுவின் விசாரணைகளின் ஊடாக வெளிக்கொண்டு வரப்படும் போது அதைத் தடுப்பதற்கு அவர் முயற்சிக்கின்றார். அதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. அதே போன்று தெரிவுக்குழுவின் செயற்பாடுகளைநிறுத்துவதற்கு அரச தலைவருக்கு அதிகாரமும் இல்லை.

அடுத்த அரச தலைவர் தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்க வேண்டும் என்று கோரி, சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் அரச தலைவர் சிறிசேனவிடம் கடிதமொன்றைக் கையளித்துள்ளனர். அரசியலில் மிக முக்கியமான சம்பவங்கள் இடம்பெறுவதைப் போன்றே நகைச்சுவையான விடயங்களும் இடம்பெறுவதுண்டு. இந்த விடயம் ஒரு அரசியல் நகைச்சுவை என்றேகருதத் தோன்றுகிறது. - என்றார்.

அதேவேளை, உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்றதொடர் குண்டுத்தாக்குதல்கள் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் விசாரணைகளின் விவரங்கள் ஊடகங்களில் பகிரங்கமாக வெளியிடப்படுவது நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்று கூறி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தனது அதிருப்தியை வெளியிட்டிருந்தார். ஆனால் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் விசாரணைகள் தொடர்ச்சியாக நடைபெற்று வந்தன.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு அவசர அமைச்சரவைக் கூட்டத்துக்கு அழைப்புவிடுத்த அரசதலைவர்சிறிசேன, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் செயற்பாடுகள் தொடருமானால் என்னுடனான பயணத்திலிருந்து விலகுங்கள் அல்லது என்னை விலக்கி விடுங்கள் என்று கடுந்தொனியில் எச்சரித்திருக்கிறார். (எ-31)

# தனக்கு ஆபத்து என்றவுடன் கொந்தளிக்கிறார் மைத்திரி

## இப்படிக் கூறுகின்றது பெரமுன



கொழும்பு, ஜூன் 10

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் செயற்பாடுகள் தனக்கு எதிராக இருக்கின்றமையால்தான் அதை நிறுத்த வேண்டும் என்று கூறுகின்றார். ஐக்கிய தேசியக் கட்சிக்கும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சார்பாகவே தெரிவுக்குழு செயற்படுகின்றது என்பது இப்போதுதான் அவருக்குத் தெரிய வந்துள்ளதா?

இவ்வாறு கூட்டு எதிரணி நாடாளுமன்றஉறுப்பினர் செஹான் சேமசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் செயற்பாட்டை நிறுத்த வேண்டும் என்று கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற சிறப்பு அமைச்சரவைக் கூட்டத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கடும் தொனியில் கூறியிருந்தார். அது தொடர்பாக சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் (பெரமுன) நிலைப்பாடு தொடர்பாகக் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தன்னை பாதுகாத்துக் கொள்வதற்காகவே அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவுக்குழுவின் செயற்பாட்டை இடைநிறுத்த வேண்டும் என்று கூறியுள்ளார். ஆனால் எதிக்கட்சி என்ற ரீதியில் நாம் அனைவரும் ஆரம்பத்திலிருந்தே தெரிவுக்குழுவின் செயற்பாடுகளை எதிர்த்ததுடன், அதில் பங்கேற்கவும் இல்லை. நாட்டைப் பற்றி அறிவுபூர்வமாக சிந்திக்கும் ஒரு தலைவராக அரச தலைவர் இருந்திருந்தால் தெரிவுக்குழு கூடுவதற்கு முன்னரே அதைத் தடுத்து நிறுத்தியிருப்பார். நெருக்கடியான நிலமையில் சிந்தித்து சிறந்தவொரு தீர்மானத்தை எடுக்க முடியாத ஒரு பலவீனமானவர் நாட்டில் தலைவராக இருக்கின்றார்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், அரச தலைவருக்கும் இடையில் உள்ள தனிப்பட்ட முரண்பாட்டால் தலைமை அமைச்சர் தெரிவுக்குழுவை தனக்குச் சார்பாகவும், அரச தலைவருக்கு எதிராகவும் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றார். தெரிவுக் குழு உறுப்பினர்களும் தலைமை அமைச்சர்களுக்கும் ஏற்றவாறேசெயற்படுகின்றனர். புலனாய்வுத்துறை அதிகாரிகள் சாட்சியமளிக்கும் போது அவர்கள் கூறும் விடயங்களை ஊடகங்களில் வெளியிடுவது பயங்கரவாதிகளுக்கும், மோசடிக்காரர்களுக்கும் உதவியாக அமையும். அரச தலைவரும்; தலைமை அமைச்சரும் மாத்திரமின்றி சபாநாயகர் கருஜய சூரியவும் இந்த விடயத்தில் சிந்திக்காமல் செயற்படுகின்றார். நாடாளுமன்ற வரப்பிரசாதங்களைப் பயன்படுத்தி தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் செயற்படுகின்றார். இந்த விடயத்துக்கு அவரும் பொறுப்பேற்க வேண்டும்.

தெரிவுக்குழுவின் செயற்பாட்டை நிறுத்த வேண்டும் என்று அரச தலைவர் கூறிய கருத்தை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால் அதை அவர் ஆரம்பத்திலிலேயே செய்திருக்க வேண்டும். அரச தலவைர் சிறிசேன பல சந்தர்ப்பங்களில் ஐ:தே.கவைப் பாதுகாத்ததன் விளைவு இன்று அவருக்கு எதிராகத் திரும்பியுள்ளது. மீண்டும் அந்த தவறை செய்யக் கூடாது.

ரிசாத் பதியுதீனைப் பாதுகாப்பதற்காக முஸ்லிம் அமைச்சர்கள் அனைவரும் கூட்டாக பதவி விலகியமை சாதாரண முஸ்லிம் மக்களையே பாதித்துள்து. முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காகவே பதவியிலிருந்து விலகினேன் என்று ரவுப் ஹக்கீம் கூறினார். அவர் கூறியது உண்மையென்றால் அவர் தெரிவுக்குழுவில் இருந்து விலக வேண்டும். - என்றார். (எ-61)

# சட்டவிரோத மீன்பிடி 7 பேர் கைது

கொழும்பு, ஜூன் 10

திருகோணமலை மலைமுந்தலில் சட்டவிரோத முறையில் மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர்கள் 7 பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படை ஊடகப்பேச்சாளர் லெப்டினன் கொமாண்டர் இசுறு சூரிய பண்டார தெரிவித்தார்.

கிழக்கு கடற்படை கட்டளைப்பிரிவால் மேற்கொள்ளப்பட்ட ரோந்து நடவடிக்கையின்போது மீன்பிடிப்படகொன்று அவதானிக்கப்பட்டுள்ளது. அதைச் சோதனையிட்டபோது சட்டவிரோதமான முறையில் மீன்பிடியில் ஈடுபட்டமை கண்டறியப்பட்டது. அதையடுத்து படகில் இருந்த சந்தேநபர்கள் கைது செய்யப்பட்டனர். சந்தேக நபர்கள் 18 மற்றும் 27வயதுடையவர்கள் என்றும், ஈச்சலம்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் கடற்படையினர் தெரிவித்தனர்.

டிங்கி படகு மற்றும் எஞ்சின் படகு என்பனவும் சட்டவிரோத மீன்பிடி வலை என்பன கைப்பற்றப்பட்டன என்றும், சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக திருகோணமலை மீன்வள முகாமைத்துவ பணிப்பாளர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் கடற்படையினர் தெரிவித்தனர். (எ-71)

# பெரமுனவைத் தவறாக சித்தரிக்க முயற்சிக்கின்றதாம் ஆளும் தரப்பு

கொழும்பு, ஜூன் 10

சிறிலங்க பொதுமக்கள் முன்னணியின் (பெரமுன) உறுப்பினர்கள் ஒட்டுமொத்த முஸ்லிம் மக்களுக்கும் எதிரானவர்கள் என்ற தவறான நிலைப்பாட்டை ஆளும் தரப்பு உருவாக்க முயற்சிக்கின்றது. முஸ்லிம் மக்களுக்கு எதிராகச் செயற்பட வேண்டிய அவசியம் எமக்குக் கிடையாது. அடிப்படைவாத அமைப்புக்கள் அனைத்துக்கும் நாம் எதிரானவர்கள். அதில் இஸ்லாமிய அடிப்படைவாதம் ஒன்றும் விதிவிலக்கல்ல.

இவ்வாறு தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் திலும் அமுனுகம.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:

நிகழ்கால அரசியல் நிலவரங்களுக்கும்சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக்கும் எந்தவித தொடர்பும் கிடையாது. அரசின் முறையற்ற நிர்வாகமும், அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சருக்கும் இடையிலான போட்டித்தன்மையுமே அனைத்து பிரச்சினைகளுக்கும் மூல காரணம். எதிர்கட்சி என்ற நிலையில் இருந்து அரசை எதிர்த்துள்ளோம்.

பொதுமக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் முஸ்லிம் சமூகத்துக்கு எதிரானவர்கள் என்ற எண்ணத்தை பாதிக்கப்பட்டுள்ள மக்கள் மத்தியில் அரசு எதிர்கால தேர்தல் தேவையைக் கருத்தில் கொண்டு பதியவிடுகின்றது. ஏப்ரல் 21ஆம் திகதி அடிப்படைவாதிகளால் நடத்தப்பட்ட தாக்குதல் ஒரு இனத்துக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த இலங்கை வாழ் மக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

முஸ்லிம் மக்களுக்கு எதிராகச் செயற்பட வேண்டிய அவசியம் கிடையாது. இஸ்லாம் மதத்தின் கோட்பாடுகளுக்கு அப்பால் சென்று அடிப்படைவாத கொள்கைகளை முன்னிலைப்படுத்தி செயற்படும் இஸ்லாமிய அடிப்படைவாதத்தையே நாங்கள் கடுமையாக எதிர்க்கின்றோம். மதங்களை அடிப்படையாக கொண்டு செயற்படும் அடிப்படைவாத அமைப்புக்களும்துடைத்தெறியப்படவேண்டும். இதில் இஸ்லாமிய அடிப்படைவாதம் ஒன்றும் விதிவிலக்கல்ல - என்றார். (எ-31)

# சிறப்புப் பொலிஸ் குழுவில் இதுவரை 5 முறைப்பாடுகள்

கொழும்பு, ஜூன் 10

முன்னாள் ஆளுநர்களான எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லா, அசாத் சாலி மற்றும் அமைச்சர் ரிசாத் பதியுதீன் ஆகியோருக்கு எதிராக நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வரை 5 முறைப்பாடுகளே பதிவாகியுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

முன்னாள் ஆளுநர்களான எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லா, அசாத் சாலி மற்றும் அமைச்சர் ரிசாத் பதியுதீன் ஆகியோருக்கு எதிராக முறைப்பாடுகளைப் பதிவு செய்வதற்கு மூத்த பொலிஸ் அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று கடந்த 4ஆம் திகதி நியமிக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ் .பீ. திசநாயக்கவால் செய்யப்பட்ட முறைப்பாட்டுடன் அந்தக் குழுவில் இதுவரை 5 முறைப்பாடுகளே பதிவு செய்யப்பட்டுள்ளன.

முன்னதாக மல்லவ ஆராச்சி கமகே அசேல சம்பத் , சட்டத்தரணி இந்திர சிறி சேனாரத்ன மற்றும் மடில்லே பஞ்ஞாலோக தேரர் ஆகிய மூவரால் முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதினுக்கு எதிராக முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. தித்த கல்ல கமகே அஜித் பிரசன்னப்பிரிய என்பவரினால் முன்னாள் ஆளுநர் அசாத் சாலிக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாடுகள் தொடர்பிலான விசாரணைகளை குற்ற புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (எ-71)

## ஜவாத் எனக் கூறி கப்பம் கேட்ட மூவர் பொலிஸாரின் பிடிக்குள்

கொழும்பு, ஜூன் 10
தம்புளை - ரஜமஹா விகாரையின் பௌத்த மத குருவை அச்சுறுத்திப் பணம் பெற முயற்சித்த குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ரஜமஹா விகாரையின் நிதிகளுக்குப் பொறுப்பாக உள்ள பௌத்த மதகுருவான அம்பகஹவெவ ராகுல தேரரை அச்சுறுத்தியே 100 மில்லியன் ரூபா பணத்தைக் கப்பமாகப் பெற இவர்கள் முயற்சித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அம்பகஹவெவ ராகுல தேரருக்குக் கடந்த மே மாதம் 21ஆம் திகதி ஜவாத் அமைப்பு எனும் பெயரில் கப்பம் கேட்டு அச்சுறுத்தல் அழைப்பொன்று வந்துள்ளது என்றும், இந்த விடயம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போதே குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். 16, 25 மற்றும் 34 வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். குற்றத்துக்காகப் பயன்படுத்தப்பட்ட 3 தொலைபேசிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தம்புள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# அரேபியக் கலாசாரமே சிக்கலுக்குக் காரணம்

## முஸ்லிம் தலைவர்களிடம் எடுத்துரைத்தார் மகிந்த

கொழும்பு, ஜூன் 10
இலங்கையின் முஸ்லிம் சமூகம் தங்களது கலாசாரத்தை அரேபிய மயமாக்குவதை நிறுத்தி விட்டுப் பாரம்பரியமான இலங்கை முஸ்லிம் கலாசாரத்துக்குத் திரும்ப வேண்டும் என்று முன்னாள் அரச தலைவரும், தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்ச கேட்டுக்கொண்டார்.

அமைச்சுப் பதவிகளிலிருந்து கூண்டோடு கடந்த வாரம் விலகிய ஒன்பது முஸ்லிம் தலைவர்களையும் நேற்று முன்தினம் சனிக்கிழமை கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அப்பாவி முஸ்லிம்களைப் பாதுகாக்க சிறிசேன - விக்கிரமசிங்க அரசு தவறிவிட்டது. முஸ்லிம்கள் ஒரு சமூகம் என்ற வகையில் சில வகையான ஆத்ம பரிசோதனை செய்து, மக்களின் ஆத்திரத்தைச் சம்பாதிக்க வேண்டிய நிலை ஏன் வந்தது என்று தங்களுக்குள் தாங்களே கேட்டுக்கொள்ள வேண்டும் என்று மகிந்த இந்தச் சந்திப்பில் குறிப்பிட்டுள்ளார்.

தீவிரவாதிகள் பற்றி பொலிஸாருக்குத் தாங்கள் முன்னர் முறைப்பாடு செய்திருந்தோம் என்று முன்னாள் முஸ்லிம் அமைச்சர்கள் ராஜபக்சவிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இன்றைய பிரச்சினை ஒரு சில ஜிகாதிகளின் நடவடிக்கை என்பதற்கு அப்பால் ஆழமானதாக இருக்கிறது. முஸ்லிம் சமூகத்தவர்கள் தங்களை அரேபிய மயமாக்கும் போக்கு அதிகரித்து, அந்தச் சமூகத்தின் இலங்கை அடையாளத்தைப் படிப்படியாக இழக்கத் தொடங்கியதன் விளைவாகவே இன்றைய பிரச்சினை வளர்ந்தது என்று மகிந்த ராஜபக்ச குறிப்பிட்டுள்ளார்.

அராபிய மயமாக்கல் இலங்கையில் ஏனைய சமூகங்களிடம் இருந்து முஸ்லிம் சமூகத்தை அந்நியப்படுத்திவிட்டது என்று சுட்டிக்காட்டிய மகிந்த ராஜபக்ச, அரேபிய மயமாக்கல் கொண்டு வந்த இந்த அந்நியமாக்கல், நல்லிணக்கத்துக்கு ஊறுவிளைவிக்கும் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்.

முஸ்லிம் கலாசாரத்தின் ஒரு அங்கமே அரேபியத்தன்மை என்று முஸ்லிம் தலைவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இலங்கை முஸ்லிம்கள் தங்களுக்கென சுதேசிய கலாசாரமொன்றைக் கொண்டிருந்தார்கள். அதன் அரேபிய மயமாக்கல் ஒரு பத்து அல்லது பதினைந்து வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்ததுதான். பாராம்பரிய முஸ்லிம் கலாசாரம் என்ன என்பது எனக்குத் தெரியும். ஏனென்றால் எனது சொந்த மாவட்டமான அம்பாந்தோட்டையில் கணிசமான எண்ணிக்கையில் முஸ்லிம்கள் வாழ்கிறார்கள் என்று மகிந்த ராஜபக்ச பதிலளித்துள்ளார்.

கொடுமைப்படுத்தப்படுவதிலிருந்து முஸ்லிம் மக்களைப் பாதுகாப்பதற்கு ராஜபக்ச குரல் கொடுக்க வேண்டுமென்று முஸ்லிம் தலைவர்கள் கோரிக்கை விடுத்தபோது, தான் ஏற்கனவே அவ்வாறு செய்து கொண்டிக்கின்றேன் என்றும், ஆனால் மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசுக்கே உரியது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முஸ்லிம் தலைவர்களும் இது விடயத்தில் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்ட ராஜபக்ச, முஸ்லிம் அமைச்சர்கள் கூண்டோடு பதவி விலகியதால் பிரச்சினை மேலும் இனவாதமயப்படுத்தப்பட்டு ஏனைய சமூகங்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையிலான பிளவை அதிகரிக்கச் செய்துவிட்டது என்றும் குறிப்பிட்டுள்ளார். (எ)



## சிறுத்தையை வேட்டையாடி இறைச்சி விற்றவர் கைது!

பொகவந்தலாவ, ஜூன் 10
சிறுத்தைக் குட்டியை வேட்டையாடி அதன் இறைச்சியை விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டில் நோர்வூட் பொலிஸாரால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் நடந்துள்ளது.

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டிக்கோயா, சாஞ்சிமலை கீழ் பிரிவு தோட்டத்தில் சிறுத்தைப் புலிக் குட்டியை வேட்டையாடிய இந்த நபர் அதன் இறைச்சியை விற்பனைக்காக வைத்திருந்தார் என்றும் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சிறுத்தைப் புலி குட்டியின் தலை, கால்கள் மற்றும் ஒரு தொகை இறைச்சி என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. மிகுதி இறைச்சி பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்று நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர். (எ)

## மதுபோதையில் அட்டகாசம்; அடித்துக் கொன்ற மனைவி!

கொழும்பு, ஜூன் 10
ஹற்றன்-கொழும்பு முதன்மை வீதியின் வட்டவளைப் பகுதியில் தனது கணவனை இரும்பால் தாக்கி கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் மனைவியை வட்டவளைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். நேற்று அதிகாலை ஒரு மணி அளவில் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று வட்டவளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது என்றும், கணவன் மதுபோதையில் இருந்தவேளையில் அதிகாலை ஒரு மணி அளவில் ஆழ்ந்த நித்திரையில் இருந்த கணவனின் தலையில் இரும்பால் தாக்கி மனைவி கொலை செய்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

கொலை செய்த பின் குறித்த பெண் வட்டவளைப் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். உயிரிழந்தவர் 44 வயதுடையவராவார். தற்போது சடலம் சட்ட மருத்துவ அதிகாரியின் பரிசோதனைக்காக நாவலபிட்டிய மாவட்ட மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று வட்டவலை பொலிஸார் தெரிவித்தனர். (எ)



## சமூக வலைத்தள கட்டுப்பாடு தொடர்பாக சட்டத் திருத்தம்

கொழும்பு, ஜூன் 10
முகப்புத்தகம் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை மற்றும் அது தொடர்பான சட்டத் திருத்தங்களை மேற்கொள்ளல் குறித்து தேசிய பாதுகாப்புத் தொடர்பான துறைசார் கண்காணிப்புக் குழு, அவதானம் செலுத்தியுள்ளது.

தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதியான நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த அமரவீர இதனை தெரிவித்துள்ளார்.

அண்மையில், நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற குறித்த குழுவின் கூட்டத்தின்போது, இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் அதிகாரிகள் அழைக்கப்பட்டிருந்தனர்.

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் கருத்து மற்றும் காணொலிகளைப் பதிவிடுதல் மற்றும் சமூக வலைத்தளம் ஊடாக வெறுப்புணர்வை பரப்புதல் முதலான செயற்பாடுகளின் காரணமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# அரசியல் ஆதிக்கத்தைத் தவிர்த்தால் நாடு முன்னேற்றம் அடையமுடியும்

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 10
நாடு பொருளாதார ரீதியில் முன்னேற்றமடையவேண்டுமாயின் அரசியல் அனைத்துத் துறைகளிலும் தாக்கம் செலுத்தக் கூடாது. அரசியல் கட்சி ரீதியில் மாத்திரமே செல்வாக்குச் செலுத்த வேண்டும். ஆனால் நடைமுறையில் மதம் உள்ளிட்ட அனைத்திலும் அரசியலே ஆதிக்கம் செலுத்துகின்றது.

இவ்வாறு சுகாதாரத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

களுத்துறைப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது நாட்டில் அனைத்து வளங்களும் காணப்படுகின்றது. ஆனால் அனைத்திலும் அரசியல் கருத்துக்களே முன்னிலைப்படுத்தப்படுகின்றன. இந்த நிலைமை மாற்றியமைக்கப்பட வேண்டும். குறுகிய காலத்துக்குள் அனைத்து துறைகளும் முன்னேற்றமடைந்துள்ளன. குறிப்பாக சுகாதாரத்துறையில் பல நவீன தொழிநுட்பங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுச் சாதாரண தரப்பினரும் உயர் தொழினுட்பங்களை உள்ளடக்கிய மருத்துவத்தைப் பெற்றுக் கொள்ளும் வசதிகள் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இன்று அரசியலில் பல கேள்வி நிலை எழுந்துள்ளது. பல உண்மைத் தன்மைகளை மக்களால் அறிந்துக் கொள்ள முடிகின்றது. இந்த விடயங்களை மக்கள் தமது அரசியல் தீர்மானங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

எந்த கட்சியிடம் அடுத்த அரசை ஒப்படைக்க வேண்டும் என்பதை நாட்டு மக்களே தீர்மானிக்க வேண்டும் -என்றார். (எ-61)

## சாய்ந்தமருது தற்கொலையாளிகள் மரபணு அறிக்கை அடுத்த வாரம்

கொழும்பு, ஜூன் 10
கல்முனை – சாய்ந்தமருது தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் உடற்பாகங்களிலிருந்து பெறப்பட்ட மாதிரிகளின் மரபணுப் பரிசோதனை அறிக்கையை அடுத்த வாரம் வெளியிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இந்தச் சடலங்களிலிருந்து பெறப்பட்ட மரபணு மாதிரிகள் பழுதடைந்தமையால், புதிய மாதிரிகளைப் பெறுவதற்காகச் சடலங்கள் மீண்டும் தோண்டப்பட்டன என்று அரச இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இந்த மாதிரிகள் கடந்த வெள்ளிக்கிழமை சட்ட மருத்துவ அதிகாரிகளூடாக அரச இரசாயனத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டன. இந்த மரபணு பரிசோதனை அறிக்கை நீதிமன்றம் மற்றும் குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளது.
தற்கொலை குண்டுத்தாக்குதலை நடத்திய ஸஹ்ரானின் உறவினர்களை இந்த மரபணு பரிசோதனை அறிக்கையினூடாக அறிந்து கொள்ள முடியும் என அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (எ)

## இலங்கைக்கு உதவ வருகின்றது யமாம்

கொழும்பு, ஜூன் 10
ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பால் இலங்கைக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள நிலையில், நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்த இஸ்ரேலின் யமாம் பயங்கரவாத ஒழிப்புப் பொலிஸார் முன்வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



உலக நாடுகள் அனைத்துக்கும் அச்சுறுத்தலாக விளங்கும் ஐ.எஸ். பயங்கரவாதிகள் இஸ்ரேலின் யமாம் பொலிஸாரின் நடவடிக்கைகளுக்கு மட்டுமே கட்டுப்படுவதால், யமாம் பொலிஸார் ஊடாக இலங்கையின் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள இஸ்ரேல் முன்வந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்த விடயம் தொடர்பில் இரண்டு நாட்டு அரசுகளும் விரைவிலேயே விசேட கலந்துரையாடல்களில் ஈடுபடுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
ஈஸ்டர் ஞாயிறு தினத்தன்று இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலில் 250 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததோடு, 500க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இலங்கை மட்டுமன்றி, பன்னாட்டு ரீதியாகவும் பெரும் பரபரப்பை இந்தச் சம்பவம் ஏற்படுத்தியதை அடுத்து, பல்வேறு உலக நாடுகளும் இலங்கையின் பாதுகாப்பை பலப்படுத்தும் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்புக்களை வழங்க முன்வந்துள்ளன.
தற்போது இஸ்ரேல் அரசும் பாதுகாப்புக்கான செயற்பாடுகளை மேற்கொள்ள இலங்கைக்கு பூரண ஒத்துழைப்புக்களை வழங்கவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## மின்விசிறி கழன்று விழுந்து பெண் பொலிஸ் படுகாயம்!

மட்டக்களப்பு, ஜூன் 10
மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் சிறு குற்றத் தடுப்பு பிரிவுக் கட்டட கூரை மின்விசிறி உடைந்து கீழே விழுந்ததில் பெண் பொலிஸ் அதிகாரி ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் காலை நடந்தது என்று ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.
பொலிஸ் நிலையத்தில் காலை 10.30 மணியளவில் இயங்கி கொண்டிருந்த கூரை மின்விசிறி திடீரென உடைந்து வீழ்ந்ததால், அங்கிருந்த பெண் பொலிஸ் அதிகாரி ஒருவர் படுகாயமடைந்த நிலையில் ஏறாவூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.
மின்விசிறியின் ஆணி கழன்றதாலேயே இந்த விபரீதம் இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

## பேருந்து மிதிபலகை உடைந்து இருவர் சில்லில் சிக்கிச் சாவு!

கொழும்பு, ஜூன் 10
கண்டியிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த மட்டக்குளி சாலைக்குச் சொந்தமான அரச பேருந்தின் மிதிபலகை கடுகண்ணாவை பகுதியில்வைத்து உடைந்து வீழ்ந்ததில்பேருந்து நடத்துநரும் பயணி ஒருவரும் உயிரிழந்தனர்.
முன்பக்க மிதிபலகை உடைந்து வீழ்ந்ததில் அதில் நின்ற இருவரும் முன்சில்லில் சிக்கி உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவத்தில் சம்மாந்துறையை சேர்ந்த சேகர் என்ற நடத்துநரே இவ்வாறு உயிரிழந்தவராவர். மற்றயவரின் தகவல்கள் வெளியாகவில்லை.
குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

## பயணிகள் தடையை நீக்கியது நெதர்லாந்து

கொழும்பு, ஜூன்.10
இலங்கைக்கான சுற்றுலாத் தடையை நெதர்லாந்து நீக்கியுள்ளது. நெதர்லாந்தில் மேற்கொள்ளப்பட்ட பரப்புரை நடவடிக்கைகளை அடுத்து அந்நாட்டு பிரஜைகள் இலங்கை வருவதற்கான தடையை நீக்கியது என்று இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.
உயிர்த்த ஞாயிறுத் தினத் தாக்குதல்களை அடுத்து வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.
இந்நிலையில், இலங்கையில் தற்போது நிலமை வழமைக்குத் திரும்பி வருகின்றது.
நெதர்லாந்து போன்று ஏனைய நாடுகள் குறிப்பாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என இலங்கை எதிர்பார்க்கப்படுகின்றது என்று இலங்கைத் தூதரகத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

## இயற்கை இடர் இழப்பீட்டை அதிகரிப்பதற்குத் தீர்மானம்

கொழும்பு, ஜூன் 10
இயற்கை இடர்களில் உயிரிழப்போருக்கான இழப்பீட்டுத் தொகையை 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வரை அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
தேசிய காப்புறுதி நிதியத்தினூடாக இதற்கான நிதியைப் பெற்றுக்கொள்ள முடியும் என இடர் உதவி சேவை மத்திய நிலையத்தின் பணிப்பாளர் சமிந்த பதிராஜ தெரிவித்துள்ளார்.
இயற்கை இடர்களால் உயிரிழப்போருக்கு தற்போது ஒரு இலட்சம் ரூபா இழப்பீட்டுத் தொகையே வழங்கப்படுகின்றது. அதே வேளை, இயற்கை இடர்களால் முற்றுமுழுதாக வலுவிழப்போருக்கான உதவித்தொகை ஒரு இலட்சம் ரூபாவிலிருந்து 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு இயற்கை இடர்களின் போதும், உடனடி உதவிகளுக்காக ஒதுக்கப்படும் நிதி 100 இலட்சம் ரூபாவிலிருந்து 250 இலட்சம் ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் சமிந்த பதிராஜ குறிப்பிட்டுள்ளார். (எ)

## நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் செயற்பாட்டில் அரசியல் உள்ளது

### மகிந்த ராஜபக்ச குற்றச்சாட்டு


கொழும்பு, ஜூன் 10
உயிர்த்த தாக்குதல் குறித்து விசாரணைகளை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக் குழு, அரசியல் நோக்கத்துடன் செயற்படுகின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச குற்றஞ்சாட்டியுள்ளார்.
பாமன்கடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றையடுத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தமது நிலைப்பாட்டில் இருந்து விலகி இந்தக் குழு செயற்படும் காரணத்தாலேயே தமது அணியினர் அதிலிருந்து விலகியுள்ளனர். உண்மையில் தெரிவுக்குழுவானது எதிர்பார்த்த ஒரு தெரிவுக் குழுவாக அமையவில்லை. அதன் செயற்பாடுகளில் இருந்து விலகியே இந்தக் குழு தற்போது செயற்பட்டு வருகிறது.
எமது தரப்பில் இருந்தும் இதற்குச் சிலர் ஆரம்பத்தில் ஆதரவு தெரிவித்திருந்தாலும் புனைவாளர்களை வெளிச்சம் போட்டுக் காண்பிப்பது முறையான செயற்பாடல்ல என்பதே எமது நோக்கமாகும். அரசியல் தேவைக்காக அதைப் பயன்படுத்தக்கூடாது.
நாடாளுமன்றத் தெரிவுக் குழு இன்று அரசியல் நோக்கத்துடன் செயற்பட்டு காரணத்தினால்தான் எமது தரப்பில் இருந்து இதற்கு எந்தவொரு பிரதிநிதியும் கலந்துகொள்ளவில்லை.
நாம் தற்போது பெரும் வேலைத்திட்டமொன்றை மேற்கொண்டு வருகிறோம். அதாவது அரசுக்கு எதிராக பெரும் செயற்றிட்ட ரீதியாக மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளோம். என்றார். (எ)

## மட்டக்களப்புத் தபால் பெட்டியில் மீட்கப்பட்ட 37 தே.அ. அட்டைகள்

கொழும்பு, ஜூன் 10
மட்டக்களப்புத் தலைமையக தபாற்கந்தோர் தபாற்பெட்டியில் 37 தேசிய அடையாள அட்டைகள் மீட்கப்பட்டுள்ளன. இவற்றைத் தபாற் பெட்டியில் போட்டுச் சென்றவர்கள் அடையாளம் காணப்படவில்லை.
இந்தத் தேசிய அடையாள அட்டைகளை தபாற்கந்தோர் தபால் அதிபர் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார் என்று மட்டு. தலைமையகபொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.எம். டி.தீகா வத்து தெரிவித்தார்.
தபாற்கந்தோரில் உள்ள தபாற்பெட்டியை கடந்த வெள்ளிக்கிழமை காலை வழமைபோல திறந்து கடிதங்களை எடுக்கும்போது அதில் பல தேசிய அடையாள அட்டைகள் இருப்பதை ஊழியர் அவ்தானித்துள்ளார். அதன்பின்னர், இந்த விடயத்தை தபால் அதிபர் கவனத்துக்கு கொண்டுசென்றதையடுத்து குறித்த தேசிய அடையாள அட்டைகளை பொலிஸ் நிலையத்தில் தபால் அதிபர் ஒப்படைத்துள்ளார்.
மட்டக்களப்பு(13), வவுணதீவு(6), களுவாஞ்சிக்குடி(2), கேகாலை (1), நாவலப்பிட்டி(1), காத்தான்குடி(8), கொக்கட்டிச்சோலை(1), களுத்துறை(1), மொனராகலை(1), திருகோணமலை(1), ஏறாவூர்(1) ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களது தேசிய அடையாள அட்டைகளே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.
இந்த விடயம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## வீட்டு வாசலில் தூங்கியவரை மிதித்துக் கொன்றது யானை

கொழும்பு, ஜூன் 10
திம்புலாகல, அலவாகும்புர கிராமத்தில் யானை மிதித்ததில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
நேற்று அதிகாலை 3 மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
அலவாகும்புர பகுதியைச் சேர்ந்த 51 வயதுடைய நபர் ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.
தனது உறவினர் ஒருவர் வீட்டிற்கு சென்றிருந்த குறித்த நபர் அதிக வெப்பம் காரணமாக வீட்டு வாசலில் தூக்கி கொண்டிருந்த போது யானை அவரது தலையை மிதித்துக் கொண்டு சென்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
சம்பவம் தொடர்பில் அரலகங்வில பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)



# கிளிநொச்சியில் குடியிருப்பு பகுதியில் நேற்று தீ விபத்து

கிளிநொச்சி, ஜூன் 10

கிளிநொச்சி நகரில் நீதிமன்றுக்கு பின்புறமாக மக்கள் குடியிருப்புகளுக்கு மத்தியில் ஏற்பட்ட தீ கரைச்சி பிரதேச சபையால் கட்டுப்படுத்தப்பட்டது.

நேற்று 12 மணியளவில் நீதிமன்றுக்கு பின்புறமாக சிறைச்சாலைக்கு ஒதுக்கப்பட்டுள்ள காணியில் சிறைக்கைதிகளை கொண்டு துப்பரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஏற்கனவே வீழ்த்தப்பட்டு காய்ந்திருந்த ஆலமரத்துக்கு தீ வைக்கப்பட்ட போதே அது பெரியளவில் சுவாலையாக எரிந்தது. மக்களின் குடியிருப்புகளில் உள்ள வான் பயிர்களுக்கும் பரவியது. இதனையடுத்து கரைச்சி பிரதேச சபையின் தீ அணைப்பு பிரிவுக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் அவர்கள் சம்பவ இடத்துக்கு வருகை தந்து தீயைக் கட்டுப்படுத்தியிருந்தனர்.

தீ அணைக்கும் இயந்திரம் சம்பவ இடத்துக்கு வந்து, தீ அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த போது நீர் தீர்ந்து விட்டது. தீ அணைக்கும் பணி இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. அதன் பின்னர் நீர்த்தாங்கிகள் மூலம் நீர் கொண்டுவரப்பட்டு ஒரு மணியளவில் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. (ஓ.5,34)

# கடற்கரையோரங்களில் காற்றின் வேகம் அதிகம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

கடுங்காற்றினால் கடற்கரையோரங்களில் வாழும் மக்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர். பாதிப்பு ஏற்படாத போதும் கடுங்காற்றால் வீடுகளில் இருக்க முடியவில்லை என்றும் மக்கள் தெரிவித்தனர்.

கடுங்காற்றுடன் கூடிய காலநிலை தற்போது நிலவி வருவதால் யாழ்ப்பாணக் குடாநாட்டின் கரையோரப் பகுதிகளில் காற்றின் வேகம் அதிகரித்துள்ளது.

அந்தப் பகுதிகளில் வாழும் மக்கள் மிகுந்த அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர். இரவு வேளைகளில் பலத்த காற்று வீசுவதால் எந்த நேரமும் ஏதாவது நிகழலாம் என்ற அச்சத்துடன் வாழ்ந்துவருவதாக பொன்னாலைக் கடற்கரையை அண்டியுள்ள மக்கள் தெரிவித்தனர். வீட்டுத் தகரங்கள், வேலிகளுக்குப் போடப்பட்டுள்ள தகரங்கள், கொங்கிறீற் தூண்களைக் கூட கடுங்காற்று முறித்து வீழ்த்தும் நிலை உருவாகியுள்ளது.

கடுங்காற்றுக் காரணமாக ஏற்கனவே காரைநகரில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 8பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ மைய நிலையம் அறிக்கையிட்டுள்ளது. அதைவிட அங்கு தொழிலுக்குச் சென்ற இரண்டு இளம் மீனவர்களும் காணாமல் போயுள்ளனர் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. காற்றின் வேகம் அதிகரிக்குமானால் பாதிப்புக்கள் அதிகரிக்கும் சந்தர்ப்பங்கள் உண்டு என்றும் மக்கள் கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர். (ஓ.5,21)

## கொழும்பு...

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த ஐ.நா. சபையின் உதவி செயலர் நாயகமும் ஐ.நா. பாதுகாப்பு சபையின் பயங்கரவாத ஒழிப்பு நிறைவேற்று சபையின் நிறைவேற்று அதிகாரியுமான மிசேல் கோனின்சஸ், கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இதன்போதே, இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் கூட்டுப் பங்காளிகள் என்பதனை மறந்தவர்களாக அரசு செயற்படுகின்றது. தீர்மானத்தின் முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் இடம்பெறவில்லை. இந்த நிலமை தொடர்பில் நாங்கள் அதிருப்தி அடைந்துள்ளோம். இந்த நிலமை நாட்டுக்கு நல்லதல்ல. குறிப்பாக ஐ.நா. சபைக்கு இந்த நிலமை தொடர்ந்தால் அபகீர்த்தி ஏற்படும். ஒரு அரசு பன்னாட்டுச் சமூகத்துக்கு வாக்குறுதிகளை வழங்கிவிட்டு அவற்றை சற்றும் மதிக்காமல் செயற்படுமேயாகில் அத்தகைய நடவடிக்கையானது ஐ.நா. சபை போன்ற அமைப்புகளின் உருவாக்கத்துக்கான அடிப்படை நோக்கங்களை கேள்விக்குறியாக்கும் செயற்பாடாகும். புதிய அரசமைப்பை உருவாக்குவதற்காக நாடாளுமன்றத்தால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அரசு உதாசீனம் செய்துள்ளது. இத்தகைய தீர்மானங்களுக்கு எதிரான அரசின் செயற்பாடானது நல்லிணக்க முயற்சிகளிற்கும் கடந்த கால சம்பவங்கள் மீள் நிகழாமையை உறுதி செய்வதற்குமான பொறிமுறைகளில் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தையும், நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையும் உதாசீனம் செய்யும் வகையில் செயற்படுகின்றமையானது இந்த அரசு பிறிதொரு அட்டவணையில் முன்செல்லுகின்றமைக்கான எடுத்துக்காட்டாகும்.

இங்கு கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், தற்போது நடைமுறையில் உள்ள கடுமையான பயங்கரவாத தடைச்சட்டத்தின் பின்னணியை விளக்கிய அதேவேளை இந்த சட்டத்தை பிறிதொரு சட்டத்தனால் மாற்றீடு செய்வது இந்த அரசு, பன்னாட்டுச் சமூகத்துக்கு கொடுத்த வாக்குறுதிகளில் பிரதானமான ஒன்றாகும் என்பதனையும் ஒரு சட்டவரைவு இருக்கின்ற போதிலும் அது குறித்ததான முன்னெடுப்புகள் இன்னும் முற்றுப்பெறவில்லை என்பதனையும் சுட்டிக்காட்டினார்.

மேலும் இலங்கை அரசானது தமது வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்றமையை உறுதி செய்யும் வகையில் பன்னாட்டுச் சமூகம் மிக உத்வேகத்துடனும் ஆக்கபூர்வமாகவும் செயற்பட வேண்டும் எனவும் இரா.சம்பந்தன் வேண்டிக் கொண்டார்.

தமது முன்மொழிவுகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களின் கருத்துக்களிற்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்பதனை உறுதி செய்த உதவி செயலர் நாயகம் அவர்கள் ஐ.நாவின் ஆக்கபூர்வமான பங்களிப்பு தொடர்ந்தும் இருக்கும் என்பதனையும் உறுதி செய்தார்.

இந்தச் சந்திப்பில் உதவி செயலர் நாயகத்துடன் ஐக்கிய நாடுகளுக்கான இலங்கை வதிவிடப்பிரதிநிதி ஹனா சிங்கர் மற்றும் சட்ட அதிகாரி அட்ரியா மற்றும் சிறப்பு உதவியாளர் லைலா ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (ஓ.5,105)

## கடும்...

ஏற்கனவே கொழும்பில் தங்கியிருந்து தலைமை அமைச்சரின் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கவனித்து வந்தது.

தலைமை அமைச்சர் மோடி கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயத்துக்குச் செல்லும்போது அந்தப் பகுதியில் தொலைபேசி சேவைகள் பாதுகாப்பு காரணங்களுக்காக முடக்கப்பட்டிருந்தன. எட்டு அடுக்குப் பாதுகாப்புப் போடப்பட்டு வீதிகள் பல மூடப்பட்டன.

இந்திய இல்லம் அமைந்துள்ள பகுதிகளைச் சூழ வீதிகளை மறித்து குறுக்காக பேருந்துகள் நிறுத்தப்பட்டிருந்தன.

இந்தியத் தலைமை அமைச்சரை சந்திக்கச் செல்லும் கூட்டமைப்பினரை, தனித் தனி மகிழுந்துகளில் வரவேண்டாம் என்று ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதற்கு அமைவாக இரா.சம்பந்தன் மற்றும் மாவை.சோ.சேனாதிராசா ஆகியோரின் மகிழுந்துகளிலேயே கூட்டமைப்பினர் சென்றனர். இந்த இரண்டு மகிழுந்துகளின் ஒளிப்படங்கள் எடுக்கப்பட்டு ஏற்கனவே பாதுகாப்புப் பிரிவினருக்கு வழங்கப்பட்டிருந்தது.

இந்தியன் இல்லத்துக்குச் சென்ற கூட்டமைப்பினரின் வாகனங்கள் பொலிஸாரால் மறிக்கப்பட்டு, அவர்களை உள்ளே அனுமதிக்கலாமா என்பதை மேலிடத்தில் அறிந்த பின்னரே உள்ளே செல்ல அனுமதித்தனர். அந்தளவுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் இறுக்கப்பட்டிருந்தன. (ஓ.5)

## பிறந்து...

கீரிமலை வீதி, பண்டத்தரிப்பில் வசிக்கும் றொபேட் சாள்ஸ் நகுலாக்கு கடந்த 5ஆம் திகதி பெண் குழந்தை பிறந்துள்ளது. மறு நாள் அவர் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 10 மணியளவில் குழந்தையை தாயார் தூக்கியபோது, குழந்தை ஆரோக்கியம் குறைவாக இருந்தமையை உணர்ந்துள்ளார். யாழ்ப்பாணம் போதான மருத்துவமனைக்கு உடனடியாக முச்சக்கரவண்டியில் குழந்தையை எடுத்துச் சென்றுள்ளார். மருத்துவமனைக்கு வரும் வழியில் குழந்தை மயக்கமுற்றுள்ளது. மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும் குழந்தை சிறிது நேரத்தில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது. இறப்பு விசாரணையை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (ஓ.5,105)

## ஒலுமடு...

தாகப் பொலிஸார் தெரிவித்தனர். மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். காந்தலிங்கம் துசியன் (வயது-27) என்ற இளைஞனே உயிரிழந்துள்ளான்.

உந்துருளியில் இருவர் பயணித்துள்ளனர். அவர்கள் வேகமாகச் சென்றதாகத் தெரிவித்த பொலிஸார், வீதி வளைவில் திருப்ப முற்பட்டபோது மின்கம்பத்துடன் மோதுண்டு உயிரிழந்துள்ளனர். (ஓ.5,105,222)

## தீவிரவாதத்தை...

கொழும்பு, ஜூன் 10

தீவிரவாதத்தை கூட்டாக எதிர்கொள்வதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடிக்கும் இடையிலான பேச்சுக்களின் போது, இணக்கம் காணப்பட்டுள்ளது.

இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியின் அதிகாரபூர்வ கீச்சகப் பக்கத்தில் இதுபற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தப் பதிவில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை, சந்தித்தேன். பத்து நாள்களில் எமது இரண்டாவது சந்திப்பு இது. தீவிரவாதம் ஒரு கூட்டு அச்சுறுத்தல். அதனை கூட்டாக, மையப்படுத்திய நடவடிக்கையின் மூலம் எதிர்கொள்ள வேண்டும் என அரச தலைவர் மைத்திரிபாலவும் நானும் இணங்கியுள்ளோம். பகிர்வான, பாதுகாப்பான எதிர்காலத்துக்காக இலங்கையுடன் பங்காளராக இணைந்து நிற்கும் இந்தியாவின் உறுதிப்பாட்டை மீள வலியுறுத்துகிறேன், என்று இந்தியத் தலைமை அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஓ.5)

## கல்குவாரி...

சடலங்கள் நேற்று மாலை மீட்கப்பட்டு வவுனியா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வேப்பங்குளத்தைச் சேர்ந்த சாந்தகுமார் யூட் (வயது-18), ஓமந்தையைச் சேர்ந்த சுரேஸ்குமார் தரணீசன் (வயது-15) ஆகிய மாணவர்களே சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

பம்பைமடு இராணுவ முகாமுக்கு பின்புறமாக உள்ள பகுதியில் கடந்த காலத்தில் கல் அகழ்வு செய்யும் குவாரி காணப்பட்டிருந்தது. கல் அகழ்வு முடிவடைந்த பின்னர் கிடங்கு மூடப்படாமையால் நீர் தேங்கி நின்றுள்ளது. சிறிய உழவு இயந்திரத்தில் 12பேர் வரையில் குளிப்பதற்குச் சென்றுள்ளனர். மாணவர்கள் இருவரும் திடீரென நீரில் மூழ்கியுள்ளனர். ஏனையோர் அபயக் குரல் எழுப்பினர். இருப்பினும் மாணவர்கள் இருவரையும் காப்பாற்ற முடியவில்லை. நேற்று மாலையில் அங்கிருந்து மாணவர்கள் இருவரும் சடலமாக மீட்கப்பட்டனர். வவுனியா மருத்துவமனையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக இரண்டு சடலங்களும் வைக்கப்பட்டுள்ளன. (ஓ.5,105)

## தமிழ்த்...

மதித்துச் செயற்படவில்லை. அவர்கள் அவ்வாறு மதித்து செயற்பட்டிருந்தால் இந்த நாட்டில் போர் ஏற்பட்டிருக்காது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், ஐ.நா. உதவிச் செயலரிடம் எடுத்துரைத்தார்.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த ஐ.நா. சபையின் உதவி செயலர் நாயகமும் ஐ.நா. பாதுகாப்பு சபையின் பயங்கரவாத ஒழிப்பு நிறைவேற்று சபையின் நிறைவேற்று அதிகாரியுமான மிசேல் கோனின்சஸ், கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இந்தச் சந்திப்பில் சம்பந்தன் பல்வேறு விடயங்களையும் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவரது ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. தமிழ் மக்கள் தமது உரிமைகளை கோரி அகிம்சை போராட்டங்களை நடாத்திய போது தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகள் 1950ஆம், 1970ஆம் மற்றும் 1980ஆம் ஆண்டுகளில் அரங்கேற்றப்பட்டது. இவை தமிழீழ விடுதலை புலிகள் தோற்றம் பெறுவதற்கு முன்னர் இடம்பெற்ற சம்பவங்கள். தொடர்ச்சியாக கட்டமிடப்பட்ட வகையில் எமது உரிமைகளை மறுக்கும் செயலானது ஐ.நாவின் சமூக அரசியல் உரிமைகள் சாசனத்தை மீறும் செயலாகும். இன்று எமது விருப்புக்கு மாறாக நாம் ஆளப்படுகின்றோம். மீண்டும் போர் உருவாகுவதை நாம் அனுமதிக்க முடியாது. போரினால் எமது மக்கள் பெரிய அழிவுகளை சந்தித்துள்ளார்கள். சிங்கள மக்களுக்கு பாதிப்பு ஏற்படுவதனை நாம் விரும்பவில்லை.

ஆனால் துரதிஷ்டவசமாக இந்த நாடு ஒரு சில சிங்கள பௌத்த பேரினவாதிகளால் இயக்கப்படுகின்றமையும் அத்தகைய சக்திகளுக்கு எதிராக சிங்களத் தலைவர்கள் செயற்படாமையும் வருந்தத்தக்க விடயமாகும் எனச் சுட்டிக்காட்டியுள்ளார், என்றுள்ளது. (ஓ.5,22)

## மகிந்தவை...

கொழும்பு, ஜூன் 10

விரிவான பேச்சுக்கள் நடத்துவதற்கு இந்தியாவுக்கு வருமாறு எதிர்க்கட்சித் தலைவரும், முன்னாள் அரச தலைவருமான மகிந்த ராஜபக்சவுக்கு அழைப்பு விடுத்தார்.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவை சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

அரச தலைவர் செயலகத்தில் நடந்த இருதரப்பு பேச்சுக்களை அடுத்து, இந்தியத் தூதுவரின் இல்லமான இந்தியா ஹவுசுக்குச் சென்ற இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி அங்கு சந்திப்புகள் நடத்தினார்.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவை முதலில் அவர் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். இதன் போது, இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பரந்துபட்ட இருதரப்பு உறவுகளை பலப்படுத்துவதற்கு எடுக்க வேண்டிய மேலதிக் நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. 'இலங்கை எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவுடன் விரிவான சந்திப்பு இடம்பெற்றது. தீவிரவாத முறியடிப்பு, பாதுகாப்பு மற்றும் பொருளாதார அபிவிருத்தியில், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில், நெருக்கமான பிணைப்பு இருக்க வேண்டிய தேவை குறித்து நாங்கள் கலந்துரையாடினோம்' என்றும் இந்தியத் தலைமை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் மகிந்த ராஜபக்சவுடன், பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், தினேஸ் குணவர்த்தன, நாமல் ராஜபக்ச ஆகியோரும், இந்தியத் தலைமை அமைச்சருடன், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (ஓ.5,22)

### ஒவ்வொரு ஆண்டும்

# போராலும் அதனது நெருக்கடியாலும் ஒரு லட்சம் குழந்தைகள் உயிரிழப்பு!

## 'சேவ் த சில்றன்' அமைப்பு தகவல்

லண்டன், ஜூன் 10

உலக அளவில், ஒவ்வொரு ஆண்டும் ஆயுத மோதல்கள் மற்றும் அதன் தாக்கத்தாலும் பசி பட்டினியாலும் உயிரிழக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை ஒரு லட்சத்தைத் தாண்டுவதாக ஓர் ஆய்வு தெரிவிக்கிறது.



பன்னாட்டு அளவில் குழந்தைகளைக் காப்போம் என்ற அறைகூவலோடு இயங்கிவரும் சேவ் தி சில்ட்ரன்ஸ் அமைப்பு இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளது.

உலகில் அதிகபட்சமாக குறிப்பிட்ட 10 நாடுகளில் இந்த உயிரிழப்புகள் நேர்கின்றன. ஆப்கானிஸ்தான், மத்திய ஆபிரிக்கக் குடியரசு, காங்கோ ஜனநாயகக் குடியரசு, ஈராக், மாலி, நைஜீரியா, சோமாலியா, தெற்கு சூடான், சிரியா மற்றும் ஏமன் ஆகிய நாடுகளே இந்த வகையில் மோசமாகப் பாதிக்கப்பட்ட நாடுகளாகும். இந்த குறிப்பிட்ட நாடுகளில் மட்டும் 2013ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரையிலான இடைப்பட்ட காலங்களில் 5 லட்சத்து 50 ஆயிரம் குழந்தைகள் இறந்துள்ளன.

உலகில் உள்ள ஐந்து குழந்தைகளில் ஒன்று எந்த நேரத்திலும் போர்வெடிக்கும் அல்லது போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலேயே கடந்த இருபதாண்டுகளாக வாழ நேரிட்டுள்ளது. கொல்லப்பட்ட அல்லது ஊனமுற்ற குழந்தைகள் எண்ணிக்கை மும்மடங்காக அதிகரித்துள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் போர்ச்சூழலின் மறைமுகவிளைவுகளினால் மட்டுமே 5 வயதுக்குள் இறந்த மொத்த குழந்தைகளின் எண்ணிக்கை 8 லட்சத்து 70 ஆயிரம் ஆகும். 21ஆம் நூற்றாண்டில் நாம் மிகவும் எளிமையான அறக்கொள்கைகள் மற்றும் தார்மீக நெறிகளிலிருந்து பின்னோக்கி செல்கிறோம் என்பதையே இந்த ஆய்வு தெரிவிக்கிறது.

இது மிகவும் அதிர்ச்சியூட்டுகிறது போரில் குழந்தைகளும் பொதுமக்களும் இறக்காகக் கூடாது என்பதை நினைவில் நிறுத்த வேண்டும் என்று அந்த ஆய்வில் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம)




### உலக அளவில்

## ஐந்தில் ஒரு சிறுவர் திருமணத்துக்குள் தள்ளப்படுகின்றனர்

லண்டன், ஜூன் 10

உலக அளவில் ஐந்தில் ஒரு சிறுவர் திருமணத்துக்குள் தள்ளப்படுகின்றனர் என்று யுனிசெப் அமைப்பு அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளது.

82 நாடுகளில் மேற்கொண்ட ஆய்வுகளின் அடிப்படையிலேயே மேற்படித் தகவல் கிட்டியுள்ளது. ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா, கரீபியன் தீவு, தெற்காசியா, கிழக்கு ஆசிய நாடுகளில் சிறுவர் திருமணம் அதிகளவில் இடம்பெறுகின்றது என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிட் டுள்ளது.

இவ்வாறான சிறுவர் திருமணங்களால் சிறுவர்கள் மீது அளவுக்கு அதிகமான சுமை ஏற்றப்படுகிறது. அது-அவர்களின் பால்யப் பருவத்தைத் திருடுகிறது என்றும் யுனிசெப் அமைப்பு கவலை



## நிலவுக்குச் செல்லும் முயற்சியை உடன் கைவிடல் வேண்டும் நாசா

### ட்ரம்ப் வேண்டுகோள்

வொஷிங்டன், ஜூன் 10

நிலவுக்கு மீண்டும் செல்வதற்கான முயற்சியை நாசா கைவிடவேண்டும் என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள டுவிற்றர் பதிவில், '50 வருடங்களுக்கு முன்பே நிலவுக்குச் சென்று வந்து விட்டோம், இனி விண்வெளித் திட்டங்களுக்கு நாம் செலவிடும் தொகையும் எமது நோக்கமும் செவ்வாய் கிரக பயணம், ராணுவம் மற்றும் அறிவியல் உள்ளிட்ட அம்சங்களை சார்ந்ததாகவே இருக்க வேண்டும்' - என்று குறிப்பிட்டுள்ளார். (ம)

## ஆப்கானில் தாக்குதல் 2 ஆயுததாரிகள் சாவு

காபூல், ஜூன் 10

ஆப்கானிஸ்தானில் இராணுவத்தால் நடத்தப்பட்ட ஆளில்லா வானூர்தித் தாக்குதலில் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பின் ஆயுததாரிகள் இருவர் கொல்லப்பட்டனர்.

ஆப்கானிஸ்தானில் ராணுவத்துக்கும், தலீபான் ஆயுததாரிகளுக்கும் இடையே நடந்து வருகிற உள்நாட்டுப்போரை பயன்படுத்தி, ஐ.எஸ். பயங்கரவாதிகள் கால் பதித்துள்ளனர். ஆங்காங்கே அவர்கள் பதுங்கி இருந்து கொண்டு நாசவேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் நங்கர்ஹார் மாகாணத்தில் கோகியானி மாவட்டத்தில் வாஜிரோ டாங்கி என்ற இடத்தில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் பதுங்கி இருப்பது ராணுவத்துக்கு உளவு தகவல்கள் மூலம் தெரிய வந்தது. இதையடுத்து அங்கு ஆளில்லா வானூர்தி மூலம் நடத்தப்பட்ட தாக்குதலில் இரு ஆயுததாரிகள் உயிரிழந்தனர். (ம)





## குர்தீஷ் போராளிகளைத் தாக்கினால் கடும் விளைவைச் சந்திக்க நேரிடும்

### துருக்கிக்கு ட்ரம்ப் எச்சரிக்கை

தெக்ரோன், ஜூன் 10

துருக்கி - சிரிய எல்லையில் உள்ள குர்தீஷ் போராளிகளைத் துருக்கி தாக்கினால் கடும் விளைவைச் சந்திக்க நேரிடும் என்று துருக்கிக்கு கடும் எச்சரிக்கை விடுத்தார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்.

சிரிய, துருக்கி, ஈராக் ஆகிய நாடுகளின் எல்லைப் பகுதியில் குர்தீஷ் இன மக்கள் வசித்து வருகின்றனர். தாம் வாழுகின்ற பகுதியை குர்திஷ்தான் என்ற தனிநாடாக அறிவிக்குமாறு அவர்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர். இதற்காக ஓர் ஆயுதக் குழுவும் அங்கு செயற்பட்டு வருகிறது. இந்த ஆயுதக் குழுவுக்கு அமெரிக்கா ஆதரவு தெரிவித்து வருகிறது. ஆனால் குர்தீஷ் ஆயுதக் குழுவுக்கு எதிராக கடும் தாக்குதல்களை மேற்கொண்டு வருகிறது துருக்கி. அண்மைக் காலமாக குர்தீஷ் அமைப்புக்கு எதிரான போரை துருக்கி துரித கதியில் முன்னெடுத்து வரும் நிலையில் துருக்கியை கடுமையாக எச்சரித்துள்ளது அமெரிக்கா.

சிரியாவில் உள்ள குர்து போராளிகள் மீது துருக்கி இராணுவம் தாக்குதல் நடத்தினால், பொருளாதார ரீதியாக துருக்கி நாட்டுக்கு பேரழிவை ஏற்படுத்துவோம். குர்தீஷ் பகுதியில் 20 மைல் சுற்றளவுக்கு பாதுகாப்பு மண்டலம் உருவாக்கப்படும் என்று ட்ரம்ப் குறிப்பிட்டார். (ம)

# இந்தியாவுடன் பேச்சுக்கு தயாராகவே உள்ளோம்!

## மோடிக்கு இம்ரான் கடிதம்

இஸ்லாமபாத், ஜீன்10
காஷ்மீர் பிரச்சினை உள்ளிட்ட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் பேச்சின்மூலம்தீர்வுகாணத்தயாராக உள்ளோம்என்றுஇந்தியத்தலைமை அமைச்சர் மோடிக்குக் கடிதம் எழுதினார் பாகிஸ்தானின் தலைமை அமைச்சர் இம்ரான் கான்.



பாகிஸ்தானின்தலைமைஅமைச்சராகத் தெரிந்தெடுக்கப்பட்டது முதல் தற்போதுவரைஇந்தியாவுடன்இணக்கம் காட்டவே இம்ரான் விரும்பம் தெரிவித்து வருகிறார்.

இந்த நிலையில் இந்தியத் தலைமை அமைச்சராக மீண்டும் தெரிவாகியுள்ள மோடிக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளஇம்ரான்இந்தியாவுடன்பேச்சுக்குத்தயார்என்றுகடிதம்எழுதியுள்ளார். அந்தக் கடிதத்தில், பேச்சு ஒன்றே இரண்டு நாடுகளுக்கும் பயன் அளிக்கும் தீர்வு என்று இம்ரான் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம)

# இளம் பருவநிலை ஆர்வலருக்கு பொதுமன்னிப்பு சபையின் விருது

லண்டன், ஜீன்10
லண்டனில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சுவீடன் நாட்டைச் சேர்ந்த இளம் பருவநிலை மாற்ற ஆர்வலர் கிரேட்டா தன் பெர்க், பன்னாட்டு பொதுமன்னிப்பு சபையின் உயரிய மனித உரிமைகள் விருதைப் பெற்றார்.



கடந்த ஆண்டு சுவீடன் நாட்டு நாடாளுமன்றத்தின் முன்னால்,பருவநிலைமாற்றத்தைதடுக்கும்நடவடிக்கைகளை மேற்கொள்ளவலியுறுத்திப்பள்ளிமாணவர்களைவைத்து விழிப்புணர்வு போராட்டத்தை நடத்தியவர் கிரேட்டா தன் பெர்க். இது பிரேசில், உகாண்டா மற்றும் ஆஸ்திரேலியா போன்றநாடுகளில்உள்ளவளர்ந்துவரும்இளம்ஆர்வலர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், லண்டனில் பன்னாட்டு பொதுமன்னிப்பு சபை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கிரேட்டாவுக்கும், அவரதுதலைமையிலான'எதிர்காலத்திற்கான வெள்ளிக்கிழமைகள்' இயக்கத்திற்கும் பன்னாட்டு பொதுமன்னிப்பு சபையின் உயரிய மனித உரிமைகள் விருது வழங்கப்பட்டது.

இதுபற்றி கிரேட்டா கூறுகையில், 'உங்களுக்கு எது சரியென்று படுகிறதோ அதற்காக போராடுங்கள். இந்த இயக்கத்தில்உள்ள அனைவரும்இதையேசெய்கிறார்கள். இந்த பருவநிலைமாற்றத்தினால்அதிகமாகபாதிக்கப்படுபவர்கள் உலகின் தெற்கு பகுதியில் உள்ளவர்கள்தான். இதில், கவனிக்கத்தக்க விடயம் என்னவென்றால், பருவநிலை மாற்றத்தில்அவர்களின்பங்குமிகமிகக்குறைவு. இந்தஅநீதிக்கு எதிராகத்தான் நாம் குரல் எழுப்ப வேண்டும்' என்றார். (ம)

# சிரியாவில் கடும் தாக்குதலில் அரச படையினர் 21 பேர் சாவு

டமஸ்கஸ், ஜீன்10
சிரியாவில் ஹயாத்தாஹிர் அமைப்பினருக்கும்அரசதரப்புப் படைக்கும் இடையில் இடம் பெற்ற கடும் போரில் சிப்பாய்கள் 21பேர் உயிரிழந்தனர்.

சிரியாவில்ஐ.எஸ். பயங்கரவாதிகள் முற்றிலும் ஒழிக்கப்பட்டு விட்ட நிலையில், அல் குவைதா அமைப்பின் ஆதரவுபெற்ற ஹயாத்தாஹிர் அல்ஷாம் பயங்கரவாதிகள் அரசு படைகளுக்கு சவாலாக உள்ளனர்.

இட்லிப் மாகாணத்தில் கடும் ஆதிக்கம் செலுத்தி வரும் அவர்கள், அதன் அண்டைமாகாண்ங்களிலும் கால் பதிக்க முயற்சித்து வருகின்றனர்.

ரஷ்யா மற்றும் ஈரான் படைகளின் உதவியோடு சிரிய ராணுவம் அவர்களுடன் போராடிவருகிறது.

இந்த நிலையில் இட்லிப் மாகாணத்தின் அருகே உள்ள ஹமா மாகாணத்தின் ஜிபீன் நகரில் அரசு படையினருக்கும் ஹயத்தாஹிர் அமைப்பினருக்கும் இடையில் கடந்த சில வாரங்களாக கடும் மோதல் ஏற்பட்டுள்ளது.

இந்த மோதலில் நேற்றுமுன்தினம் மட்டும் 21 சிப்பாய்கள் உயிரிழந்தனர். (ம)





# இன்றைய நாள்

**மேடம்:** உங்களின் பேச்சு செயலில் தயக்கம் ஏற்படலாம். தொழிலில் லாபம் சுமாரான அளவில் இருக்கும். பெண்கள் செலவுக்காக கடன் வாங்க நேரிடலாம். பிராணிகளிடம் இருந்து விலகி இருப்பது நல்லது.

**இடபம்:** மனதில் நேர்மை நிறைந்திருக்கும். குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் லாபம் அதிகரிக்கும். பிள்ளைகளின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**மிதுனம்:** வாழ்வில் மனச்சாட்சிப்படி நடந்து கொள்வீர்கள்.தொழில், வியாபாரத்தில் வருகிற குளறுபடியை சரி செய்ய முயல்வீர்கள். லாபம் சுமார். வெளியூர் பயணம் செல்ல நேரிடும்.

**கடகம்:** புதியவர்களின் அறிமுகம் கிடைக்கும். தாமதமான பணிகளை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு திட்டமிட்டபடி நிறைவேறும். சேமிப்பு கூடும்.

**சிம்மம்:** நண்பர்களுக்கு உதவி செய்து மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**கன்னி:** உங்களின் நற்செயலை சிலர் பரிகாசம் செய்யலாம். தன்னம்பிக்கையுடன்செயல்படுவது அவசியம். தொழில் வியாபாரத்தில் லாபம் சீராக இருக்கும். வாகனத்தில் பராமரிப்புச் செலவு ஏற்படலாம்.

**துலாம்:** குடும்ப விஷயத்தைப் பற்றி பிறரிடம் பேச வேண்டாம். இஷ்ட வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் பணவரவு சுமாராக இருக்கும். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம்.

**விருச்சிகம்:** மதிநுட்பத்துடன் செயல்படுவீர்கள். கடந்த கால முயற்சிக்கான பலன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் உயரும். பெற்றோரின் தேவையைஅறிந்துநிறைவேற்றுவீர்கள்.

**தனுசு:** நண்பரிடம் கேட்ட உதவி கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். பூர்வீக சொத்து மூலம்திடீர்லாபம்வரும். சிக்கனத்தால் சேமிக்க முயல்வர்.

**மகரம்:** கருத்துவேறுபாடு உள்ளவரிடம் விலகுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். உடல்நலனில் அக்கறை தேவை. மாணவர்கள் படிப்பில் ஆர்வமுடன்

**கும்பம்:** நண்பர்களால் பிரச்னைக்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். பணவரவைவிடநிர்வாகச்செலவுஅதிகரிக்கும்.

**மீனம்:** பெற்றோரின் தேவையறிந்து உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் சீராக இருக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு நிறைவேறும். பிள்ளைகளின் செயல்பாடு நிம்மதிக்கு வழிவகுக்கும்..




# வயாவிளான் மத்தி. கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், ஜூன் 10
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான கரப்பந்தாட்டத்தில் வயாவிளான் மத்திய கல்லூரி அணி கிண்ணம் வென்றது.
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டங்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.
20 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான இறுதியாட்டத்தில் வயாவிளான் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி மோதியது.
முதலாவது செற்றில் பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தரப் பாடசாலை அணி 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. இரண்டாவது செற்றில் வயாவிளான் மத்திய கல்லூரி அணி 26:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று பதிலடி கொடுத்தது. வெற்றிதோல்வியைத் தீர்மானிக்கும் மூன்றாம் செற்றில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் முகமாக விளையாடின. இதில் வயாவிளான் மத்திய கல்லூரி அணி 26:24 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது.
2019 ஆண்டுக்கான சிறந்த கரப்பந்தாட்ட வீராங்கனையாக வயாவிளான் மத்தியகல்லூரிவீராங்கனை ப.கோபிகா தெரிவு செய்யப்பட்டார். (ம-422)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 10
**தாச்சித் தொடர்**
கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தென்மராட்சி ரீதியாக நடத்தப்படும் தாச்சித் தொடரின் மூன்றாம் இடத்துக்கான ஆட்டம் கழக மைதானத்தில் இன்று திங்கட்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதில் கைதடி மின்னொளி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கைதடி தூர்க்கா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
**கால்பந்தாட்டம்**
வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான எவ்.ஏ கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் டயமன்ஸ் அணியை எதிர்த்து கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)



# கலைமதி அணி அபாரம்

யாழ்ப்பாணம், ஜூன் 10
வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கலைமதி அணி வெற்றிபெற்றது.
வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் கரவைச்சுடர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதியது.
இதில் 7:1 என்ற கோல் கணக்கில் கலைமதி விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)




# அளவெட்டி அருணோதயா கரப்பந்தில் சம்பியனானது

யாழ்ப்பாணம், ஜூன் 10
பலத்த போராட்டத்தில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணி கரப்பந்தாட்டச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான பெண்கள் பிரிவு கரப்பந்தாட்டத்தின் இறுதியாட்டங்கள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.
**16 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான இறுதியாட்டத்தில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணியை எதிர்த்து பருத்தித்துறை சென். தோமஸ் கல்லூரி அணி மோதியது.** முதலாவது செற்றில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணி 25:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. ஆனால் இரண்டாவது செற்றில் பருத்தித்துறை சென். தோமஸ் கல்லூரி 25:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று பதிலடி கொடுத்தது. வெற்றி தோல்வியை தீர்மானிக்கும் மூன்றாம் செற்றில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் முகமாக விளையாடின. இருப்பினும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி அணி 26:24 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (ம-422)

# உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி. கரப்பந்தாட்டத்தில் சம்பியனானது

யாழ்ப்பாணம், ஜூன்.10
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் 18 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அணி சம்பியனானது.
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டங்கள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.
18 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான இறுதியாட்டத்தில் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அணியை எதிர்த்து இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய அணி மோதியது.
இதில் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அணி 25:20, 25:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. மூன்றாமிடத்தை அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணி பெற்றது. (ம-422)



## பதற்றம் ஏதும் இல்லாமல்
# ஆப்கானிஸ்தானை வீழ்த்தியது நியூசி.





உலகக்கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ஆப்கானிஸ்தான் அணியை சிறு பதற்றமும் இல்லாமல் வீழ்த்தியது நியூசிலாந்து அணி. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.
இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணிக்கு ஆரம்ப வீரர்களான சஷாய், நூர் அலி சடான் இருவரும் சிறந்த அத்திபாரத்தை அமைத்தனர்.
இணைப்பாட்டமாக 66 ஓட்டங்கள் பகிரப்பட்ட பின்னர் ஆட்டமிழந்தார் சஷாய்.
மத்திய வரிசையில் சாகிடி நிலைத்துநின்று 59 ஓட்டங்களைக் குவித்தாலும் அவரை விட வேறு எவரும் சிறந்த பங்களிப்பை வழங்கவில்லை. முடிவில் 172 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது ஆப்கானிஸ்தான்.
பந்துவீச்சில் நியூசிலாந்து அணியின் சார்பாக நீஸ்கம் 5 இலக்குகளையும், பேர்குசன் 4 இலக்குகளையும், கிராண்ட்ஹோம் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து இன்னிங்ஸின் முதல் பந்திலேயே ஆரம்ப வீரர் கப்ரிலை இழந்தது.
பிறிதொரு ஆரம்ப வீரரான முன்றோ 22 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.
எனினும் வில்லியம்சன், ரெய்லர் அணியை சரிவில் இருந்து மீட்டெடுத்தனர்.
ரெய்லர் 48 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த போதிலும் வில்லியம்சன் அரைச்சதம் கடந்து தொடர்ந்து நிலைத்திருந்து அணியை வெற்றி பெற வைத்தார். அவர் 79 ஓட்டங்களைச்சேர்த்தார். (ம)



உலகக்கிண்ணத் தொடரில் ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான நேற்றுமுன்தின ஆட்டத்தில் ஆப்கானிஸ்தான் வீரரின் காலணியின் நூலைக் கட்டிவிட்டார் நியூசிலாந்து அணியின் வீரர் சான்நர். இந்த ஒளிப்படத்தை தனது சமூக வலைத்தளங்களில் பதிவேற்றியுள்ள ஐ.சி.சி. 'கிரிக்கெட்டின் கனவான்தன்மை' என்று தலைப்பிட்டுள்ளது. (ம)



## பாசையூர் சென். அன்ரனிஸ் பளுதூக்கலில் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூன் 9
பாசையூர் சென். அன்ரனிஸ் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை பளுதூக்கலில் 4ஆவது தடவையாகவும் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான பளுதூக்கல் போட்டி கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.
இதில் பாசையூர் சென். அன்ரனிஸ் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை 71 புள்ளிகளைப் பெற்று சம்பியன் கிண்ணத்தையும், முல்லைத்தீவு பாண்டியன்குளம் மகா வித்தியாலயம் 53 புள்ளிகளைப் பெற்று 2ஆம் இடத்தையும் இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம் 46 புள்ளிகளைப் பெற்று 3ஆம் இடத்தையும் பெற்றன. (ம-422)

## எங்களுக்கு மட்டும் ஏன் மோசமான ஆடுகளங்கள்

### ஹதுருசிங்க ஆதங்கம்

நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை அணி ஆடிய இரண்டு போட்டிகளும் பந்து வீச்சாளர்களுக்கு சாதகமான மைதானத்திலேயே ஆடியது. இதில் முதலாவது போட்டியில் நியூசிலாந்து அணிக்கு எதிராக படுதோல்வியடைந்தது. இரண்டாவது போட்டியில் ஆப்கானுக்கு எதிராக ஆடியது. இதில் இலங்கை அணி வெற்றி பெற்றாலும், இந்தப் போட்டி இடம்பெற்ற மைதானமும் பந்து வீச்சாளர்களுக்கு உகந்த மைதானமாகவே காணப்பட்டது. எங்களுக்கு மட்டும் பசுந்தரை ஆடுகளத்தை அளிப்பது ஏன் என்று இலங்கை அணி பயிற்சியாளர் சந்திக ஹதுரசிங்கே கேள்வி எழுப்பியுள்ளார்.
நாளை இடம்பெறும் பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியிலும் பசுந்தரை மைதனம் அமைந்தால் இலங்கை ஏமாற்றமேயடையும். ஆப்கானை வீழ்த்த இலங்கைக்கு உதவியது இந்த பசுந்தரை மைதானம்தான் என்பதிலும் மாற்றுக் கருத்துகள் இல்லை. இந்த நிலையில் இது குறித்து இலங்கை அணியின் பயிற்சியாளர் ஹதுரசிங்க தெரிவிக்கையில்;
நாங்கள் விளையாடிய இரண்டு பிட்ச்களுமே ஒருநாள் கிரிக்கெட்டுக்கு உகந்ததல்ல. ஏனைய அணிகள் பிட்ச்களைப் பார்த்தால் கொஞ்சம் பிரவுண் அல்லது வெள்ளையாகக் கூட இருந்தது. ஆனால் எங்களுக்கு மட்டும் பசுந்தரையாக இருந்தது. எங்கள் அணி திடீரென சரிவடைந்ததை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை - என்றார்.

## நடுவர்களுக்கு சார்பாக ஐ.சி.சி

நடப்பு உலகக் கிண்ணத்தில் மேற்கிந்தியத்தீவுகள் - ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டியில் நடுவர்கள் திரும்பத் திரும்ப மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிராக தவறான தீர்ப்புக்களை வழங்கினர்.
இதனால் களநடுவர்கள் இருவரும் பல்வேறு தரப்பினரின் விமர்சனங்களுக்கு உள்ளானார்கள். மேற்கிந்தியத்தீவுகளின் அணித் தலைவர் ஹோல்டரும், அந்த அணியின் வீரர் பிரித் வைட்டும் போட்டி முடிவின் பின்னர் வெளிப்படையாகக் குற்றஞ் சுமத்தியிருந்தனர். இதனை உலகக் கிண்ணத்தில் வர்ணனையாளராக இருக்கும் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் முன்னாள் வீரரான மைக்கேல் ஹோல்டிங், "நான் மிகவும் வருந்துகிறேன். ஆனால், இந்த போட்டியில் நடுவர்களின் முடிவுகள் கொடூரமாக இருந்தன" - என்றார்.
இந்த நிலையில் வர்ணனையாளர்கள் மிகவும் கடினமான பணியைச் செய்யும் நடுவர்கள் குறித்து பாராட்டவில்லை என்றாலும், விமர்சனங்கள் நியாயமானதாக இருக்கட்டும் என்று பன்னாட்டுக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.




## நடுவர்கள் மீது ஐ.சி.சி நடவடிக்கை எடுக்க வேண்டும்- நடிகர் தனுஷ்

நடப்பு உலகக் கிண்ணப் போட்டியில் கடந்த வெள்ளிக்கிழமை மேற்கிந்தியத்தீவுகள் - ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டியில் நடுவர்கள் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிராக பல்வேறு தீர்ப்புக்களை வழங்கினர் என்று பல்வேறு தரப்பினரால் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டது. ஒருமுறை, இருமுறை தவறாக தீர்ப்பளித்தால் பரவாயில்லை. ஆனால் ஒரு அணிக்கு எதிராக திரும்பத் திரும்ப தவறிழைப்பது அதனை விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் எனவும் கேள்விகள் எழுந்துள்ளன.
இது குறித்து நடிகர் தனுஷ் தெரிவிக்கையில்;
மேற்கிந்தியத்தீவுகள் அணி எந்தக் காரணம் கொண்டும் வெற்றிபெறவே கூடாது என்று நினைத்த நடுவர், மகிழ்ச்சியாக இருப்பார் என நினைக்கிறேன். வாழ்த்துக்கள் நடுவரே... நன்றாக ஆடினீர்கள் மே.இ.தீவுகள் அணியினரே! மோசமான களநடுவர்கள். ஒருதலைப்பட்சமும் கூட. இதை பன்னாட்டு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை விசாரிக்க வேண்டும் - என்றார்.

வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
இப்பொழுது!!!
மிக குறைந்த கட்டணத்தில்
UK - 350/-
France, Germany, Italy, Denmark } 500/=
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S. Road, Jaffna. 0777 554 528

SAAMSON இன் மூன்றுமாத வார, வார இறுதி
இலவச ஆங்கிலப்பயிற்சிநெறி
தொழில்புரிவோர், இளைஞர், யுவதிகள் மற்றும் 14 வயதிற்கு மேற்பட்ட எவரும் மூன்றுமாத இலவச ஆங்கிலப்பயிற்சியில் இணையமுடியும்
சனி, ஞாயிறு பிரிவுகள்: 1.காலை 10.00 2.மதியம் 12.00 3.பி.ப 02.00
உடனடியாக முன்பதிவு செய்யுங்கள்
செவ் & வியாழன் பிரிவுகள்: 1.காலை 08.30 2.காலை 10.30 3.மதியம் 12.30
இவ்வாரத்துடன் அனுமதி நிறுத்தப்படும்! ஒருபிரிவில் 20பேர் மட்டும்
SAAMSON Experts in English Training
403, வெலிங்டன் சந்தி, சன்மார்க்க மகா வித்தியாலயம் முன்பாக யாழ்நகர்,
077 621 4567
021 222 4282

ராசி அதிர்ஷ்டம்
திகதி 09.06.2019 | வெற்றி வாரம் 2535 | வர்ணம் ஊதா
கடகம்
வெற்றி இலக்கங்கள் 16 20 30 37
செவ்வாய் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,000,000 /=
11.06.2019 ம் திகதி செவ்வாய்க் கிழமை சிகப்பு நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk


அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 634
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.06.09
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 58,554,175/-
வெற்றி இலக்கங்கள் 02 03 22 58 H
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 984
சீட்டிழுப்பு திகதி 2019.06.08 சனிக்கிழமை
Z 04 33 71 73
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 452 சீட்டிழுப்பு திகதி: 2019.06.07
வர்ணம்: செம்மஞ்சள் வெள்ளிக்கிழமை
B 24 32 60 80
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
பச்சை, இளஞ்சிவப்பு, செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் முறையே ஞாயிற்றுக்கிழமை, செவ்வாய்க்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வடஇந்திய பத்திரிநாத் கேதார்நாத் கங்கோத்திரி ஜமுனோத்திரி யாத்திரை
நாள்கள் : 16 ஆரம்பம் : 16.07.2019 யாத்திரீகர் : 20
செல்லுமிடங்கள் சுருக்கமாக :
டெல்லி, ஆக்ரா, தாஜ்மகால், ரிஷிகேஸ், சிவானந்த ஆச்சிரமம், தொங்குபாலம், ராமர்கோயில், லக்சுமணர் கோயில், ஹரித்துவார், கங்காபூசை, மானுசாதேவி, மந்திர் சண்டிதேவிமந்தி இவை இரண்டு ஆலயங்களும், தொங்கு ஊஞ்சல்(விஞ்சில்) பயணம், கங்கோத்தி, அம்மன் ஆலயம், ஜமுனோத்திரி, அம்மன் ஆலயம்,பத்திரிநாத் 108 வைஸ்ணவ ஆலயங்களில் முதன்மையான ஆலயம், மானா, சரஸ்வதி நதி உற்பத்தியாகும் இடம், கேதாநாத் திருக்கயில-ாயமலைக்கு சமமான ஆலயம், வேறு இடங்களும் காணலாம், சென்னையில் ஒரு நாள் சொப்பிங்
NB கேதார் நாத் கெலிக்கொப்ரர் பயணம்.
தங்களிடம் பெற்றுக் கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை
4விமானரிக்கட், இந்தியாவில் சுற்றிப்பார்க்க A.C வாகன வசதி, மடப்பள்ளி ஆள்கள் மூலம் உடனுக்குடன் சமைத்த மூன்று வேளை உணவு, காப்பி, ரீ, மினரல்வாட்டர் (குடிநீர்) 2பேருக்கு கட்டில், மெத்தை, வெஸ்ரன் கொமட் குளியலறை, இணைந்த அறைக்ள் இவை அனைத்தும் எமது சேவை. விருப்பமுடையவர்கள் விபரத்தை கேட்டறிந்து பதிவு செய்யவும்.
வந்தவர்களைக் கேளுங்கள் சென்றுவரலாம் வாருங்கள்.
விபரங்களுக்கு : கலாநிதி. T.ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்
59, 3/6, செட்டியார் தெரு, கொழும்பு - 11
sriranganathan2601@gmail.com
f sridevisriranganathan.thuraiappa
077 768 0102/ 077 736 2154
(N 10331) (14.17)

# பிரென்ஞ் தொடரில் பார்டி சம்பியன்



பன்னாட்டு அந்தஸ்துபெற்ற ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான பிரென்ஞ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் ஆஸ்திரேலிய வீராங்கனை ஆஷ்லி பார்டி கிண்ணம் வென்றார். இந்தக் கிண்ணத்தை ஆஸ்திரேலியர் ஒருவர் வெல்வது 46 ஆண்டுகளுக்குப் பின்னர் இதுவே முதல் தடவை.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் பார்டியை எதிர்த்து செக்குடியரசைச் சேர்ந்த மார்கெட்டா மோதினார்.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 6:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் பார்டி. இதனால் இரண்டாவது செற்றை தனதாக்க வேண்டிய இக்கட்டான நிலை மார்கெட்டாவுக்கு ஏற்பட்டது. எனினும் பார்டி கணிசமான ஆதிக்கம் செலுத்தினார். இரண்டாவது செற்றும் 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் பார்டியின் வசமாக முடிவில் அவர் 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றார்.

23 வயதான ஆஷ்லி பார்டி 2014ஆம் ஆண்டில் ரென்னிசில் இருந்து விலகி கிரிக்கெட் வீராங்கனையாக உருவெடுத்தார். பெண்களுக்கான பிக்பாஷ் 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் பிரிஸ்பேன் ஹீட் அணிக்காக விளையாடிய அவர் 2016ஆம் ஆண்டில் மறுபடியும் ரென்னிஸ் களம் புகுந்து இப்போது சிகரத்தை எட்டியிருக்கிறார்.

(ம)

# றொனால்டோ இல்லாத மட்ரிட் பலவீனமானது!

## மெஸ்ஸி வெளிப்படைப் பேச்சு

றொனால்டோ இல்லாத நிலையில் ரியல் மட்ரிட் அணி மிகவும் பலவீனமானது என்று தெரிவித்தார் ரியல் மட்ரிட்டின் பரம எதிரி என்று கருதப்படும் பார்சிலோனா அணியின் தலைவர் மெஸ்ஸி.

ஊதிய ஒப்பந்தப் பிரச்சினை காரணமாக ரியல் மட்ரிட் கழகத்தில் இருந்து பிரிந்து சென்று இத்தாலியின் ஜூவென்டாஸ் கழகத்துக்காக ஒப்பந்தமானார் றொனால்டோ. றொனால்டோ வெளியேறியுள்ள நிலையில் அவர் இல்லாத மட்ரிட் அணி தொடர்பில் பலரும் பல்வேறு விதமான கருத்துக்களைப் பகிர்ந்து வருகின்றனர். இந்த நிலையில் இவ்வாறு தெரிவித்தார் மெஸ்ஸி.

சிறந்த வீரர்களைக் கொண்ட ரியல் மட்ரிட் அணி உலகின் தலைசிறந்த அணிகளில் ஒன்றாக திகழ்ந்து வருகிறது. ஆனால், றொனால்டோ இல்லாத ரியல் மட்ரிட் சற்றுத் தரம் குறைந்த அணியாக இருப்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது என்று மெஸ்ஸி மேலும் தெரிவித்தார்.

றொனால்டோ வெளியேறியதை அடுத்து ரியல் மட்ரிட் அணி தொடர்ந்து பல தோல்விகளைச் சந்தித்தது. இதனால் அந்த அணியைப் மறுகட்டமைப்புச் செய்யும் நடவடிக்கையில் தற்போது ரியல் மட்ரிட் நிர்வாகம் ஈடுபட்டுள்ளது. (ம)




வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.06.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.